பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00 ★

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 29 செவ்வாய்க்கிழமை (15.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 354



09

நோர்வே பாவமன்னிப்பு கோருவது நியாயமா?



14

அதிகாரத்தை அனைவருமே சிந்திக்க வேண்டும்



21

போராட்டக் குழுவை மிரட்டுகிறது மத்திய அரசு

## பரந்தனில் தனியார் பஸ் சாரதி, நடத்துநர் மீது இராணுவத்தினர் காட்டுமிராண்டித் தாக்குதல்

### அங்கு நின்ற பயணிகள், பொதுமக்கள் கொதிப்பு, பதற்றம்

கிளிநொச்சி, நவ. 15

பரந்தன் சந்தியில் நேற்று முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ்ஸும் தென்பகுதி பஸ் ஒன்றும் சிறு விபத்துக்குள்ளாகின. அதை அடுத்து இரு தரப்பினரிடையேயும் தர்க்கம் ஏற்பட்டு பின்னர் சமாதானமாகி விட்டனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட அந்த இடத்துக்கு வந்த சுமார் 10 இராணுவத்தினர் முல்லைத்தீவு - யாழ். பஸ்ஸின் சாரதி, நடத்துநர், உரிமையாளர் மூவரையும் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கி உள்ளனர்.

சப்பாத்துக்காலால் உதைத்து தாக்கி உள்ளனர். எதுவித கேள்வியோ, விசாரணையோ இன்றி அடாவடித்தனமாக

பக் 27



## தனிமைப் படக்கூடிய அபாயத்தில் இலங்கை

### 'விக்கிலீக்ஸ்' தகவல்

கொழும்பு, நவ.15

உலக நாடுகளிலிருந்து இலங்கை தனிமைப்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்னீஸ் தெரிவித்திருந்தார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல், மனித உரிமைகளை மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு என அவர் தெரிவித்துள்ளார்.

பக் 28

# நோர்வே வெளியிட்ட அறிக்கைக்கு இராஜதந்திர ரீதியில் கடும் எதிர்ப்பு

### சில தினங்களில் அரசு தெரிவிக்கும்

கொழும்பு, நவம்பர் 15

விடுதலைப் புலிகளுடனான அமைதி முயற்சிகள் தோல்வியடைந்தமை தொடர்பாக நோர்யால் வெளியிடப்பட்டிருக்கும் கருத்துக்கு இலங்கை அரசு இராஜதந்திர ரீதியிலான அதிருப்தியை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இலங்கை அமைதி முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு அரசும், புலிகள் இயக்கமும் பொறுப்பேற்க வேண்டுமெனக் கடந்த வாரம் நோர்வேயின் அரச சார்பற்ற அமைப்பு ஒன்று தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது. அத்துடன், இது தொடர்பாக பல விமர்சனங்களையும் அது முன்வைத்திருந்தது.

இந்நிலையில், மேற்படி விமர்சனங்கள் இறைமையுள்ள அரசு ஒன்றின் நற்பெயருக்கு சர்வதேச ரீதியில் களங்கத்தை ஏற்படுத்துமென அரசு கருதுவதாக மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் இந்த விமர்சனங்கள் குறித்து நோர்வே அரசுக்கும் மேற்படி ஆய்வை நடத்திய நோறாட் அமைப்புக்கும் இராஜதந்திர ரீதியிலான அதிருப்தியை வெளியிட அரசு தீர்

பக் 27

## தனியார் பஸ் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, நவ.15

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் யாழ். மாவட்டம் அடங்கலாக நாடு முழுவதும் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் இறுதிநேரத்தில் கைவிடப்பட்டுள்ளது.

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பாக ஒரு மாதகாலத்திற்குள் பதிலளிக்கப்படும் என தனியார் போக்குவரத்து அமைச்சர் நேற்று வழங்கிய உறுதிமொழியை அடுத்து, மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது எனத்

பக் 27

## பல்கலைக்கழக வளாகங்களுக்குள் விரைவில் பொலிஸ் காவலரண்கள்

### அமைச்சர் எஸ்.பி. திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 15

நாட்டில் பல்கலைக்கழகங்களின் வளாகங்களுக்குள் பொலிஸ்காவலரண்ங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் வளாகங்களினுள் மாணவர்களிடையே மோதல்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் இந்தப் பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

'பல்கலைக்கழக காவல் நிலையங்கள்' என்ற பெயரில் இந்த காவல் நிலையங்கள் இயங்கவுள்ளன. இந்த நிலையங்களில் ஆண், பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக

பக் 27

## இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் 17 இல் குருநகரில் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

இலங்கையில் இரண்டார்வது சிறுவர் நீதிமன்றம் யாழ்ப்பாணம், குருநகரில் நாளை மறுதினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்படும். பிரதம நீதியரசர் கலாநிதி திருமதி ஷிராணி பண்டாரநாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இந்தச் சிறுவர் நீதிமன்றைத் திறந்து

பக் 28

## சுமங்கலி விடுதியில் கைதான 8 பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். நகர், ஷப்பல் வீதியில் அமைந்துள்ள சுமங்கலி விடுதியில் பாலியல் தொடர்பான குற்றச்செயல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட மூன்று சோடிகளையும் விடுதி முகாமையாளர் மற்றும் பணியாளரையும் இரு வாரங்கள் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

விடுதியில் நடத்திய சோதனையின் போது கைது செய்யப்பட்டவர்களில் இந்த 8 பேரையும் பொலிஸார் நேற்று யாழ். மாவட்ட நீதி

பக் 27

### யுத்தத்தினால் சேதமடைந்த

## இந்து ஆலயங்களுக்கு நிதி வழங்க வருகிறார் பிரதமர்

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இந்து ஆலயங்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகப் பிரதமரும் பௌத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமான தி.மு.ஜயரத்ன எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

கடந்த மாதம் இந்தக் காசோலை வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற

பக் 28

## இலங்கை அரசாங்கத்தினால் மட்டுமே இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

### இந்திய ராஜதந்திரி ஷியாம் ஷரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.15

இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டு பிரச்சினை. அது இலங்கை அரசாங்கத்தால் மட்டுமே தீர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்திய வெளி விவகார செயலாளராகவும் பர்மா, இந்தோனேஷியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இந்தியத் தூதுவராகவும் முன்னர் கடமையாற்றியவருமான ஷியாம் ஷரன்.

நேற்று முற்பகல் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், ''அண்டை நாடுகளுடனான இந்தியக் கொள்கை'' என்ற தலைப்பில் உரையாற்றும் போதே ஷியாம் ஷரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இரு பகுதியினரும் திறந்த மனதுடன் பேசி அதற்குத் தீர்வுகாண வேண்டும். தமிழர்களின் நலன்களில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது. இதன் காரணமாக வடக்கு,

பக் 28

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/படங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிற மாவட்டங்களில் இடி, மின்னல் நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# கைதடி சிறுவர் இல்லம் தற்காலிகமாக கோண்டாவில் வைத்தியசாலைக்கு மாற்றம்

## நேரடியாகப் பார்வையிட்டு சாவகச்சேரி நீதிவான் உத்தரவு

தென்மராட்சி, நவ.15

கைதடி அரச சிறுவர் இல்லத்தின் வசதியீனங்களைக் கவனத்தில் கொண்டு அதனை கோண்டாவில் பிரதேச வைத்தியசாலைக்கு தற்காலிகமாக மாற்றுமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

இந்தச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தை ஒன்று இந்த மாதம் 5 ஆம் திகதி உயிரிழந்தது. அதற்கு முன்னர் ஒக்ரோபர் மாதத்தின் இறுதி வாரத்தில் பிறந்து 53 நாளேயான குழந்தையும் உயிரிழந்தது.

இந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சிறுவர் இல்லத்தில் உள்ள பல்வேறு குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிட்டு இந்த விடயத்தை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கை நேற்றைய தினம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து நீதிவான் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருடன் கைதடி அரச சிறுவர் இல்லத்தை நேரடியாகப் பார்வையிட்டார். அதன் பின்னர் கைதடி சிறுவர் இல்லத்தை தற்காலிகமாக கோண்டாவில் பிரதேச வைத்திய சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த சிறுவர் இல்லத்தில் இலையான் பெருக்கம், கழிவு நீர்த்தேக்கம், குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்படும் சூப்பி போத்தல் மற்றும் உடைகள் பாவனைக் கிணற்றில் உள்ள குடிதண்ணீரில் சுத்தம் பேணப்படாமை, இல்லத்தில் உள்ள மின்பிறப்பாக்கியிலிருந்து வரும் புகையினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு, ஆளணிப் பற்றாக்குறை காரணமாக குழந்தைகள் சரியாகக் கவனிக்கப்படாமை, இல்லத் தாய்மார்களுக்கு போதிய பயிற்சியின்மை போன்ற குறைபாடுகள் காணப்படுவதாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றை நேரடியாகச் சென்று அவதானித்த நீதிவான் மேற்படி உத்தரவை வழங்கினார். (ஒ-15-207)

# கடத்தப்பட்ட வர்த்தகர் களனியில் விடுவிப்பு

கொழும்பு,நவ.15

மிரிஹான பகுதியில் வைத்து கடத்தப்பட்ட புத்தகக்கடை உரிமையாளரான ஈ.எம்.துஸார சமிந்த பண்டார களனியில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தகர் கண், வாய், கைகள் கட்டப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 9.20 மணி அளவில் களனி முல்லைப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் விட்டுச் செல்லப்பட்டுள்ளார்.

பின்னர் குறித்த வர்த்தகரை மிரிஹான பொலிஸார் மீட்டு வாக்குமூலம் பெற்றுக் கொண்டதோடு அவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(சி)

# ஜனாதிபதியின் பிறந்த நாளுக்காக யாழ்ப்பாணத்திலும் மரம் நடுகை

யாழ்ப்பாணம், நவ.15

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினத்தை முன்னிட்டு இன்று நாடளாவிய ரீதியில் தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இந்த நிகழ்வு பழைய பூங்காவில் இன்று காலை 8.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் மாவட்ட செயலகமும், வடமாகாண சபையும் இணைந்து பழைய பூங்காவில் இந்த நிகழ்வினை ஒழுங்கு செய்துள்ளன. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மரம் நடும் நடவடிக்கைகாக பனை அபிவிருத்திச் சபையினால் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு தலா 50 பனம் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. வன பரிபாலனத் திணைக்களத்தினால் வேம்பு, புளியமரம் உட்பட ஏனைய பயனுள்ள மரங்களும் வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

இதேவேளை இந்த வேலைத் திட்டம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பதினொரு லட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-15-86)

# குற்றச் செயல்களுக்குத் துணைபோகும் விடுதிகளின் அனுமதிப்பத்திரம் ரத்தாகும்

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,நவ.15

பாலியல் குற்றச்செயல்களுக்கு துணைபோகின்ற விடுதிகளின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதிகள் மீது தொடர்ந்தும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். அரச அதிபருக்கும், யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவுக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின்பு கருத்துத் தெரிவிக்கும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

### கைதான மாணவர்கள் தொடர்ந்து விசாரணை

யாழ். குடாநாட்டில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள்களை பயன்படுத்துவது முற்றாகத் தடுக்கப்பட வேண்டும். இதற்காக பொலிஸார் மேற்கொண்ட முயற்சியின் மூலம் பாடசாலை மாணவர்கள் நால்வரும், விற்பனை முகவர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் பாலியல் ரீதியான குற்றச் செயல்களுக்குத் துணைபோகும் சகல தங்குமிடங்கள் (லொட்ஜ்), விடுதிகள் என்பவற்றின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொலிஸார் தமக்குக் கிடைத்துள்ள முறைப்பாட்டின் படி தொடர்ந்து இவ்வாறு செயற்படும் விடுதிகளை சுற்றிவளைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்படும் தங்குமிடம், விடுதிகள் என்பவற்றின் அனுமதிப் பத்திரங்களை உடனடியாக இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ஒ-15)

# முன்னாள் எம்.பி. சிவதாசனின் இறுதிக்கிரியைகள் நாளை

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கரப்பிள்ளை சிவதாசன் நேற்றுமுன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை முதல் நாளை நண்பகல் வரை அன்னாரின் பூதவுடல் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். நகர் தலைமை அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் என்றும் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு அங்கிருந்து பூதவுடல் மாவிட்டபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நகுலேஸ்வரம் செம்பொன் வாய்க்காலில் தகனம் செய்யப்படும் என்றும் அக்கட்சி வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். பாடசாலைகள் மீதான ஆளுநரின் பிடி இறுகுகிறது

யாழ்ப்பாணம், நவ.15

பாடசாலைகளில் இடம்பெறும் எந்தவொரு நிகழ்வுகளுக்கும் மாணவர்களுக்கு தவறான கருத்துக்களை ஊட்டும் விருந்தினர்களை அழைப்பது தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் பாடசாலைகளுக்கு வெளியிடங்களிலிருந்து கிடைக்கப் பெறும் நிதி தொடர்பான தகவல் எனக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கண்டிப்பான உத்தரவை விடுத்துள்ளார்.

யாழ்.கல்விவலயவளாகத்தினுள் அமைக்கப்பட்ட கல்வியமைச்சின் நிர்வாகக் கிளை அலுவலகத்தை உத்தியோக பூர்வமாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி திறந்து வைத்தார். தொடர்ந்து கல்வியமைச்சின் உயர் அலுவலர்கள், மாகாண கல்வித்திணைக்கள உயர் அலுவலர்களுடன் அவர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இதன் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். (த-15)

# தங்குமிட விடுதிகளை உடன் பதிவு செய்க

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள தங்குமிட விடுதிகள்(லொட்ஜ்) சார்பான விடயங்களை உடனடியாக மாநகர சபையின் சுகாதார அதிகாரி பணிமனையில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனங்கள் அமைந்துள்ள இடம், நடத்துபவர், முகவரி என்பவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் தவறின் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஒ-10)

# நிகழ்வுகள் இன்று

**ஒருங்கிணைப்புக் கூட்டம்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ம-313)

**கருத்தரங்கு**

இதம் உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளர்களுக்கான கருத்தரங்கு காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 15 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளர்கள் கலந்து கொள்ளலாம். (ம-121)

* * *

தேசிய இளைஞர் சேவைகள்மன்ற நிஸ்கோ பிரிவின் செபி திட்டத்தின் கீழ் சுயதொழில் கடன் வழங்குதலுக்கான ஆரம்பவிழா காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பலநோக்கு சங்க மண்டபத்தில் யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-319)

**செயலமர்வு**

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதியர்களுக்கான ஐந்தாண்டுகளுக்கான அபி விருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு காலை 8.30 மணிக்கு இணுவில் மத்தியகல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**சிறுவர் தினம்**

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா பிற்பகல் 2 மணிக்கு தாளையடி றோ.க.த பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-313)

# கடற் பாதுகாப்புக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு தேவை; பிராந்தியத்தில் ஆதரவு இருந்தால் வலுவாகச் செயற்படலாம்

## பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய நேற்று காலியில் அறிவிப்பு

கொழும்பு, நவ.15

கடற்பாதுகாப்பை அதிகரிப்பதற்கு சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து போதுமான அளவு நடவடிக்கை எடுக்காததால் இந்து சமுத்திரத்தை ஊடறுத்துச் செல்லும் கப்பல்களுக்கு மாத்திரமின்றி, கரையோர நாடுகள் அனைத்துக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

காலியில் நேற்று சமுத்திர பாதுகாப்புத் தொடர்பான மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பில் அக்கறை கொண்ட நாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் 'காலி பேச்சு' என்ற இந்த மாநாடு 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

'இந்து சமுத்திர அக்கறைக்கான சவால்கள் மற்றும் தந்திரபாய ஒத்துழைப்பு' என்ற தலைப்பில் இந்த வருட மாநாடு ஆரம்பமாகியுள்ளது.

இந்துசமுத்திரம் உலகின் மூன்றாவது மிகப்பெரிய சமுத்திரமாக உள்ளது. 30 இற்கும் மேற்பட்ட நாடுகளை இது எல்லையாகக் கொண்டுள்ளது.

இச்சமுத்திரம் எரிபொருள்கள், தாதுப்பொருள்கள் மற்றும் உயிரியல் வளங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சுமார் 60 ஆயிரம் கப்பல்கள் இந்துசமுத்திரத்தில் பயணம் செய்கின்றன. இவற்றுள் அரைவாசி சரக்குக் கப்பல்களாகும்.

பல நாடுகளின் எரிபொருட்களின் தேவை இந்து சமுத்திரத்தின் ஊடாகச் செல்லும் கப்பல்கள் மூலம்தான் ஈடு செய்யப்படுகின்றது. இதனால், பல நாடுகளின் சக்தி பாதுகாப்பு இந்து சமுத்திரத்தில்தான் தங்கியுள்ளது.

இதன் காரணமாக இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவம் பெரிதாகப்படுகின்றது. இச்சமுத்திரம் சந்தித்துள்ள வெளி அச்சுறுத்தல்களை இல்லாதொழிக்க சமுத்திரப் பாதுகாப்பு அவசியமாகின்றது.

குறிப்பாக, கடந்த சகாப்தமாக சோமாலிய கடற்பகுதியில் தோன்றியுள்ள கடற்கொள்ளை பெரும் அச்சுறுத்தலாகவுள்ளது. இந்தக் கொள்ளை நடவடிக்கை சோமாலிய கடற்பரப்புக்கு அப்பால் பயணிக்கும் கப்பல்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்துள்ளது. அண்மையில் மாலைதீவுக் கடற்பரப்பில் 30 இற்கும் மேற்பட்ட சோமாலியக் கடற்கொள்ளையர்கள் கைதுசெய்யப்பட்டமை இந்த அச்சுறுத்தலை உண்மைப்படுத்துகின்றது.

கடற்கொள்ளையில் ஈடுபடவிருந்தார்கள் என்று சந்தேகிக்கப்பட்ட சோமாலியர்கள் சிலரை இலங்கைக் கடற்படையும் அண்மையில் கைதுசெய்தது.

கடற்கொள்ளை துரிதமாக எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுகின்றமை இதன்மூலம் தெளிவாகின்றது. கொள்ளையர்களின் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்கொள்ளையிலிருந்து கப்பல்களைப் பாதுகாப்பதற்காக வருடந்தோறும் 1,000 கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன. தற்போதுள்ள சர்வதேச சமுத்திர சட்டங்களும் நடைமுறைகளும் கடற்கொள்ளையை முறியடிக்கப் போதாதுள்ளன என்பது தெளிவாகின்றது.

வர்த்தகக் கப்பல்கள் ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்கு சம்பிரதாய ரீதியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவீனமாகவே உள்ளன.

இந்த மோசமான நிலைமையைச் சமாளிப்பதற்காக வர்த்தகக் கப்பல்களில் தனியார் பாதுகாப்பு ஊழியர்கள் பாதுகாப்பு வழங்கிப் பயணிப்பதற்கு அனுமதிக்கக் கூடியவாறு அமெரிக்கா போன்ற நாடுகள் சமுத்திர சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளன. இலங்கை கூட இவ்வாறான பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்றது.

சில நாடுகள் தங்கள் நாட்டின் வர்த்தக கப்பல்களைப் பாதுகாப்பதற்காக அந்தக் கப்பல்களில் அவர்களின் இராணுவத்தினரை அனுப்புவதற்கு விருப்பம் தெரிவிக்கின்றன. இலங்கைக் கடற்பரப்பின் ஊடாகச் செல்லும்போது இலங்கையின் அனுமதியையும் கோரியுள்ளன.

கப்பல் உரிமையாளர்களால் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பயனுடையதாக இல்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாடுகள் தனித்தனியாக நடவடிக்கை எடுக்காது ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே வெற்றியடைய முடியும் என்று நாம் நம்புகிறோம்.

சோமாலிய கடற்கொள்ளையைத் தடுப்பதற்கு சர்வதேச செயலணியின் ஊடாக எடுக்கப்பட்ட பலதரப்பட்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவையாகும். இருப்பினும், இது போதாது.

நாம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல் சோமாலியக் கடற்கொள்ளை மாத்திரம் அல்ல, இன்னும் அதிகம் உள்ளன.

சர்வதேசத்தில் பாரிய ஒத்துழைப்பின் ஊடாகவே இந்தச் சிக்கல்கள் அனைத்தையும் தீர்க்க முடியும்.

கடற்பாதுகாப்பை அதிகரிப்பதற்கான சர்வதேசத்தின் குறைவான ஒத்துழைப்பு சமுத்திரத்தில் பயணிக்கும் கப்பல்களை மாத்திரமின்றி கரையோர நாடுகளின் பாதுகாப்பையும் பாதிக்கும்.

போதைப் பொருள் கடத்தல் நாம் எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினையாகும். பயங்கரவாதிக்கும்,-பலதரப்பட்ட குற்றவாளிக்கும் இதன் மூலம் அதிக இலாபம் அடைகின்றனர்.

நாம் எதிர்நோக்கும் அடுத்த பிரச்சினை கடல் மாசுபடுதல். தொழிற்சாலைக் கழிவுகள் கடலில் கலப்பதாலும் ஏனைய செயற்பாடுகளாலும் கடல் மாசடைகின்றது.

இந்த எல்லாவிதமான அச்சுறுத்தல்களையும் இல்லாது செய்ய சர்வதேச நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

பிராந்தியத்தில் உள்ள கடற்படை சக்திகள் கடற்பாதுகாப்புக்கு போதுமான ஒத்துழைப்பை வழங்கினால் இலங்கையும் இதில் முக்கிய பங்கு வகிக்கும் - என்றார்.

# கடற்படை கடத்திய தமிழ் மாணவர்களை கண்டுபிடிக்க ஆட்கொணர்வு மனுக்கள்

## பெற்றோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் கல்வி கற்பதற்காக நாட்டை விட்டுச் செல்லாதிருந்த மாணவரும் ஏனைய ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்கள் இருவரும் கடத்தப்பட்டு, கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாணவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கோரி அவர்களின் பெற்றோர்கள் தனித்தனியாக 3 ஆள்கொணர்வு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தனர்.

திருமதி சரோஜா நாகநாதன் தனது மகன் ரஜீவ் நாகநாதனையும் ஜி.விஸ்வநாதன் தனது மகன் பிரதீப்பையும் திருமதி காவேரி ராமலிங்கம் தனது மகன் திலகேஸ்வரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கோரி இம்மனுக்களை தாக்கல் செய்தனர். இவர்கள் அனைவரும் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த மாணவர்கள் திருமலை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தாம் நம்புகின்றனர் எனவும் அவர்களின் பெற்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா ஊடாகத் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுக்களில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டி.டபிள்யூ.ஏ.எஸ். திசாநாயக்க, பொலிஸ்மா அதிபர் இலங்ககோன், சட்டமா அதிபர் ஈவா வனசுந்தர ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் ரஜீவ் நாகநாதன் அனுமதிப் பெற்றதையடுத்து அவரின் தந்தை 2008 செப்டெம்பர் 17ஆம் திகதி தனது இல்லத்தில் விருந்தொன்றை ஏற்பாடுசெய்தார் எனவும் ரஜீவின் நண்பர்களான திலகேஸ்வரன், பிரதீப், டிலான் மொஹமட் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின் வெளியே சென்ற மேற்குறிப்பிட்ட ரஜீவ், திலகேஸ்வரன், பிரதீப் மூவரும் மறுநாள் 18 ஆம் திகதிவரை வீடுதிரும்பவில்லை எனவும் இதனால் அவர்களின் பெற்றோர்கள் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

2009 ஜனவரி மாதம் ரஜீவின் தந்தையை தொலைபேசியில் அழைத்த நபர் தன்னை சந்திம என அடையாளப்படுத்திக் கொண்டு, ரஜீவும் அவரின் நண்பர்களும் மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களை விடுவிப்பதற்கு 25 லட்சம் ரூபா வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

2009 பெப்ரவரியில் நந்தகுமார் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட ஒருவர் தொலைபேசியில் அழைத்து இம்மாணவர்கள் மட்டக்களப்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறியுள்ளார்.

இந்த மாணவர்கள் ஆரம்பத்தில் கொழும்பு சைத்திய வீதியிலுள்ளது என நம்பப்படும் வீடொன்றில் தடுத்துவைக்கப்பட்டனர் எனவும் பின்னர் திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு மாற்றப்பட்டனர் எனவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டமைக்கும் தடுத்து வைக்கப்பட்டமைக்கும் காரணம் கூறப்படவில்லை எனவும் அவர்கள் கடற்படைச் சட்டத்தின் கீழ் கையாளப்படவோ கடற்படையினால் தடுத்துவைக்கப்படவோ வேண்டியவர்கள் அல்லர் எனவும் மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

# பகிடிவதை என்ற பெயரில் தாக்கப்பட்டு காயமுற்ற யாழ். பல்கலை மாணவன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன் பகிடிவதை என்ற பேரில் தாக்கப்பட்டு யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த துரைராஜா தமிழ்செல்வன் (வயது 20) என்ற மாணவனே சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டு தலையில் பலத்த காயங்களுடன் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது ,

நேற்று மதியம் கைலாசபதி கலையரங்கில் புகுமுக மாணவர்களுடன் சிரேஷ்ட மாணவர்கள் உறவினை ஏற்படுத்திக் கொள்வதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, குறித்த அரங்கத்திற்கு நுழைந்த சில மாணவர்களுடன் வந்த சிரேஷ்ட மாணவியொருவர், 'யார் தமிழ்ச் செல்வன்' என வினவியுள்ளார்.

அதன் பின்னர் குறித்த மாணவர் அடையாளங்காணப்பட்டு, சிரேஷ்ட மாணவர்களால், பலர் முன்னிலையில் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார்.இதனால் அவர் படுகாயமடைந்துள்ளார்.

(சி)

# பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு ஜனவரி 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் எனவும் அரசிற்கு எதிராக சதி செய்தார் எனவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது குற்றம் சுமத்தப்பட்டு தொடுக்கப்பட்ட வழக்கே மேற்படி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சரத் பொன்சேகா இவ்வழக்கில் தனது சார்பாக வாதாடுவதற்கு தன்னை நியமித்திருந்தார் என சிரேஷ்ட சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி தெரிவித்தார்.

இவ்வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறும் அவர் கோரினார்.

அரசின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி தமித் தொட்டவத்த இக்கோரிக்கையை ஆட்சேபித்தார்.

எனினும் இறுதியில் மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர இவ்வழக்கை ஜனவரி 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## சேவை நலன் பாராட்டு



யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் 12 வருடங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக மகத்தான சேவையாற்றித் தனது 57 ஆவது வயதில் இன்று (15.11.2011) செவ்வாய்க்கிழமை சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் எம் சிரேஷ்ட ஆசிரியை

திருமதி
**புஸ்பராணி இரவீந்திரநாதன்**

அவர்களின் உன்னத சேவையை மனதாரப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் மன அமைதியும் ஆரோக்கியமும், மகிழ்வும் நிறைந்ததாக அமைய வாழ்த்துகின்றோம்.

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. (10462) (2-6-8)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்.

## அமுத விழா வாழ்த்துக்கள்



திருநெல்வேலி பதக்கு முத்தாரம் பத்த சிறந்த நாடகக் கலைஞர்

**திரு. குழந்தை ம.சண்முகலிங்கம்**

திருநெல்வேலி கலா மன்றத்தில் திரு.ஆ.மகேஸ்வரன் அவர்களின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட (1) மோகினித்தீவு (2) அலையும் நெஞ்சம் (3) மந்தரையின் சூழ்ச்சி ஆகிய நாடகங்களுக்குத் தனது ஆற்றல்களையும், அனுசரணைகளையும் தந்து வெற்றி பெற உதவியாக இருந்து செயல்பட்ட

**திரு. குழந்தை ம.சண்முகலிங்கம்** அவர்களின் அமுதவிழா (15.11.2011) நன்னாளில் அவரின் மனைவி திருமதி ம.சொர்ணாம்பிகை, பிள்ளைகள் திருமதி சு.குந்தவி, திரு.ம.குருபரன், திருமதி கு.குமுதினி, திருமதி அ.பவதாரணி ஆகியோருடன் இன்புற்று சகல ஐஸ்வரியங்களுடனும் வாழ திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம் இதய வாஞ்சையுடன் வாழ்த்துகின்றது.

(793) (2-6-7) **திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம்.**

## சிறைக்காவலர் சீருடையுடன் சுற்றித் திரிந்த பெண் கைது

கொழும்பு, நவ.15

அநுராதபுரத்தில் சிறைச்சாலைக் காவலரின் சீருடையை அணிந்து கொண்டு சுற்றித்திரிந்த பெண்ணொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் பிரதம நீதிவான் செல்வி. தர்ஷிகா விமலசிறி உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் புதிய பஸ் நிலையத்தில் சுற்றித்திரிந்த இவரை பஸ் நிலைய பொலிஸ் சாவடியில் பணிபுரிந்த பொலிஸார் கைதுசெய்தனர்.

தான் வெலிக்கடைச் சிறைச்சாலையில் பணிபுரிகிறார் என்று தெரிவித்துள்ளார்.

சுமார் ஒருவார காலமாக சீருடையுடன் அநுராதபுரத்தில் சுற்றித்திரிந்த இந்தப்பெண் இவ்வாறு சுற்றித்திரிந்ததற்கான காரணம் என்னவென தெரிந்து கொள்வதற்கான விசாரணைகள் நடைபெறுகின்றன எனப் பொலிஸார் நீதி மன்றத்தில் தெரிவித்ததையடுத்து அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு BMICH மண்டபத்தில் 07.11.2011 அன்று உயர் கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெற்ற **செல்வன் விநாயகரத்தினம் லிங்கரூபன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்றுயர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10376)(3.6.7) **அண்ணா குடும்பம், அக்கா குடும்பம்**







dimo TECHNOLOGY

www.dimolanka.com

Hot Line: 0772 107719

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரகசியம் பேணப்படாமையின் விளைவு பூமராங்காக வந்து தாக்கினால்....!

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அடுத்த ஞாயிறு வெளியிடப்பட உள்ள நிலையில் அதன் நம்பகத்தன்மையைக் கேள்விக்குறியாக்கும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு முன் எவரும் பயமின்றி சாட்சியம் அளிக்கலாம். சாட்சியம் அளிப்போரின் பெயர், விவரங்கள் குறித்து இரகசியம் பேணப்படும் என்று ஆணைக்குழு தனது விசாரணையை ஆரம்பித்த வேளையில் உறுதி அளித்திருந்தது. எனினும் அந்த உறுதி மொழியை அப்பொழுது பலர் நம்பத் தயாராக இருக்கவில்லை. இதனால் எத்தனையோ சம்பவங்கள் குறித்த தகவல்கள் வெளிவராமல் போயின. தமது சாட்சியம் பற்றிய இரகசியம் கசிந்தால் தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சம் அனேகரிடம் இருந்தது.

எனினும், இந்த விடயத்தில் மௌனம் சாதிக்க முடியாது; என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற தளரா உணர்வுடன் சாட்சியம் அளித்தவர்கள் பலர். அவ்வாறு சாட்சியம் அளித்தவர்களில் ஒருவர்தான் கல்முனையைச் சேர்ந்த இரத்தினம் பூங்கோதை (வயது 45) என்ற பெண்மணி.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி ஆணைக்குழு முன் இவர் சாட்சியம் அளித்திருந்தார். தற்பொழுது கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு விசாரணைக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இரகசியம் பேணப்படும் என்ற உறுதி மொழியுடன் ஆணைக்குழு முன்னால் சாட்சியம் அளித்தவர்களை விசாரணைக்காக நாலாம் மாடிக்கு அழைப்பது நியாயமா? இது முற்றுமுழுதாக ஒரு நம்பிக்கை மோசடியே. இந்தச் செயற்பாடு அரசு மீதான நம்பகத்தன்மையைக் கேள்விக்கு உரியதாக்கியுள்ளது. இவ்வாறானால் எதிர்காலத்தில் இத்தகைய ஆணைக்குழுக்கள் முன் சாட்சியம் அளிக்க மக்கள் எவ்வாறு முன்வர முடியும்? அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்த அனைவரையும், தமக்கும் என்ன நடக்குமோ என்ற பீதியில் இச் சம்பவம் ஆழ்த்திவிட்டுள்ளது. அவர்களுக்கு நாளை என்ன நடக்கும் என்பதை யாரறிவார்?

ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட உள்ள வேளை, சாட்சியம் அளித்தவரின் விவரம் கசிந்தது எப்படி? இதற்கு இன்னும் சரியான விடை இல்லை.

கல்முனையைச் சேர்ந்த பூங்கோதை 2007 ஆம் ஆண்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்பு அதே வருடம் ஆயுதக் குழு ஒன்று அவரைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்தது. 2009 இல் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவேளை, பொலிஸார் கைது செய்து இரண்டு வருடங்கள் தடுத்து வைத்து இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அதே வருடம் ஏப்ரல் மாதம் மூன்று பிள்ளைகளின் தாயாரான இவரது சகோதரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனார். சகோதரியின் கணவர் கொலை செய்யப்பட்டார். இரண்டு சகோதரர்கள் காணாமற் போயினர். சகோதரியும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இவைதான் நல்லிணக்க ஆணைக்குழு முன் பூங்கோதை அளித்த சாட்சியத்தின் உட்பொருள்கள்.

இச்சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்கே பூங்கோதை நாலாம் மாடிக்கு அழைக்கப்பட்டார் என்று நம்பப்படுகிறது.

''நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான், எனக்கு நேர்ந்த அவலங்களை நல்லிணக்க ஆணைக்குழு முன் கொட்டித் தீர்த்தேன். ஆணைக்குழுவிடம் கூறிய விடயங்களை இரகசியப் பொலிஸாரிடம் கூறத் தயங்க மாட்டேன்'' என்று கூறுகிறார் பூங்கோதை.

2002 யுத்த நிறுத்த ஒப்பந்தம் முதல் 2009 மே வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக அரசினால் உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு, சர்வதேச தரத்தைக் கொண்டிருக்கவில்லை என்று சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட மனித உரிமை அமைப்புக்கள் ஏற்கனவே குற்றஞ்சாட்டி இருந்தன. அந்தக் குற்றச்சாட்டுக்களை அரசு நிராகரித்து வந்தது. தற்போது ஆணைக்குழுவின் அறிக்கையும் தயார் செய்யப்பட்டு வெளியாகும் திகதியும் அறிவிக்கப்பட்டுவிட்டது. இத்தகைய நிலையிலேயே பூங்கோதை விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பதிலாக அமைய வேண்டும். ஆனால், அப்படி அமையும் வாய்ப்பு இல்லை என்றே பரவலாகக் கருதப்படுகிறது.

ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து அமெரிக்கா, மேற்குலக நாடுகள் [illegible] மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமைகள் அமைப்புகள் திருப்தி அடையாவிட்டால் இலங்கை மீண்டும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிவரும்.

ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில், இலங்கை அரசு மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் விவாதத்துக்கு எடுக்கப்படவில்லை. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளிவரும் வரை பொறுத்திருக்க முடிவுசெய்யப்பட்டது. அதேவேளை, சர்வதேச தரத்திலான விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்த நாடுகளும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்பார்த்தே காத்திருக்கின்றன. ஆகவே, வெளிவரவிருக்கும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இலங்கை அரசை மேலும் சங்கடத்தில் ஆழ்த்தும் கருவியாக அமையும் எனக்கொள்ளலாம்.

இத்தகைய நிலையில், ஆணைக்குழுவின் இரகசியம் பேணும் தன்மை கேள்விக்கிடமாகி இருப்பது கண்டிக்கத்தக்கது. இந்த வெளிப்பாடு அதன் நம்பகத் தன்மையையும் தரத்தையும் குறைத்துள்ளது. இந்த விவகாரம் 'பூமராங்' போன்று மீண்டும் இலங்கையை நோக்கி வந்து வீரியத்துடன் தாக்கும் என்று கொள்வதில் தப்பில்லையே?

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு விரைவில் 'கல்தா'

## அதற்குப் பிறகே அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, நவ.15

பொதுநிறுவனங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஆய்வுகளுக்கு ஏற்ப நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளை பதவி நீக்கம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக தெரியவருகின்றது.

இத் தெரிவுக் குழுவினால் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக இனங் காணப்பட்டுள்ள 115 அரச நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டதன் பின்னரே உத்தேச அமைச்சரவை மாறுதல்களை செய்வதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருவதற்கு மேலாக சிலவற்றில் ஊழல்கள், அரசின் நிதிக் கொள்கைகளை உதாசீனம் செய்தல், மற்றும் முறைகேடுகள் இடம்பெற்று வருவது தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். இலங்கை மின்சார சபை, தேசிய நீர்வழங்கல் சபை மற்றும் கால்வாய் அமைப்பு சபை, மற்றும் இலங்கை போக்கு வரத்து சபையும் கூட லாபத்தில் இயங்கவில்லை. ஆனால் இவை பொதுமக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருகின்றன என்று அண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தது நினைவுகூரத்தக்கது. (ப)

# சுயதொழில் முயற்சிக் கடன் தொடர்பான கலந்துரையாடல்

வலி-வடக்கு, நவ.15

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் சுயதொழில் முயற்சிக் கடனுக்கு விண்ணப்பித்த இளைஞர், யுவதிகளுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

இன்றைய கலந்துரையாடலில் சுய தொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளவர்களுக்கான தொழில் முயற்சி தொடர்பான ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படுவதுடன் கலந்துரையாடலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் சுமார் 75 க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# தனியார் பஸ் வேலை நிறுத்தத்தை எதிர்கொள்ள மேலதிக பஸ் சேவை

## இ.போ.ச. தலைவர் அறிவிப்பு

கொழும்பு,நவ.15

தனியார் பஸ் சேவையை மேற்கொள்வதற்கான எரிபொருள் மானியம் அரசினால் வழங்கப்படாததற்கு எதிர்புத் தெரிவித்து தனியார் பஸ் சேவைச் சங்கம் ஒழுங்கு செய்துள்ள வேலை நிறுத்தம் திட்டமிட்டபடி நேற்று நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுமென தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்றுத் தெரிவித்திருந்தது.

இதனிடையே குறிப்பிட்ட வேலை நிறுத்தம் காரணமாக பொதுமக்களது போக்குவரத்துக்குத் தடங்கல் ஏற்படாதிருக்கும் பொருட்டு இலங்கை போக்குவரத்துச் சபைப் பஸ்களை மேலதிகமாகச் சேவையில் ஈடுபடுத்த அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டீ. பந்துசேன தெரிவித்துள்ளார்.

இதற்காக அசோக் லேலண்ட் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்த இருநூறு புதிய பஸ்களில் எழுபது பஸ்களை இன்று முதல் சேவையில் ஈடுபடுத்த இருப்பதாகவும், மொத்தத்தில் நாடளாவிய ரீதியில் 5300 பஸ்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சேவையில் ஈடுபடுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இ.போ.ச பஸ்களில் கடமையாற்றும் ஊழியர்களின் சகல விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# றிஷானா நௌபீக்கை சந்திப்பதற்கு அவரது பெற்றோர் சவூதி பயணம்

கொழும்பு,நவ .15

சவுதி அரேபியாவில் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் காலத்தைக் கழித்துவரும் இலங்கைப் பெண்ணான றிஷானா நௌபீக்கை சந்திப்பதற்கென அவரது பெற்றோரும் மரண தண்டனையிலிருந்து அவரை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடவென தூதுக்குழுவொன்றும் நேற்று திங்கட்கிழமை சவுதி அரேபியாவுக்குச் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, அமைச்சர் றிஷாட் பதியுதீன், மற்றும் முன்னாள் அமைச்சர் எம்.எச்.முகம்மது ஆகியோரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பவற்றின் அதிகாரிகளும் இந்தத் தூதுக் குழுவில் அங்கம் வகிப்பதாக இந்தக் தூதுக் குழுவில் இடம்பெறும் மற்றொரு பிரமுகரான திருகோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம்.எஸ்.நௌபீக் தெரிவித்திருந்தார்.

சவுதி அரேபியாவின் அல்-தமீம் சிறையில் சிறைவாசம் அனுபவித்து வரும் றிஷானா நௌபீக்கை சந்தித்துப் பேசுவதுடன், அவர் பணிப்பெண்ணாக சேவையாற்றிய வீட்டில் உயிரிழந்த குழந்தையின் பெற்றோரையும் சந்தித்து றிஷானாவுக்கு மன்னிப்பளித்து மரண தண்டனையிலிருந்து அவரைக் காப்பாற்றுமாறு கோரிக்கை விடுப்பதே இந்தக் குழுவினரின் சவுதி அரேபியாவுக்கான பயணத்தின் நோக்கமாகும்.

றிஷானாவின் பெற்றோர் ஏற்கனவே 2007 ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவுக்குச் சென்று சிறைத் தண்டனை அனுபவித்து வரும் தமது மகளைக் கண்டு பேசித் திரும்பியிருந்தனர்.

றிஷானா பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய வீட்டில் எஜமானரின் குழந்தையின் மரணத்துக்குக் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சவுதி அரேபிய நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. அவரது மரணதண்டனை நிறைவேற்றப்படும் வரை அவர் சிறைவாசம் அனுபவித்து வருகிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

# டெங்கு பரம்பலைக் கட்டுப்படுத்த வலி.தென்மேற்கில் விசேட குழு

சண்டிலிப்பாய்,நவ.15

மழை காலம் ஆரம்பமானதைத் தொடர்ந்து வலி- தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தொண்டர்களும் ஈடுபட்டுள்ளனர்.

குழுக்களாக இணைந்து செயற்படும் இவர்கள் வீடுவீடாகச் சென்று மழை நீர் தேங்கி நிற்கும் பொருள்கள் உள்ளனவா, என்பதைக் கண்டறிவதிலும் பொருள்கள் இருக்கும் வீட்டு உரிமையாளர் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வதிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

## வீடு வீடாகச் சென்று நடவடிக்கை

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில், டெங்கு நோயாளர் இனங்காணப்பட்டதைத்தொடர்ந்து, இந்த நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் வலி. தென்மேற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் தொண்டர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். நோய்வர முன்பு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

கூட்டத்தில் எடுத்த தீர்மானத்துக்கமைய கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று நுளம்பு உற்பத்தியாகக் கூடிய தடயப் பொருள்களைக் கண்டறிவதிலும் நோயின் தாக்கம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரசாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். டெங்கு பரவக்கூடிய வகையில் பொருள்கள் இருக்கும் வீட்டு உரிமையாளர் விவரங்களையும் பதிவு செய்து வருகின்றனர். (த-115)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இரு வைத்திய அதிகாரிகள்

தென்மராட்சி, நவ.15

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு வைத்திய அதிகாரிகள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வைத்திய கலாநிதி ஆர்.டி. இராஜகாரியர், வைத்திய கலாநிதி தி.மயூரன் ஆகிய இருவரும் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (த-207)

# தொல்புரம் சிவபூமி இல்லத்தில் சிறுவர், முதியோர் நிகழ்வுகள்

சங்கானை,நவ.15

சர்வதேச சிறுவர், முதியோர் தினமும், தேசிய வாசிப்பு மாத நிறைவு நாளும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

வலிமேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. சி.சுஜீவா, முதியோர் இல்லத் தலைவர் ஆறு.திருமுருகனும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபைச் செயலாளர் சி.புத்திரசிகாமணி, சங்கானைக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை. எங்கரசு மற்றும் ஆசுகவி. க. சிவசுப்பிமணியமும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

மேலும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டு மத்திய கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் ம.வி., மூளாய் சைவப்பிரகாச ம.வி. அதிபர்களும், வட்டு இந்துக்கல்லூரி உப அதிபரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-29)

# கிளாலியில் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் அபிவிருத்தி அமைப்புக்கள் புனரமைப்பு

தென்மராட்சி,நவ.15

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கிளாலிப் பகுதிக்கான கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

15வருடங்களின் பின்னர் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதை அடுத்து பிரிவின் அபிவிருத்தி மற்றும் பல்வேறு நோக்கங்களுக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் அவசியம் என்பதால் முன்னர் இயங்கிய கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளாலி பாடசாலைக்கு அருகில் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டத்தில் பளைப்பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர், கிளாலிப் பிரிவு கிராம அலுவலர் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளதால் பிரிவைச் சேர்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# விபத்தில் காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.15

வீதி விபத்தினால் தலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்கென போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பயனளிக்காது கடந்த சனிக்கிழமை மரணமானார்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த சித்திவிநாயகர் மல்லிகா தேவி (வயது-56) என்பவரே மரணமானார்.

நெல்லியடிப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் அ.பிரேம் சங்கர் மரணவிசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-4-319)

# சங்கானை ஆஸ்பத்திரியில் வைத்தியர் பற்றாக்குறை

## வெளிநோயாளர் பெரும் சிரமம்

வலி-வடக்கு, நவ.15

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் அதிக எண்ணிக்கையான வெளிநோயாளர்கள் நாளாந்தம் வருகின்றபோதும் ஒரு வைத்தியரே அனைவரையும் பார்வையிடும் நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளாந்தம் சுமார் 150 முதல் 200 வரையானவர்கள் சிகிச்சை பெறுவதற்காக அங்கு வருகின்றனர். ஒரே ஒரு வைத்தியர் மட்டும் கடமையில் ஈடுபட்டு அத்தனை நோயாளர்களையும் பார்வையிடுகிறார். இதனால் வைத்தியரும் நோயாளர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

காலையிலும், பிற்பகலிலும் வெளி நோயாளர்களைப் பார்வையிடும் நடவடிக்கை உள்ளபோதும் குறிப்பிட்ட வைத்தியர் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாள்களும் வட்டுக்கோட்டை மத்திய மருந்தகத்துக்கும் வெளிநோயாளர்களைப் பார்வையிடச் செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.ஒரு பிரதேச வைத்தியசாலையையும், ஒரு மத்திய மருந்தகத்தையும் ஒரே ஒரு வைத்தியரே பார்வையிடுகிறார்.

இது தொடர்பாக வலி- மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான த.நடனேந்திரன், ஜீ.சிவகுமார் ஆகியோர் பிரதேச சபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரவுள்ளதுடன் சுகாதாரத்திணைக்களத்துக்கும் கடிதம் எழுதியுள்ளனர். (த-86)

# கைதடியில் முதியோர் கௌரவிப்பு



கைதடி, நவ.15

கனடா வாழ் கைதடி உறவுகளின் நிதியுதவியுடன் கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகம் முதியோர் கௌரவிப்பு விழா ஒன்றை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கைதடி கயற்றசிட்டி கந்தசாமி கோயில் கல்யாண மண்டபத்தில் நடத்தியது.

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் "லயன்" ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிலே முதன்மை விருந்தினராகக் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் ஆலோசகரும், ஆறுதல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமாகிய சுந்தரம் டிவகலாலாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மார்பு நோய் சிகிச்சைப் பிரிவின் வைத்திய பொறுப்பதிகாரி எஸ். யமுனானந்தாவும், கௌரவ விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வே. தபேந்திரனும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இருநூறுக்கும் மேற்பட்ட 70 வயதைத் தாண்டிய முதியோர்கள் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களும் நிதியும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து கைதடியைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள் பலவற்றின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முதியோர்கள் யாவரும் அவரவர் வீடுகளில் இருந்து வாகனங்களில் அழைத்துவரப்பட்டு விழா நிறைவுற்றதும் மீண்டும் வாகனங்களிலேயே கொண்டு செல்லப்பட்டு அவர்களது வீட்டிலேயே விடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-288)

# கைதடி வடிசாலை வீதிக்கு குடிதண்ணீர் வழங்கும் பணி

கைதடி, நவ.15

கைதடி தெற்கு சன சமூக நிலையத்தின் பெரு முயற்சியால் கைதடி தெற்கு அரச வடிசாலை வீதிக்கான குழாய்நீர் விநியோக வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றபோதிலும் இந்தப்பிரதேசத்தில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதுடன் குடிதண்ணீரைப் பெற நீண்டதூரம் செல்லவேண்டிய நிலையும் இருந்து வந்தது.

இந்தநிலையில் கைதடி தெற்கு சனசமூக நிலையம் இவ் விடயத்தில் அக்கறை கொண்டு முயற்சி எடுத்ததன் பயனாகத் தற்போது நீர் வழங்கல் அதிகார சபையினர் இந்தப்பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகத்திற்கான குழாய்களை நிலத்துக்கடியில் பொருத்தியுள்ளனர்.

இக்குழாய் நீர் விநியோகம் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெற வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-288)

# தொழிற் பூங்காவுக்கு நிதியுதவி

கைதடி, நவ.15

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோரின் நலன்கருதி டென்மார்க் நாட்டில் தற்போது வசித்து வரும் கைதடி மேற்கைச் சேர்ந்த சோதிலிங்கம் றூபா தம்பதியர் 20 ஆயிரம் ரூபாவை நிதியாக வழங்கி உதவியுள்ளதாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ. மகேந்திரம் தெரிவித்தார். (த-288)

# கொழும்புத்துறையில் வீதியமைப்புப் பணி



கொழும்புத்துறை,நவ.15

வடக்கின் வசந்தம் கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமத்துக்குப் புதிய வீதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் மக்கள் மீளக் குடியேறிய இந்தக் கிராமத்துக்கு இரண்டு புதிய உள்ளக வீதிகள் யாழ்.மாநகர சபையால் அமைக்கப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதிகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-135)

# மக்கள் தேவைகளை நேரில் அறிந்து வரவு - செலவுத் திட்டம்

## வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் நடவடிக்கை

சண்டிலிப்பாய், நவ.15

மக்களின் தேவைகளை அறிந்து வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்க முன்வந்துள்ள வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் தற்பொழுது மக்களை நேரில் சந்தித்து அவர்களின் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான வரவு செலவு திட்டங்களைத் தயாரிப்பதில் பிரதேச சபைகள் சுறுசுறுப்புடன் ஈடுபட்டு வருகின்றன.

இந்த வகையில் நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட வலிகாமம் மேற்குப் பிரதேசத்துக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க முன்வந்துள்ள தலைவர் மக்களின் அபிலாசைகளை அறிந்து வரவு செலவு திட்டங்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கானை, அராலி ஆகிய உப அலுவலகங்களுக்கு மக்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாட முன்வந்துள்ள தலைவர் முதற்கட்டமாக வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் வைத்து அந்தப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அவர்களிடம் கேட்டறிந்துள்ளார்.

இதைத் தொடர்ந்து ஏனைய உப அலுவலகங்களிலும் மக்களைச் சந்திப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-115)

# கொழும்புத்துறை இறங்குதுறை சேதமுற்று அழிவுறும் நிலையில்



கொழும்புத்துறை, நவ.15

கொழும்புத்துறையில் உள்ள பழமை வாய்ந்த இறங்குதுறை சேதமடைந்து கவனிப்பாரின்றி அழிவுறும் நிலையில் காணப்படுகின்றது. இப் பகுதிகளில் நடைபெற்ற போரை அடுத்து சுமார் 20 வருடங்களாகப் பாவனையோ, பராமரிப்போ இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

நீண்ட காலமாக இந்த இறங்குதுறையூடாகப் பூநகரி வெட்டுக்காடு, மண்ணித்தலைப் பகுதிகளில் இருந்து தேங்காய், ஓலை, மணல் என்பன பாரிய வத்தை எனப்படும் வள்ளங்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டன.

அத்துடன் இந்தத் துறைமுகத்தினூடாக வன்னி.கொழும்புப் பகுதிகளுக்கு மன்னர்களும், மக்களும் பிரயாணங்களை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு பல வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட துறைமுகத்தைப் புனரமைத்து வரலாற்றுச் சின்னமாகப் பேணுவதுடன் மீனவர்களின் தேவைகளை நிறைவேற்ற உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-135)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் சுக வனிதையர் சிகிச்சைப் பிரிவு

தென்மராட்சி,நவ.15

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சுக வனிதையர் சிகிச்சைப் பிரிவும், குழந்தைகள் சிகிச்சை நிபுணரின் சேவையும் விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலைக்கு இரண்டு வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து யாழ். மாவட்டத்தில் முதன் முறையாகச் சுக வனிதையர் சிகிச்சைப் பிரிவு இயங்கவுள்ளது.

35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் உட்பட பல்வேறு நோய்களுக்குப் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சுக வனிதையர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையில் பிரதி சனிக்கிழமை தோறும் நடத்தப்படும் குழந்தைகள் சிகிச்சைப்பிரிவுக்கு ஏனைய பிரதேசங்கள் உட்பட 50க்கு மேற்பட்ட குழந்தைகள் கொண்டு வரப்படுவதால் இந்த சிகிச்சைப் பிரிவுக்குயாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் குழந்தைகள் சிகிச்சை வைத்திய நிபுணரை சிகிச்சையளிக்கக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது. (த-207)

## எதிர்காலச் சிற்பிகள்



ஊக்கமளிப்பு: சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஓவியப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவன் ஒருவருக்கு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சிந்தக பண்டார பரிசில் வழங்கி கௌரவிக்கிறார். (கு)

# 3 மாடுகள் ஒரே நாளில் பாம்பினால் கடியுண்டு இறந்தன

தென்மராட்சி,நவ.15

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மூன்று மாடுகள் ஒரே நாளில் பாம்பினால் கடியுண்டுபலியாகின. கடந்த வாரம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான இந்த மூன்று மாடுகளையும் மாலையானதும் அவிழ்த்துக்கொண்டு வந்து பட்டியில் கட்டிய அரைமணி நேரத்தில் மூன்று மாடுகளும் அடுத்தடுத்து வீழ்ந்து மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாடுகளுடன் வளர்க்கப்பட்ட பசுமாடு கடந்த வருடம் இதே காலப்பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த வேளையில் மின்னல் தாக்கிப் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு மூன்றாவது சங்கம்

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ். மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான புதிய சங்கம் நேற்று முன்தினம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்தலைவராக பா. விஜேந்திரனும், செயலாளராக செல்வி பா.யசோதாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் 15பேர் கொண்ட நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் ஒன்று கூடிய சுமார் 500 க்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் மத்தியிலிருந்து புதிய சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இது வேலையற்ற பட்டதாரிகளுக்கு உருவாக்கப்பட்ட 3 ஆவது சங்கமாகும். ஏற்கனவே இரு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (த-14)

# தெல்லிப்பழை வைத்தியசாலையின் புனரமைப்பு பூர்த்தியாகும் நிலையில்

யாழ்ப்பாணம், நவ.15

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் 80 வீத புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் வைத்தியசாலையின் நீர்விநியோகப் பணிகளைச் சீர் செய்யும் நோக்கில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கியும், வைத்தியசாலையின் சகல பகுதிகளுக்கும் நீர் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதனை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி இடம் பெற்றது. இந்த நிகழ்வில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளர் எஸ்.செல்வகுமார் கலந்துகொண்டார். (த-36)

# குருநகர் யாகப்பர் ஆலய குண்டு வீச்சில் பலியான 9 பொதுமக்களுக்கு அஞ்சலி

குருநகர், நவ .15

1993 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சு இடம்பெற்ற 18 ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று முன்தினம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நினைவு கூரப்பட்டது.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடைபெற்ற முதலாம் திருப்பலி நிறைவில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வெளி விறாந்தையில் 'சுப்பர்சொனிக்' விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட பொதுமக்கள் 9 பேர் நினைவாகக் கட்டப்பட்ட நினைவு இடத்தில் இந்த நினைவு நிகழ்வு இடம் பெற்றது.

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண. பிதா ஆர். நேசராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் கொல்லப்பட்ட 9 பேர்களினது சார்பாகவும் உறவினர்கள் மெழுகுதிரிகள் கொழுத்தி இறைவணக்கம் செலுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து குருநகர் பங்குத் தந்தை வண பிதா ஆர். நேசராஜா அடிகள் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

1993 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது இலங்கை விமானப் படையின் 'சுப்பர்சொனிக்' விமானம் வீசிய இரண்டு குண்டுகளினால் இந்த ஆலயத்தின் உட் புறம், பங்குத் தந்தையின் குருமனை ஆகியவை பெரும் சேதமடைந்ததுடன் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியைத் தொடர்ந்து ஆலயத்தில் இறை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த குருநகரைச் சேர்ந்த கபிரியேல் அன்ரன், யோன் வெண்ணிலா, சிங்கராயர்க்ஞோனி, அன்ரன் புஸ்பலீலா, எஸ். பேசி, குருசுப்பிள்ளை அக்கினேஸ், கி.சிந்து, க. சேவியர் ஆகியோர் உடல் சிதறிப் பலியானார்கள்.

இந்தச் சம்பவத்தின் போது படுகாயமடைந்த குருசுப்பிள்ளை அருள்நாயகம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் இறந்தமை குறிப்பிடத்தக்கது. (த-51)

# மணியந்தோட்டம் பகுதிக்கு விரைவில் மின் விநியோகம்

கொழும்புத்துறை, நவ .15

மணியந்தோட்டம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

முதல் நடவடிக்கையாக கொழும்புத்துறைச் சந்தியில் இருந்து உயர் மின்வலு மின்சாரத்தைக் கொண்டு செல்லும் மின் கம்பங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மணியந்தோட்டம் பகுதியில் மின்மாற்றியைப் பொருத்தி அதிலிருந்து கிராம வீதிகளுக்கும் வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக மின்சார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை முதலாம் குறுக்கு வீதியில் இருந்து 8 ஆம் குறுக்கு வீதி வரை மின் கம்பங்கள் நாட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசிக்கும் இப் பகுதியில் மின்சார வசதியின்மையால் கல்வி மற்றும் தொழில் முயற்சிகளில் மக்கள் பின்னடைவைச் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-135)

உதயன்
15 நவம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# ஸ்கந்தா மாணவன் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடம்

அளவெட்டி, நவ.15

அகில இலங்கைப் போதைப் பொருள் தடுப்பு ஆக்கப் போட்டியில், தேசிய மட்டத்தில் காட்டூன் ஓவியம் வரைதலில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவன் (தரம்-11) கே.தணீஸ்வரன் ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இந்த மாணவன் நாளை கொழும்பு இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடை பெறும் பரிசளிப்பு நிகழ்வில் பரிசிலைப்பெறவுள்ளார் என்று கல்லூரி முதல்வர் தெரிவித்தார்.

(வ-36)

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

DR.HAIR Rx
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

தலைமுடி உதிர்தல். ஆண் பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-24,25 ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078, 011-2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021-4923416, 021-2220288.

# இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர்தர முதலுதவிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.15

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையக உயர்தர முதலுதவிப் பரீட்சை அடுத்த மாதம் 3 ஆம் திகதி யாழ். கிளையின் ஆதரவில் யாழ்ப் பாணத்தில் நடைபெறவுள்ளது.

உயர்தர முதலுதவிப் பரீட்சைக்கான முழுநேர கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 5 நாள்கள் நடைபெறவுள்ளது.பரீட்சைக்குத் தோற்றும் ஒவ் வொரு பரீட்சார்த்தியிடமிருந்தும் 50 ரூபாவை தலைமையகம் அறவிடவுள்ளது. மேற்படி பரீட்சார்த்திகள் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களாக இருக்கவேண்டும். இந்த விண்ணப்பப்படிவத்துடன் பணத்தையும் அனுப்புமாறு செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை தலைவர் தெரிவித்துள்ளார்.

(வ-311)

German Deutsch class

German Deutsch Swiss Deutsch Classes
Embassy எக்ஸாமுக்கான டொச் மொழி வகுப்பு புதிய பிரிவு ஆரம்பம். படித்து கோதா எக்ஸாமில் சித்தியடைய சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.
(464) ஆஸ்பத்திரி வீதி, Jaffna College. 0724847109
(10454) (6-7-8)

# மாந்தை மேற்கு பிரதேசசபை
# மாந்தை மேற்கு 2012 ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

மாந்தை மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகளை 01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி | :-2011.11.16 தொடக்கம் 2011.11.29 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி | :-2011.11.29 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | :-2011.11.30 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறக்கும் திகதி | :-2011.11.30 பிற்பகல் 01.30 மணி |

### 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர) |
|---|---|---|---|---|
| | அடம்பன் உப அலுவலகம் | | | |
| 01 | காத்தான் குளம் மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 8,000/= | 400,000/= |
| 02 | அடம்பன் மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 6,000/= | 300,000/= |
| 03 | வட்டக்கண்டல் மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 6,000/= | 300,000/= |
| 04 | ஆண்டாங்குளம் மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 6,000/= | 300,000/= |
| | விடத்தல் தீவு உப அலுவலகம் | | | |
| 05 | விடத்தல் தீவு மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 5,000/= | 250,000/= |
| | இலுப்பைக்கடவை உப அலுவலகம் | | | |
| 06 | இலுப்பைக்கடவை மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 4,000/= | 100,000/= |
| 07 | மூன்றாம் பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 4,000/= | 100,000/= |
| | மடு உப அலுவலகம் | | | |
| 08 | பெரிய மடு மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 3,000/= | 150,000/= |
| 09 | பண்டிவிரிச்சான் மாட்டிறைச்சிக்கடை | 1,000/= | 6,000/= | 300,000/= |

- கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அட்டம்பன்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்பட பிரதியையும் கொண்டு வருவதுடன் , தாம் வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றத்தால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால், அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
- ஆகக் குறைந்த, கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
- கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் தவிசாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
- தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 2/3 பகுதியை 2011.12.09 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
- கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சு.வரப்பிரகாசம், தவிசாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை,
அடம்பன்.

மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன்.
11.11.2011

(சி/5781)(2-6-7-)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14.12.1952 | 16.10.2011 |



வலித்தூண்டல், கீரிமலையை நிரந்தரமுகவரியாகவும் 3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட

## அமரர் ஞானப்பிரகாசம் பேதுருப்பிள்ளை

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே
மீளாத்துயில் கொண்டு 31 நாள்கள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும்

தகவல்:
செட்டி - ராணி
தம்பதியர் (லண்டன்)

என்றும் நினைவுடன்
மனைவி, மாமா,மாமி, மச்சாள் மார்,
மச்சான்மார், சகோதரர்கள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்கைள்.

(10051)(3.6.7)

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic

Care



முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு-021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078, 011-2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021-4923416, 021-2220288.

# நீங்கா நினைவுடன் 8 ஆண்டுகள்



மலர்வு:
23.02.1935

உதிர்வு:
15.11.2003

## வெலிச்சோர் மைக்கல்

[மைக்கல் றேடியோ சேவிஸ் உரிமையாளர்]

ஆண்டு எட்டு மறைந்தாலும் என்
நெஞ்சத்தில் மட்டும் உங்கள்
நினைவலைகள் என்றும்
மறையப்போவதில்லை

760, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்:
மனைவி மகேஸ்வரி.

(10455)(1,6,7)

# என்னத்தைச்...

## ...சொல்ல?!

### இப்படி இருக்குது இந்த வீதி அபிவிருத்தி

கங்கைக் கரையில், பல்லாயிரவர் கூடும் இடத்தில், அடியார்கள், தலைச்சவரம் செய்து தீர்த்தமாடுவது வழமை. அங்கு சிகை அலங்காரம் செய்யும் மிகச் சிலரே, சிகை அகற்றும் வேலையில் ஈடுபட்டிருப்பர். அவர்கள் தந்திரமாக, ஒருவரது தாடியில் அரைவாசி மற்றவர் தலைமுடியில் ஒரு பகுதி அடுத்தவரின் மீசையில் கைவைத்து, எவரும் அங்கிருந்து அகன்று விடாது தம் வசம் ஈர்த்து நிற்பர். ஒரே நேரத்தில் ஐந்து பேருக்குச் சவரம் செய்வது, அவர்களுக்குக் கைவந்தகலை- தீர்த்த மாடித் திரும்பியஒரு முதியவர் தன் அனுபவத்தை இப்படிச் சொன்னார்.

இதனை இங்கு ஏன் எழுதவேண்டும் என்பது வாசகராகிய உங்களது கேள்வி. இந்த உவமைக்கும் ஒரு பின்னணி இருப்பதை இங்கு சுட்டிக்காட்டுகிறேன்.

நமது யாழ்ப்பாணத்து வடக்கின் வசந்தமும் இப்படித்தான்.

யாழ்.கோட்டையைத் திருத்திக் கட்டுகிறார்கள். ஏ-9 வீதியைத் திருத்துகிறார்கள். யாழ்.பருத்தித்துறை வீதியின் திருத்தவேலை கோப்பாயில் ஓய்வெடுத்து நிற்கிறது. காங்கேசன்துறை வீதி இணுவிலை எட்டிப்பார்க்கின்றது. வீட்டுத்திட்டம் ஒரு புறத்தில். மக்கள் மரத்தடியில் வசிக்கும் நிலை. மரநடுகை மறுபுறத்தில்.

இப்படியாக கங்கைக் கரையில் சவரம் செய்ததுபோல், எதுவுமே முற்றுமுழுதாக முடியவில்லை. தீவகத்தை நோக்கிப் போகும் பெரும்தெரு, யாருக்கு முள் எலும்பை முறித்து நிற்கின்றது.



அங்கு சென்று ஊர்காவற்றுறையை நோக்கினால் வசந் தம் வீசுகிறது. அங்கு தீவக மக்கள் அரசுக்கு அளித்த வாக்கிற்காக பற்பல திட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால் என்ன? அங்கு உள்ள நீதி மன்று, அறுபது வருடப் பழைமை வாய்ந்த ஒடிந்த வீட்டில். அங்கு மலசலகூட வசதி இல்லை. முன் அறையில் சிறைக் கைதி கள். எதிர்ப்புறத்தே, சிறு அறையில் மூன்று கதிரைகளோடு சட்ட வல்லுநர்கள் தங்கும் அறை. நூல் நிலையமோ சட்டத்தரணிகள் கட்சிக்காரருடன் உரையாடுவதற்கென தனி அறையோ கிடையாது. வீட்டின் குசினியே அலுவலகம். பின்புற விறாந்தையே வழக்கேடு வைக்கும் அறை. அங்குள்ள சிறிய அறையே நீதிபதியின் கூடம். இதனைக்கண்டு வியந்தார் கொழும்பில் இருந்து வந்த அப்புக்காத்து. அங்கு புதிதாக அமைக்கப்பட்ட மிகச்சிறிய மலசல கூடத்தின் கதவுக்குப் பூட்டுப்போட்டுள்ளது. திறப்போ பதிவாளரிடம் இருப்பதும் பரிதாபம். ஒன்று நீதிபதியின் பாவனைக்கு. மறையது ஊழியருக்காம். பொதுமக் கள் நிலை அதோகதிதான்!

இவற்றை ஏன் சொல்கிறேன் என்றால் எதுவும் இங்கு திட்டமிடப்பட்டுச் செய்யப்படவில்லை. எதற்கு முன்னுரிமை, என்பதை யார் நிர்ணயிப்பது? 'கோட்டை' யைக் கவர்ச்சி ஆக்குவது தப்பானதல்ல. ஆனால் நீதிமன்று அதைவிட முக்கியம் அல்லவா?

ஒரு தெருவையாவது, முழு அளவில் செய்து முடிக்காமல், மழை வெள்ளத்தில் மூன்று வீதிகள் முடங்கலாமா? இன்னும் ஏ-9 பாதையும் முடியவில்லை. காங்கேசன்துறை வீதி பாரிய குன்றும் குழியுமாகக் கிடக்கின்றது.

பருத்தித்துறை வீதி தென்னாலி இராமனது குதிரையைப்போல் ''மாதம் போம் காத வழி'' என்று கிடக்கின்றது. யார் யாரோ எதை எதையோ தத்தமது மனப்போக்கில் செய்துவரும் போது, மறுபுறத்தில் அபிவிருத்திக் கூட்டம், மாநாடு, அமைச்சர்கள் வருகை என்று நடக் கின்றது. ஒரு சர்வதேச சட்டக்குழு ஊர்காவற்றுறை நீதி மன்றைப் பார்வையிட்டால் எமது நாட்டைப்பற்றி நீதி நிர்வாகத்தைப்பற்றி என்ன நினைப்பார்கள்?

அரச அதிபரான அம்மையார், அடுத்துவரும் அபிவிருத்திக் கூட்டத்தில் இதனை வாசித்துக்காட்டி, எங்கள் நீதி அமைச்சருக்கும் ஊர்காவற்றுறைக் கோட் டினைப் பார்வையிட வைப்பாராக. நீதி அமைச்சர் இது குறித்து அறிந்திருக்க நியாயமில்லையே. யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறைக்கு வீசிய நீதி மன்ற வசந்தம்-இதுவரை ஊர்காவற்றுறையில் வீசாதது ஏனோ?

பிரசண்டன்



# தமிழர் கொல்லப்பட்டபோது தடுக்காத நோர்வே இன்று பாவமன்னிப்புக் கோருவது நியாயமா?

## விக்கிரமபாகு கருணாரத்ன கேள்வி

கொழும்பு,நவ.15

யுத்தத்தின் போதும் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போதும் அதனை தடுத்து நிறுத்த முயற்சிக்காத நோர்வே இன்று அனைத்தும் முடிந்த பின்னர் பாவ மன்னிப்பு கோருவது எவ்விதத்தில் நியாயமாகும் என்று இடதுசாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை, கல்கிஸை மாநகர சபை உறுப்பினருமான விக்கிரமபாகு கருணாரத்ன கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாதவது:

அரசின் மீது உலக நாடுகளுக்கு நம்பிக்கையில்லாததன் காரணமாகவே பொதுநலவாய விளையாட்டுப் போட்டி கைநழுவிப் போனது.

தமிழ் மக்களின் அழிவிற்கும் யுத்தத்திற்கும் இந்தியாவே காரணம் என்று நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இதனை அனைவரும் அறிவார்கள்.



அன்று யுத்தம் நடந்த போது தமிழ் மக்கள் கொல்லப்படும் போது நோர்வேயோ, அமெரிக்காவோ யுத்தத்தை நிறுத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் நடுத்தெருவில் படுகொலை செய்யப்பட்டுள் ளார். ஆனால் இதுவரையில் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

நாட்டில் கொலைகள் அரசின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான சூழலில் இங்கு வந்து விளையாட்டுக்களில் ஈடுபட்ட பின்னர் உயிரோடு வெளியேற முடியுமா என்ற அச்சம் வெளிநாடுகளில் உருவாகியுள்ளது.

அரசின் செயற்பாடு களில் உலக நாடுகளுக்கு நம்பிக்கை இல்லை. பொது நலவாய விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் நடத்துமாறு முதன் முறையாக விண்ணப்பித்தும், அனுதாப ரீதியிலாவது அதிகப்படியான வாக்குகள் இலங்கைக்கு கிடைக்கவில்லை.

47 அதிகப்படியான வாக்குகளை பெற்று விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு ஆஸ்திரேலியாவிற்கு கிடைத்துள்ளது. சட்டம், ஒழுங்கு நாட்டிற்குள் இல்லாததால் 27 வாக்குகளே இலங்கைக்கு கிடைத்துள்ளன. அரசின் பாவத்திற்கு நாடும் மக்களும் தலை குனிந்துள்ளன - என்றார். (ச)



பதில் அதிபர்களாக கடமையாற்றும் அதிபர்களை சேவையில் நிரந்தரமாக்கக் கோரி அகில இலங்கை பதில் அதிபர்கள் சங்கம் நேற்று திங்கட்கிழமை இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் சுவீகரிக்கப்பட்ட சொத்து மீளளிக்கப்படும்

## பதில் எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,நவ.15

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் உரிமையாளர்களிடம் மீளளிக்கப்படும் என்று பதில் எதிர்க்கட்சித் தலைவர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். அவசரமான சட்ட மூல மொன்றின் மூலம் அரசு நட்டமடையும் சொத் துக்களை சுவீகரித்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சொத்துக்களை திடீரென சுவீகரித்து கொண்ட நடவ டிக்கை ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும்.

அரசின் இந்த எதேச்சாதிகார நடவடிக்கை குறித்து தற்போது வெளிநாட்டுக்குச் சென்றுள்ள கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுத் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பில் கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# கப்பம்கோரியவர் சி.ஐ.டியினரால் கைது

கொழும்பு,நவ.15

கொழும்பு, கோட்டை வெல்ல வீதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்ணொரு வரிடம் ஒரு கோடி ரூபா கப்பம் கோரியதாகக் கூறப்படும் ஒருவர் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மோதரை பகுதியைச் சேர்ந் தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபர் 21 தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கப்பம் கோரினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கப்பம் கோருவதற்கு இந்தச் சந்தேகநபர் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

# அனைத்து பீடங்களும் 16 இல் ஆரம்பம்

கொழும்பு, நவ.15

களனி பல்கலைக்கழகத்தின் 2010/2011 ஆம் வருடத்தின் புதிய மாணவர்களுக்கான அனைத்து பீடங்களும் நாளை புதன்கிழமை ஆரம்பிக்கப்பட வுள்ளன. எனவே, விடுதி கிடைத்துள்ள மாணவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை பிற் பகல் 1 மணிக்கு முன்னர் பல்கலைக் கழகத்திற்கு சமுகமளிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகத்தில் கடந்த வியாழக்கிழமை இரு மாணவர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் தற்போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## காவல்துறையினரின் காவல் கடமையால் துணுக்காயில் குற்றச்செயல்கள் வீழ்ச்சி

துணுக்காய், நவ.15

துணுக்காய் பிரதேசம் எங்கும் காவல்துறையினர் இரவு காவல் கடமையில் ஈடுபட்டு வருவதால் பல குற்றச்செயல்கள் தடுக்கப்பட்டு வருகின்றன.

துணுக்காய் பிரதேசம் பாண்டியன்குளம், கரும்புள்ளியான் போன்ற பல இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில் மல்லாவிப் பிரதேச காவல்துறைப் பொறுப்பதிகாரியின் கட்டளைக்கு அமைவாகக் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் முக்கிய இடங்களில் இரவில் காவல்துறையினர் காவல் கடமையுடன் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் பல குற்றச்செயல்கள் தடுக்கப்பட்டுள்ளன.

மல்லாவிப் பகுதியில் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. கொத்தம்பியான்குளம் சங்கக் கடை சில மாதங்களுக்கு முன்பு திருடர்களால் உடைக்கப்பட்டது. பாண்டியன்குளம் கரும்புள்ளியான் பகுதியில் வசிக்கும் சின்னத்தம்பி தில்லைநாயகம் வீட்டுக்குள் புகுந்த திருடர்களால் பெறுமதிமிக்க நகைகளுடன் 2 லட்சம் ரூபா நெல் விற்ற பணம் அபகரிக்கப்பட்டது. இவை தொடர்பாகக் காவல் துறையினரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

இரவில் முக்கிய சந்திகளில் காவல்துறையினர் காவல் புரிந்து வருவதோடு இரவு 10 மணிக்கு மேல் வீதிக்கு வருபவர்களைச் சோதனை இடுவதோடு விசாரித்தும் வருகின்றனர்.

இதனால் இரவில் மதுபானம் அருந்தி வருவோர், பல குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மிகவும் பயப்பீதியுடன் இருந்து வருகின்றனர். இது சம்பந்தமாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் காவல்துறையினரின் வேண்டுகோளுக்கு அமைவாக துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (க- 415)

## மடு கல்வி வலய பணிமனைக்கு அடிக்கல் நடுகை

மன்னார், நவ.15

மன்னார் மாவட்டம் மடு வலயக் கல்விப் பணிமனைக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளுக்கென ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், சர்வமதங்களையும் சேர்ந்த பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-எ)

## கல்விப் பணிப்பாளர் இல்லாததால் நிதிச் செயற்பாடுகள் முடக்கம்

முள்ளியவளை, நவ.15

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் மாகாணக் கல்வி அமைச்சில் இணைப் பில் கடமையாற்றுவதால் வலயக் கல்விப் பணிமனையின் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலயக் கல்விப் பணிமனையில் கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளது. அத்துடன் நிதிச் செயற்பாடுகளும் முடங்கியுள்ளன.

தற்போது பிரதிக் கல்விப் பணிப்பாளரான மா.ராஜகுமார் பதில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

ஆகவே விரைவில் நிரந்தரமான கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்பதே கல்விச் சமூகத்தினரின் வேண்டுகோளாக உள்ளது. (க)

## மோசமான வவுனியா வீதிகளில் விழுந்து எழும்பும் பொது மக்கள்

வவுனியா, நவ.15

வவுனியாவின் பல்வேறு இடங்களிலும் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் போக்குவரத்தை மேற்கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மகா இறம்பைக் குளம் பி.எஸ்.சி. ஒழுங்கை உட்படப் பல வீதிகளும், பூந்தோட்டம் பாடசாலைக்குச் செல்லும் வீதியும் மிகவும் மோசமான நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.


தற்போது இங்கு தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட வீதிகள் மோசமான நிலைக்கு வந்துள்ளன.

இதனால் இவற்றின் ஊடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், வர்த்தகத்துக்கான பொருட்களை எடுத்துச் செல்வோர், நோயாளர்கள் எனப் பல தரப்பினரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

சில வேளைகளில் வீதிகளில் காணப்படும் வெள்ளம் நிறைந்த குழிகளுக்குள்ளும் இவர்கள் இடறி விழுந்து எழும்பிச் செல்வதையும் காண முடிகின்றது.

ஆகவே இனியும் காலதாமதம் செய்யாது இவற்றைப் புனரமைத்து தர வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டு வரும் மக்களின் வேண்டுகோளாக உள்ளது. (க-421)

### ஒளி பிறந்தது...



இருள் விலகட்டும்- மன்னார், மாந்தை மேற்கு, [illegible] மீள்குடியேற்றக் கிராமத்துக்கான மின்விநியோகத் திட்டத்தை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆரம்பித்து வைக்கின்றார். (க)

## முல்லைத்தீவு வலய பாடசாலைகளில் மரம் நடுகை திட்டம்

முள்ளியவளை, நவ.15

ஜனாதிபதியின் பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் இன்று மர நடுகைத் திட்டம் இடம்பெறவுள்ளது.

இதன் மூலம் போரின் போது அழிவடைந்த பெரும் தொகையான மரங்களின் ஒரு பகுதியையாவது ஈடுசெய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-433)

## ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலையில் நாளை நடைபெறும் நடமாடும் சேவை

முல்லைத்தீவு,நவ.15

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை ஐயன்கன்குளம் அ.த.க பாடசாலையில் நடமாடும் சேவை ஒன்று நடைபெறவிருப்பதாக முல்லைத்தீவு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரியான இ.அமலன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தரத் தீர்வுக்குமான செயற்றிட்டத்தினால் துணுக்காய் செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளான புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்கன் குளம் மக்களுக்கான நடமாடும் சேவையே ஐயன்கன்குளம் அ.த.க பாடசாலையில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் துணுக்காய் பிரதேச செயலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சமூக சேவைகள் திணைக்களம்,சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொலிஸ் நிலையம், மாங்குளம், பால் நிலைவன் முறைக்கு எதிரான அமைப்பு, கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், சிறுவர் பராமரிப்புத் திணைக்களம், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, பிரதேச சபை ஆகிய நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கவுள்ளன.

இப்பகுதி மக்கள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன் மூலம் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## மன்னார் துயர்துடைப்புச் சங்கத்தின் சேவைகள்

மன்னார், நவ.15

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம், தனது வருடாந்த ஆதரவற்ற சிறுவர்களுக்கான ஒன்றுகூடலைக் கடந்த மாதம் 30 ஆம் திகதி மன்னாரில் வெகுவிமரிசையாக நடத்தியது.

சுவிற்சர்லாந்து தேசத்தில் இருந்து கொடை வள்ளலாகிய எஸ்.மௌஸ், ஒவ்வொரு வருட இறுதியிலும் மன்னாருக்கு வருகைதந்து சிறார்களின் கல்வி முன்னேற்றம், ஆக்க முயற்சிகளை நேரில் கண்டு பல வெகுமதிகளைக் வழங்கிச் செல்வதுண்டு. இம்முறை அவர் வருகையை முன்னிட்டு மேற்படி விழா மன்னார் வை. எம். சி.ஏ. மண்டபத்தில் நடை பெற்றது.

இந்த விழாவுக்குத் தலைமை வகித்த மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத் தலைவர் வண பிதா, சேவியர் குரூஸ் அடிகளார், தமது தலைமை உரையில் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் சேவைகளை விளக்கிக் கூறினார்.

இந்த ஆண்டில் 69 இற்கு மேற்பட்ட தாய், தந்தையர்களை இழந்த மூவினச் சிறார்களுக்கு மாதாந்த கல்வித் தொகை வழங்கப்படுவதாகவும் இவர்கள் இந்த நிதியைக் கொண்டு தமது பாட உபகரணங்களுக்கும் ரியுசன் செலவுக்கும் துவிச்சக்கர வண்டிக் கொள்வனவுக்கும் கணினிப் பயிற்சி எடுப்பதற்கும் செலவிடப்படுவதாக அறிவித்தார்.

மேலும் இந்த மாணவர்கள் நான்கு பேர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. ஏனைய பல்கலைக்கழக உதவித் திட்டத்தின் கீழ் இதுவரை 12 மாணவ, மாணவியர்கள் பல்வேறு துறைகளில் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்க நிதியுடன் கல்வி கற்று வருகின்றனர். அத்துடன் ஆறு தொண்டர் ஆசிரியர்களுக்குப் பின் தங்கிய பாடசாலைகளில் கல்வி போதிப்பதற்கு வேதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இடம்பெயர்ந்த மாணவ, மாணவியர்களுக்கான கல்விக்கான உதவித் திட்டத்தின் கீழ் 25 இற்கு மேற்பட்ட சிறார்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்க செயலாளர் திரு சின்கிலேயர் பீற்றர் கருத்து தெரிவிக்கையில் அரிப்பு, முள்ளிக்குளத்தில் வாழ்ந்த மக்கள், நாடோடிகளாக இல்லிடமின்றி அலைந்து திரிவதாகவும் கடும் மழை காரணமாக இவர்களின் ஓலைக் கொட்டில்கள் பாதிக்கப்பட்டதால் மன்னார் நகரில் வாழும் 35 குடும்பங்களுக்கு தலா 200 கிடுகுகள் வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் மீனவ கிராமமான தேவன்பிட்டிக் கிராமத்தில் படித்த இளம் பெண் களுக்கு 6 மாத தையல் பயிற்சி நடைபெறுவதாகவும் இவர்க ளுக்கான சான்றிதழ்கள் எதிர் வரும் தை மாதத்தில் வழங்கப் படவுள்ளதாகவும் வாமதேவபுரத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். (க-601)

## கற்சிலைமடுக் கிராமத்திலுள்ள பாதைகளை சேவாலங்கா நிறுவனம் புனரமைக்கும்

முல்லைத்தீவு, நவ.15

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கற்சிலைமடுக் கிராமத்தில் சேவாலங்கா நிறுவனத்தினர் முக்கியமான உள்ளூர்ப் பாதைகளைப் புனரமைப்பதற்கு முன் வந்துள்ளனர்.

இந்த நிறுவனத்தினர் ஏற்கனவே இந்தக் கிராமத்தில் பல உதவிகளை வழங்கியதோடு அபிவிருத்தி வேலைகளிலும் ஈடுபட்டனர். தற்போது இங்குள்ள உள்ளூர்ப் பாதைகளைப் புனரமைப்பதற்கு முன்வந்துள்ளனர்.

தற்போது கற்சிலைமடு 3 ஆம் கண்டம் பகுதியில் சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளமான பாதையைப் புனரமைப்பதற்கு இந்த நிறுவனத்தினர் முன் வந்துள்ளனர். ஆனால் இதற்கும் சில இடையூறுகளை விளைவிப்பதற்கு அதிகாரிகள் சிலர் முயற்சி செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் சேவாலங்கா நிறுவனத்தினர் கற்சிலைமடுக் கிராமத்திலேயே தமது சேவையைத் தொடரவிருப்பதாகக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-500)

# காணிகளுக்குள் செல்வதற்குத் தடைவிதிப்பு நிர்க்கதியான நிலையில் 600 குடும்பங்கள்

தலைமன்னாரில் கெடுபிடி





மன்னார், நவ.15

மன்னாரில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையை அடுத்து 1990 ஆம் ஆண்டு தலை மன்னாரில் இருந்து இடம் பெயர்ந்த 600 தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் மீண்டும் தலை மன்னாரில் மீளக் குடியமர்வதில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த நிலையில் வேறு மாவட்டங்களில் பல் வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த அந்த மக்கள் மீண்டும் தமது சொந்த மண்ணில் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தலைமன்னார் பாடசாலை வீதியில் உள்ள தமது காணியைத் துப்புரவு செய்து வந்தனர்.

தலைமன்னார் பாடசாலை வீதியில் 600 தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த சுமார் 130 ஏக்கர் நிலப் பரப்பை அந்த மக்களே பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஒற்றுமையாகத் துப்புரவு செய்து வந்தனர்.

ஆனால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணியை அந்த மக்கள் துப்புரவு செய்து கொண்டிருந்த போது தலை மன்னார் பொலிஸார் அந்தப் பகுதிக்குள் செல்லத் தடை விதித்ததோடு துப்புரவு செய்யும் வேலைத் திட்டத்தையும் இடைநிறுத்தினர்.

இதனால் மக்களுக்கும் அவர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. பின்னர் குறித்த காணிப் பகுதியைச் சுற்றிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்தக் காணியை காணி சீர்திருத்த ஆணைக்குழு பொறுப் பேற்றதைத் தொடர்ந்தே அந்த மக்களை அக் காணிகளில் குடியமர தடை விதிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனால் அந்த மக்கள் பெரிதும் மனமுடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

பல நாள்களாக தலை மன்னாரில் உள்ள உறவினர்களுடைய வீடுகளிலும் பள்ளிவாசல்களிலும் மரநிழல்களிலும் வாழ்ந்து வந்த அந்த மக்கள் இனி நாம் எங்கு செல்வது என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

பின் இடம்பெயர்ந்த நிலையில் முஸ்லிம் மக்கள் தலை மன்னார் பியரில் உள்ள பள்ளிவாசலில் கடந்த 12 ஆம் திகதி மாலை தஞ்சமடைந்திருந்தனர். அப்போது அங்கு சென்று அந்த மக்களை அமைச்சர் றிஸாட் பதியுதின் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்போது மன்னார் பிரதேசச் செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல்லும் சென்றிருந்தார்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற தேர்தலின் போது அரசுக்கு முஸ்லிம் மக்களாகிய நாங்களும் பூரண ஆதரவை வழங்கிவந்தோம். ஆனால் எங்களுடைய மீளக்குடியமர்வில் அரசு பாரபட்சம் காட்டி வருவதோடு எமது காணிகளை அபகரித்துக் கொள்ள நினைக்கின்றமை எவ்வகையில் நீதி? என அந்த மக்கள் கேள்வியெழுப்பு கின்றனர் (க- 601)

## சித்திபெற்ற மாணவர்களுக்கு கௌரவம்

முள்ளியவளை, நவ.15

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டம் நெத்தலியாறு தமிழ் வித்தியாலயத்தில் இன்று நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் நா.அக்கினேஸ்வரன் தலைமையில் முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

முல்லைத்தீவு பதில் கல்விப் பணிப்பாளர் மா.ராஜ குமார் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாமிடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும் பெற்ற மாணவன் ப.சேதுராகவன் இந்தப் பார்டசாலையில் கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க- 433)

## உலக வங்கியால் பூநகரிப் பகுதியில் பசளை,நெற் களஞ்சியங்கள்

கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் புதிய பசளைக் களஞ்சியம் ஒன்றையும் நெற் களஞ்சியம் ஒன்றையும் அமைக்க உலக வங்கி முன்வந்துள்ளது.

பூநகரிப் பிரதேசத்துக்கு வருகை தந்திருந்த உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் பிரதேச அமைப்புக்களாலும் அரச அதிகாரிகளாலும் விடுக்கப் பட்ட கோரிக்கையை அடுத்துப் பூநகரி , நல்லூர்ப் பகுதியில் புதிய உரக் களஞ்சியம் ஒன்றையும் நாலாம் கட்டைப் பகுதியில் புதிய நெற் களஞ்சியம் ஒன்றையும் என்றிப் திட்டத்தின் கீழ் உலக வங்கி அமைப்பதற்கு முன் வந்துள்ளது. அடுத்த ஆண்டு இதற் கான திட்டம் தெரிவு செய்யப் படும் என்றும் அதன் பின்னர் இவற்றை அமைப்பதற்குரிய செயற்பாடுகள் முன்னெடுக் கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மிகவும் பின் தங் கிய பூநகரிப் பிரதேசத்தில் இவை அமைக்கப்படுவதன் மூலம் பிரதேச விவசாயிகள் அதிக நன்மையடையவுள்ளனர். இதுவரை காலமும் தமக்குத் தேவையான பசளையைப் பெறுவதிலும் நெல்லை விற் பனை செய்வதிலும் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## யுத்தத்தின் கோரம்

அக்கராயன்,நவ.15

துணுக்காய் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் 20 விழுக்காடு மாணவர்கள் யுத்தத்தினால் தாய், தந்தையரை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினால் திரட்டப்பட்ட விபரங்களில் இருந்து இது தெரிய வருகிறது.

இந்தப் பாடசாலையில் 580 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இவர்களிலேயே 20 விழுக்காடு மாணவர்கள் தாய், தந்தையை இழந்துள்ளனர்.

தாய், தந்தையை இழந்துள்ள மாணவர்களுக்கு உதவி நிறுவனங்கள் உதவிகள் வழங்க முன்வர வேண்டும் என்று யோகபுரம் ம.வி.யின் பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (க-410)

## பறிக்கப்பட்ட கிரவல்மண் குவியல்களால் அவதிப்படும் உருத்திரபுரம் பகுதி மக்கள்

துணுக்காய், நவ.15

கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் பிரதேசத்தில் சிறு வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக இரண்டு மாதங்ளுக்கு முன்னர் பறிக்கப் பட்ட கிரவல் மண் குவியல்களால் மக்கள் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாமல் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

உருத்திரபுரம் வடக்கு நீவில் குடம் உருட்டிப் பகுதிக்குச் செல்லும் வீதியைப் புனரமைக்கவெனக் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பறிக்கப்பட்ட இந்தக் கிரவல் மண்ணால் வீதியைச் சீர்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வராததால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மேலும் இந்தப் பிரதேசங்களில் கனமழை தொடர்ந்து பெய்த வண்ணம் உள்ளது. இந்த வீதியில் குன்று குழிகள் ஏற்பட்டு மழை நீர் தேங்கியும் உள்ளது.

அத்துடன் பறிக்கப்பட்ட கிரவல் மண் மழை நீரால் கரைந்து சேறு, சகதியாக இருப்பதால் மக்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குப் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

உருத்திரபுரம் பகுதியில் அமைந்த பொதுச் சந்தை, வைத் தியசாலை, பாடசாலைகள், பிரசித்தி பெற்ற சிவன் ஆலயம் ஆகியவற்றுக்குச் செல்ல முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

இந்த வீதியை உடனடியாகப் புனரமைப்பதற்கு உரியவர்கள் முன்வரவேண்டும் என மக்கள் அவசர வேண்டுகையை விடுத்திருந்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லையென மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-415)

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சிறார்களுக்கிடையேயான போட்டி முடிவுகள்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரம் கிராமத்தில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் 3வயது தொடக்கம் 10வயது வரையான சிறார்களுக்கிடையே கடந்த 31ஆம் திகதி வாசிப்பு, சித்திரம் வரைதல் போன்ற போட்டிகள் உருத்திரபுரீஸ்வரம் கானகன் முன்பள்ளியில் நடத்தப்பட்டன. இவற்றின் முடிவுகள் பின்வருமாறு:

வாசிப்புப் போட்டி

10 வயது பிரிவு - ந.தர்சிகா முதலாம் இடம், ந.கயல்விழி இரண்டாம் இடம், சி.தர்சினி மூன்றாம் இடம்.

9 வயது பிரிவு- செ.யதுஷா- முதலாம் இடம், க.மதுவாசனா- இரண்டாம் இடம்,பா.நேருஜா, சு.கிருஷாந் ஆகியோர் மூன்றாம் இடம்.

8 வயதுபிரிவு- ஜெ.ஜெனிஸ்வரன் முதலாம் இடம். ச.சரத் குமார்- இரண்டாமிடம்

7வயது பிரிவு- செ.தாருசா முதலாம் இடம், யோ.டர்சிகன் -இரண்டாம் இடம், வை.யதுர்சன்- மூன்றாம் இடம்

6 வயது பிரிவு- சி.ஜனுசன்- முதலாம் இடம், பா.போபிசன்-இரண்டாம் இடம், இ.யது சாளினி-மூன்றாம் இடம்.

கவிதை கூறல்

9வயது பிரிவு- வை.இந்துஷா-முதலாம் இடம், இ.றஜீபன்-இரண்டாம் இடம்.

8வயது பிரிவு- வி.மகிஷா- முதலாம்இடம், ந.தேவிகா- இரண்டாம் இடம், கு.துவாரகன்- மூன்றாம் இடம்,

5வயது பிரிவு- இ.டனுசியா- முதலாம் இடம், த.தர்மிதன்- இரண்டாம் இடம், யோ.செந் தமிழ்செல்வன்-மூன்றாம் இடம்.

4வயது பிரிவு- சு.அபினா- முதலாம் இடம், நே.இலக் கியா- இரண்டாம் இடம், ச.தமிழ் நிலா-மூன்றாம் இடம்.

6வயது பிரிவு- ஜெ.ஜெனீபா- முதலாம் இடம், இ.குந்தவி- இரண்டாம் இடம், சு.சரண்யா- மூன்றாம் இடம்.

சித்திரம் வரைதல்

4வயது பிரிவு- தே.தனுஷன்-முதலாம் இடம்,ஜெ.பூங்கனி-இரண்டாம் இடம், ந.பவதாரணி-மூன்றாம் இடம்

3வயது பிரிவு- சு.புகழினி- முதலாம் இடம், சி.தமிழினி- இரண்டாம் இடம், பி.கலைமகள்- மூன்றாம் இடம். (க-426)

## வண்ணமிகு நிகழ்வு....



சிறந்த ஒழுங்கமைப்பு - துணுக்காய், யோகபுரம் மகா வித்தியாலயத்தில் சின்னம் சூட்டப்பட்ட மாணவர்கள் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (க-410)

# ஐக்கிய இராச்சிய சென்ற்.ஜோன் பல்கலைக்கழகத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக நிவில் வழிகாட்டுகிறது

சர்வதேச மாணவர்களை வரவேற் பதில் இங்கிலாந்தில் யோர்க் வீதியில் அமைந்துள்ள சென்ற் ஜோன் பல்கலைக்கழகம் நீண்ட கலாசாரத்தைக் கொண்டுள்ளது. மாணவர்கள் இங்கு கற்பதை ஏன் தேர்ந்தெடுக்கிறார்களென்பதற் குப் பல காரணங்கள் உள்ளன. யோர்க் சென்ற் ஜோன் பல்கலைக்கழகம் இங்கிலாந்திலுள்ள மிகவும் அழகிய, வரலாற்றுப் பெருமை கொண்ட நகரங்களிலொன்றான யோர்க் நகரின் மத்தியில் அமைந்துள்ளது. அத்துடன் மாணவர்களுக்கு மிகவும் உன்னதமான முறையில் கற்பித்தல் அளிக்கப்படுகின்றது. மிகச் சிறந்த அற்புதமானமாணவப் பருவ வாழ்க்கை, பரந்த பல்வேறுபட்ட கற்கை நெறிகள் போன்றனதாம் கல்வியின் எல்லையாக சென்ற் ஜோன் பல்கலைக் கழகத்தைத் தேர்ந்தெடுக்கச் செய்கின்றன.

ஆண்டுதோறும் 50 வெவ்வேறான நாடுகளிலிருந்து 300க்கும் அதிகமான சர்வதேச மாணவர்கள், யோர்க், சென்ற் ஜோன் பல்கலைக்கழகத்தில் கற்கைத் தெரிவு செய்கிறார்கள். அத்தோடு ஏறத்தாழ 20,000 மாணவர்களும், ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளும் ஆண்டு முழுவதும் இந்நகரத்துக்கு சுற்றுலா மேற்கொள்கிறார்கள். இது வசிப்பதற்கு மிகச் சிறந்த இடமாகும். மனதுக்கு ரம்மியமான அத்தனையும் இங்குண்டு. சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள், விடுதிகள், திரைப்பாட சாலைகள், இசை நிகழ்ச்சிகளுக்கான நிலையங்கள் என அனைவரது ரசனைக்கும் ஏற்ற அத்தனையும் இங்குண்டு. யோர்க் நகர மதில்களிலும், யோர்க் மினிஸ் ரிலும் வரலாற்றுச் சான்று பகரும் ரோமானிய கலை நுட்பங்கள் தென்படுகின்றன.

தற்போது ஏறக்குறைய 30 இலங்கை மாணவர்கள் இந்த பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருவதாக எமது சர்வதேச அபிவிருத்தி அலுவலர் திருமதி மெயர்றீட் கெலி குறிப்பிடுகிறார். எமது மேன்மைப் பட்ட நெறித் திட்டங்களால் சர்வதேச மாணவர் மத்தியில் நாம் பிரபலமடைந்துள்ளோம். அநேகமான எமது இலங்கை மாணவர்கள் முகாமைத்துவ, தலைமைத்துவ மேன்மைபட்ட நெறிகளைக் கற்பதற்காக எமது பல்கலைக் கழகத்தில் சேருகிறார்கள் என்றார்.

# கழுத்துப்புற்று நோய்க்கான தடுப்பு மருந்து 'க்ளெக்ஸோ ஸ்மித்கிளைன்'

க்ளெக்ஸோ ஸ்மித்கிளைன் (GSK) கழுத்துப்புற்று நோய்க்கான தடுப்பு மருந்தை மாலைதீவில் அறிமுகப்படுத்தியது. தென்னாசியாவிலுள்ள பெண்களுக்கு கழுத்துப்புற்று பொதுவான நோயாகும். கிளெக்ஸோ ஸ்மித்கிளைன் பார்மசூட்டிகல் GSK நிறுவனம் இந்த நோய்க்கான தடுப்பு மருந்தை அண்மையில் மாலைதீவில் அறிமுகம் செய்தது.

மஹரகமயில் உள்ள இலங்கை தேசியப் புற்றுநோய் நிறுவனத்தின் மகளிர் நோய்கள் பிரிவின் விசேட வைத்திய நிபுணரான டாக்டர் கனிஷ்கா கருணாரத்ன மற்றும் GSK நிறுவனத்தின் வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் லூசியன் ஜயசூரிய ஆகிய இருவரும் அறிமுக வைபவத்துக்கு தலைமை தாங்கினர். இவ்வைபவத்தில் மாலைதீவிலுள்ள ஏராளமான மகளிர் நோய் நிபுணர்கள், சிறுவர் நோய் நிபுணர்கள், பொது மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டனர். ''கழுத்துப் புற்று நோயும் அதற்கான தடுப்பும்'' என்ற தலைப்பில் உரையாற்றிய டாக்டர் கனிஷ்கா கருணாரட்ன பெண்களுக்கு மரணத்தை விளைவிக்கும் புற்றுநோய்களில் இரண்டாவது இடத்தை வகிப்பது கழுத்துப்புற்றுநோய் எனவும், உலகெங்கும் சுமார் 5 இலட்சம் பெண்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 280,000 பேர் வருடாந்தம் உயிரிழப்பதாகவும் கூறினார். பெரும்பாலான மரணங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே நிகழ்வதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

HP வைரஸின் தீவிர தாக்கத்தால் கழுத்துப் புற்றுநோய் உண்டாகின்றது. பாலுணர்ச்சி மிக்க பெண்களில் 80 வீதமானவர்களுக்கும் அதிகமானவர்கள் இந்த வைரஸின் ஏதாவது ஒரு தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். இவ்வாறான 15 HPவை ரஸ்கள் புற்று நோய்களை உண்டாக்குகின்றன. இந்தத் தடுப்பு மருந்தின் மூலம் 80 சதவிகித கழுத்துப் பற்றுநோயைக் கட்டுப் படுத்தலாம். 16 தொடக்கம் 18 வரையிலான HP வைரஸ் ரகங்களை இந்தத் தடுப்பு மருந்து கட்டுப் படுத்தும். உலக சுகாதார அமைப்பின் (WHO) Institut Catala d' Oncologia (Ico) தகவல் மையம் HP வைரஸ் மற்றும் கழுத்துப் புற்றுநோய் பற்றிய தகவல்களைத் தருகையில், மாலை தீவில் உள்ள 15 வயதும் அதற்கு மேற்பட்ட வயதையும் உடைய 97 ஆயிரம் பெண்கள் HPV மற்றும் கழுத்துப்புற்று நோய்க்கு இலக்காகும் அபாயத்தில் உள்ளதாகக் கூறுகிறது. அத்துடன் மாலைதீவில் இந்த நோய்க்கு ஆளானவர்களின் சரியான புள்ளி விவரம் இதுவரை கிடைக்கவில்லை எனவும் அந்த மையம் தெரிவிக்கின்றது. எனினும், மாலைதீவில் அமைந்துள்ள தென்னாசியப் பிராந்தியத்தில் வருடாந்தம் 169,854 பெண்கள் கழுத்துப் புற்றுநோய் சிகிச்சைக்கு உட்ப டுத்தப்ப டுவதாகவும் அவர் களில் 93,818 பேர் வருடாந்தம் மரணிப்பதாகவும் அந்த மையம் தெரிவிக்கின்றது.

# அங்கர் சவால்

பொன்டேரா நிறுவனத்தின் வர்த்தகநாமமான அங்கர் தனது 'அங்கர் சாதனையாளர் சவால்' நிகழ்வை கடந்த 2011 ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று கட்டுகஸ்தோட்டை ஸ்ரீ ராகுல மைதானத்தில் 27,000 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றிய நிலையில் ஆரம்பித்து வைத்திருந்தது. சிறுவர்களின் உள மற்றும் உடல்ரீதியான ஆற்றல்கள் தொடர்பில் பல்வேறு அம்சங்களையும் வெளிக்கொணரும் சவால் ஒவ்வொரு சிறுவர்களும் தங்களுக்குள் புதைந்து கிடக்கின்ற வெவ்வேறு திறமைகளை வெளிக்கொணர்ந்து 'சாதனையாளர்' என்ற வெற்றியை அடைந்துகொள்வதை ஊக்குவிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளது. வேறுபட்ட வயது மட்டங்களையும் சார்ந்த சிறுவர்கள் பங்குபற்றுவதற்காக புதுமையான மற்றும் ஆர்வத்தை தோற்றுவிக்கின்ற பல சவால்கள் நிகழ்வின் செயற்பாடுகளில் உள்ளடங்கியிருந்தன. முறையான போஷாக்கின் முக்கியத்துவம் தொடர் பில் பெற்றோருக்கான அறிவூட்டல் கருத்தரங்குகளும் முன்னணி போஷாக்கு நிபுணர்களால் நடத்தப்பட்டிருந்தன. அங்கரின் 125 ஆவது பிறந்த தினக்கொண்டாட்டங்களுடன் ஒட்டியதாக அடுத்த சாதனையாளர் சவால் நிகழ்வு 2011 நவம்பர் 5 ஆம் திகதியன்று காலியில் இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

# நிதிச் செயற்பாடுகள் பற்றிய செயலமர்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சியில் கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நிதிச் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்கும் செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளது.

வாடிக்கையாளர்கள் தமது வர்த்தகச் செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேன்மேலும் வெற்றிகரமாக மேற்கொள்ளும் வகையிலும் வர்த்தக நடவடிக்கைகளின் போதும் அன்றாட வாழ்க்கையிலும் மக்களுக்கு உதவியாக இருக்கக் கூடிய நிதிக்கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் பற்றிய மேலதிக தகவல்களை வழங்கும் வகையில் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து கொமர்ஷல் வங்கி ஏற்பாடு செய்துள்ள இந்த நிதிச் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்கும் இக் கருத்தரங்கு நாளை புதன் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பரந்தன் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரார் விடுதியில் நடைபெறவுள்ளதாக கொமர்ஷல் வங்கியின் கிளிநொச்சிக் கிளையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

# கிளிநொச்சியில் இலங்கை வங்கியின் குத்தகைக்கு வாகனம் வழங்கும் சேவை

கடந்த பல வருடங்களாக யுத்தம் காரணமாக பாதிக்கப் பட்டு இருந்த கிளிநொச்சி மாவட்டத்தில் வங்கிகள் கடன் வழங்க தமது கிளைகளை ஆரம்பித்து பல்வேறு அபிவிருத்தி செயல்பாடுகளையும் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளன.

இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக குத்தகை அடிப்படையில் வாகனங்களை பொது மக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளையும் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள இலங்கை வங்கி மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

வாகனங்களை குத்தகைக்கு வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க வாகனங்களின் விநியோக நிலையத்தை நாடா வெட்டித் திறந்து வைத்த பின்னர் வங்கி வாடிக்கையாளர் ஒருவருக்கு குத் தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வாகனத்தின் திறப்பைக் கையளித்தனர்.

(த-86)



இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையில் 18 பிளஸ் (18+) சேமிப்புக் கணக்குத் திட்டத்தில் கணக்கு வைத்துள்ள யுவதிக்கு தங்க நாணயம் பரிசாகக் கிடைத்துள்ளது.
தங்க நாணயத்தை கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர் யுவதியிடம் வழங்குவதையும் அருகில் வங்கி உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர். (த-207)

# கட்டடக் கலைஞர்கள் நிறுவனத்தின் அனுசரணையாளராக Alumex நியமனம்

இலங்கையின் முன்னணி அலுமினிய உற்பத்தியாளரான Alumex நிறுவனம் இலங்கைக் கட்டடக்கலை நிபுணர்கள் நிறுவகத்தின் (SLIA) 2011/2012 ஆம் ஆண்டு காலத்தின் பிரதான அனுசரணையாளராக நியமிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் SLIA இற்கும் Alumex இற்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் SLIA இன் தலைவர் கட்டடக் கலைஞர் ரஞ்சன் நடேசபிள்ளையும், Alumex நிறுவனத் தின் பணிப்பாளரும், பொது முகாமையாளருமான பிரமுக ததிவலவும் கைச்சாத்திட்டனர். SLIA யின் ஏனைய உறுப்பினர்களும் Alumex இன் பிரதிநிதிகளும் அங்கே பிரசன்னமாகியிருந்தனர்.

உயர்தரம் வாய்ந்த கட்டட, உபகரணங்களை சர்வதேச தரத்திற்கேற்ற விதத்தில் உற்பத்தி செய்வதில் புகழ்பெற்ற இலங்கையைச் சேர்ந்த நிறுவனங்களை தந்திரோபாய பங்காளர்களாக SLIA இணைத்துள்ளது. இதன்படி உயர்தரம் வாய்ந்த அலுமினிய உற்பத்தியாளர்களின் பெயர் பொது மக்களிடத்தில் பரவுவதற்கு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதன்படி இலங்கைக் கட்டடக்கலைஞர்கள் நிறுவகத்தின் வருடாந்த நிகழ்வான Architect 2012 இன் முதன்மை அனுசரணையாளராக Alumex விளங்கவுள்ளது. Architect 2012 நிகழ்வானது தேசிய மாநாடு, உறுப்பினர்களின் தொழிற்பாடு மற்றும் வர்த்தகக் கண் காட்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாக 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 22-26 வரையான திகதிகளில் BMICH இல் இடம்பெறும்.



ரஞ்சன் நடேசபிள்ளை (இலங்கைக் கட்டடக் கழகத் தலைவர்)

ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய SLIA யின் தலைவர் கட்டடக்கலைஞர் ரஞ்சன் நடேசபிள்ளை ''கடந்த வருடம் Alumex உடன் இணைந்து செயற்பட்டதன் மூலம் பெறுமதி வாய்ந்த அனுபவத்தைப் பெற்றோம். எமது இரு தரப்பினருக்கு மட்டுமன்றி இந்தத் தொழிற்றுறைக்கும், பொதுமக்களுக்கும் பயனளிக்கக்கூடிய இந்தக் கூட்டுச் சேர்தலை இவ் வருடமும் தொடர்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

கடந்த ஆண்டும் SLIA இன் பிரதான பங்காளராக Alumex விளங்கியிருந்தது. Alumex பணிப்பாளரும் பொதுமுகாமையாளருமான பிரமுக ததிவல SLIAயுடன் தொடர்ந்தும் பணியாற்ற கிடைத்தமைக்கான சந்தர்ப்பத்துக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார். ''SLIA, ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்றுறை அமைப்பு. அதன் Architect 2012 நிகழ்வானது எமது வணிகப் பெயரை பிரபல்யம் அடையச் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஆக அமையும்'' என்று Alumex குழும சந்தைப் படுத்தல் முகாமையாளரான திஸ்ஸ ஜயதிலக தெரிவித்தார். ''நாங்கள் உள்ளூர் கைத்தொழில்களை முன்னேற்ற விரும்பும் நிறுவனம். 100 வீதம் இலங்கைத் தயாரிப்புகளையே நாம் உற்பத்தி செய்கின்றோம்'' என்றார்.

# நிபந்தனைகளை மீறிய அரச சொத்துக்களை மீளப் பெறுவதில் தவறு ஏதும் உண்டா?

## கண்டியில் பிரதமர் கேள்வி

வத்துகாமம், நவ.15

நிபந்தனைகளை மீறிய அரச சொத்துகளை மீளப்பெறுவதில் தவறு ஏதும் உண்டா? மக்களின் சொத்தைப் பாதுகாப்பது அரசின் கடமை. சிலர் தனிப்பட்ட லாபங்களுக்காக எதிர்ப்புத் தெரிவித்தபோதும், அரசு மக்களின் நலனுக்காக முன்னெடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் கைவிடாது - என பிரதமர் டீ.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

கண்டி சிட்டி சென்டர் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சுற்றுலா கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு மக்களின் நலனுக்காக எதனைச் செய்ய முற்பட்டாலும் அதனை எமது நாட்டில் சிலர் எதிர்க்கின்றனர். நாடாளுமன்றத்தில் விவாதித்த சட்டமூலத்திற்கும் சிலர் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அந்தச் சட்டமூலம் என்னவென்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

அரச சொத்துகள் சிலருக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. அதன்மூலம் கூடுதல் லாபம் பெறவும் தொழில்வாய்ப்புகள் அதிகமாக வழங்கவும் அரசுக்குச் சேர வேண்டிய வரிப் பணத்தை உரியமுறையில் செலுத்தவும் அவர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது.



இந்த நிபந்தனைகளை மீறிய அரச சொத்துகளை மீளப்பெறுவதில் தவறு ஏதும் உண்டா? என்று கேட்க விரும்புகின்றேன். மக்களின் சொத்தைப் பாதுகாப்பது அரசின் கடமை. சிலர் தனிப்பட்ட லாபங்களுக்காக எதிர்ப்புத் தெரிவித்த போதும் அரசு மக்களின் நலனுக்காக முன்னெடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் ஒரு போதும் கைவிடாது.

சில மாதங்களுக்கு முன் 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ஒய்வூதியம் வழங்கும் சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அதை நடைமுறைப்படுத்தவிடவில்லை. 13 லட்சம் சிரேஷ்ட பிரஜைகள் நாட்டில் உள்ளனர். அதிகமான பெற்றோரைப் பிள்ளைகள் கவனிப்பதில்லை. அவர்களைக் கவனிக்க அரசு சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வந்த போது சிலர் அதனையும் எதிர்த்து அதனை நடைமுறைப் படுத்த விடவில்லை - என்றார். (ச)

# கஞ்சாவுடன் கைதான யுவதிக்கு விளக்கமறியல்

மஸ்கெலியா,நவ.15

குடாமஸ்கெலியா பகுதி வீடொன்றில் கஞ்சா விற்பனை செய்த யுவதி ஒருவரை மஸ்கெலியா பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர்.

இரவுநேர சோதனையில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸார் யுவதியைக் கைதுசெய்ததுடன் அவரிடமிருந்து குறிப்பிட்டளவு கஞ்சாவையும் கைப்பற்றினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட யுவதியை பொலிஸார் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ச)

# மலையக இளைஞர், யுவதிகளுக்கு இந்தியத் தூதர்களால் கணினிகள்

மஸ்கெலியா, நவ.15

மலையக இளைஞர் - யுவதிகளின் எதிர்கால நலன்கருதி அவர்களுக்கு கணினி உபகரணங்களை வழங்க இந்திய அதிகாரிகள் முன்வந்துள்ளனர்.

இந்தியத் தூதரக அதிகாரிகளான விஸ்வ நாதன் மற்றும் சுனில் ஆச்சார்யா ஆகியோருக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் நிதிச்செயலாளரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான முரளிரகுநாதனுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது அவர், மலையகத்தில் சாதாரணதரம் கற்று உயர்தரம் செல்லத் தகுதி பெறாத இளைஞர் - யுவதிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளதென்றும், அவர்கள் கூலி வேலைகளுக்குச் செல்ல நேரிடுகின்றது என்றும் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட் டினார்.

அதனால் அவர்கள் கணினித்துறையில் தேர்ச்சி பெறுவதற்கென கணினிகளை பெற்றுத் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தக்கோரிக்கையை செவிமெடுத்த இந்திய அதிகாரிகள் மலையக இளைஞர் - யுவதிகளுக்கு கணினிகளைப் பெற்றுக் கொடுக்க இணங்கினர் என்று முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

(ச)




உலக நீரிழிவு தினத்தினை முன்னிட்டு மக்களிடையே நீரிழிவு நோய் தொடர்பாக விழிப்பூட்டும் ஊர்வலம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலை முன்பாக நடைபெற்றது. (ச)

# மண் சரிவால் 63 குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, நவ.15

பதுளை -ஹல்துமுல்லை கொஸ்லாந்தைப் பிரதேசத்தில் மீரியபொத்த என்னுமிடத்தில் மண்சரிவு காரணமாக 63 குடும்பங்கள் இருப்பிடங்களிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சுமார் 5 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசமே இவ்வாறு மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து வெளியேறிய மக்கள் தற்காலிக இடங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெரு மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ச)

# திவிநெகும திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டும்

பொகவந்தலாவை, நவ.15

திவிநெகும திட்டத்தின் நன்மைகள் தோட்டப் பகுதிகளுக்கும் முழுமையாக விஸ்தரிக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசின் 'திவிநெகும' செயற்றிட்டமும், பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரையில் கண்துடைப்பானதொரு திட்டமென்று பெருந்தோட்டப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். பத்து லட்சம் 'மனைப்பொருளாதார அலகுகளை' ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'திவிநெகும' என்றழைக்கப்படுகின்ற தேசத்தின் எழுச்சித் திட்டம் தற்போது நாடளாவியரீதியில் பிரதேச செயலகங்கள் ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டுத்தோட்டத்தை அமைப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதில் வீட்டுத் தோட்டங்களைச் சுற்றி வேலியிடல், பயிர்களுக்கான விதையினங்களை வழங்கல், பயிர்களுக்கான பசளைகளை வழங்குதல் என்பன நடைமுறைப்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்ட பெருந்தோட்ட மக்கள் முழுமையாக உள்ளீர்க்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் தோட்டப்பகுதிகளில் திவிநெகும திட்டத்தின் முதலாம் கட்ட நடவடிக்கைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என்று பரவலாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தத் தடை

## கிழக்கு ஆளுநரின் செயலாளர் அறிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளவும் சேவையில் அமர்த்தும் நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது என ஆளுநரின் செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கும் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியானசேவைக்குரிய உத்தியோகத்தர்களுக்கான மீள்நியமனம், பதவி உயர்வு, சேவை நீடிப்பு என்பன பொதுச்சேவை ஆணைக் குழுவுக்குரிய அதிகாரங்களா கும். ஆனால், இவ்வதிகாரம் மாகாண சபைக்கு கையளிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# தீ விபத்து: வர்த்தக நிலையம் எரிந்து நாசம்

பூண்டுலோயா நகரிலுள்ள கடைத்தொகுதி ஒன்றில் நேற்று முன்தினம் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. பிரதேச மக்களும், பொலிஸாரும் இணைந்து நீரூற்றி தீயை அணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மின்சார உபகரணங்கள் விற்பனைநிலையம் ஒன்றிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (ச)

# நவீன முறையில் தபாலகம்

மஸ்கெலியா, நவ.15

தலவாக்கலை நகரில் நவீனமுறையில் தபாலகம் ஒன்றை அமைக்க அரசு முன்வந் துள்ளது. புதிய தபாலக கட்டட நிர்மாண வேலைக்காக தொலைத்தொடர்பு அமைச்சினால் ஒருகோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கிறீஸ்பூத பரபரப்பின்போது நடந்த தொட்டலாகல இரட்டைக்கொலை

## மற்றுமொரு சந்தேகநபர் கைது

அப்புத்தளை, நவ15

அப்புத்தளை, தொட்டலாகல பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் மேலுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தில் கிறீஸ்பூதம் பற்றிய அச்சம் நிலவிய காலகட்டமான கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தப் பிரதேசத்திற்கு பாய் வியாபாரத்திற்காகச் சென்ற இரு இளைஞர்கள் கிறீஸ் பூதங்கள் என்று சந்தேகிக்கப்பட்டு அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்தத் தோட்டத்தைச் சேர்ந்த இன்னுமொருவரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## தருவது வித்தியா
# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:**
உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். வெளியூர்களில் இருக்கும் சிலரை, தொலைபேசியில் தொடர்புகொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் செய்ய முடியாது என்று நினைத்த வேலை ஒன்றை, நீங்கள் செய்து காட்டுவீர்கள்.

**ரிஷபம்:**
வீட்டுக்குத் தேவையானபொருள்கள் வாங்குவீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பழகிய சிலர், உங்களை பகடைக்காயாகப் பயன்படுத்தி ஆதாயம் பெறுவர். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு உருவாகலாம். மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க, உடல் நலத்தில் கவனம் அவசியம்.

**மிதுனம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். பணத்தட்டுப் பாட்டை தீர்க்க, பிறரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். மாமன், மைத்துனர்கள் உங்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வர். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும், ஆதாயம் பெறவாய்ப்பு உண்டு. நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**கடகம்:**
தொழில் ரீதியான விடயங்களில் எந்த முடிவும் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். எதிரிகளின் சூழ்ச்சிகளை அறிந்து, அதற்கு ஏற்றாற்போல், தந்திரமாகச் செயற்பட முற்படுவீர்கள். கணவன், மனைவி இடையே, சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம். உடல் உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறைந்து சோம்பல் கூடும்.

**சிம்மம்:**
சகோதரிகள், பெண்கள் வழியில் சுபச்செவுகளைச் சந்திக்கலாம். தந்தை வழியில் ஏற்பட்ட சிரமங்கள் குறைந்து, அவரால் ஆதாயம் பெறலாம். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, முக்கியமான ஒருவரை பாதையில் சந்திக்கலாம். எதிர்பார்ப்புகள், ஆசைகள் பூர்த்தியாகும்.

**கன்னி:**
உறவினர்கள் ஒத்துழைப்பால் உருப்படியான வேலை ஒன்றைச் செய்வீர்கள். ஊக்கம், தன்னம்பிக்கையை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். உடல் உபாதைகளால் ஏற்பட்ட தொந்தரவுகள் குறைந்து, உற்சாகம் பெறுவீர்கள். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். தொழில் ரீதியான பணவரவு உண்டு.

**துலாம்:**
வழக்கமான சில பணிகளைச் செய்ய முடியாமல் ஏதாவது ஒரு வழியில் இழுபறிகளை எதிர்கொள்ளலாம். நல்லவர்கள் போல நடிக்கும் சிலரின் பேச்சைக் கேட்டு நடப்பதன்மூலம், சிரமங்களுக்கு ஆள்படலாம். வரவு ஒன்றை எதிர்பார்த்து குடும்பச் செலவுகளைசெய்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**விருச்சிகம்:**
நடப்பது நடக்கட்டும் என்று துணிச்சலாக சில வேலைகளைச் செய்து விட்டு பின்னர் மன வருத்தம் அடைவீர்கள். கடன் மிகுதிகள் வசூலாவது தள்ளிப் போகலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். நன்றி மறந்த சிலரை எண்ணி வேதனைப்படுவீர்கள். தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம்.

**தனுசு:**
திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும் நாள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். பழைய நண்பர்கள் சிலர் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம். வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல் எதிலும் ஒன்றுக்கு பலமுறை யோசித்துச் செயற்பட வேண்டும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

**மகரம்:**
போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழலாம். அரசியல் தொடர்புடையவர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கலாம். அயலாருடன் உங்களின் சுக துக்கங்களைப் பற்றிபேசி மகிழ்வீர்கள். சுகமான அனுபவத்தைப் பெறலாம்.

**கும்பம்:**
சிறிய தவறு ஒன்றுக்கு ஒருவரிடம் பெரிய அளவில் பேச்சு வாங்கலாம். உடல் நலம் பற்றிய கவலைகள் உண்டாகலாம். நண்பர் ஒருவரிடம் நீங்கள் சொல்ல நினைத்ததை மற்றவர்கள் சொல்வது போல் சொல்வீர்கள். சிலரிடம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம்.

**மீனம்:**
உங்களின் யோசனைகளுக்குகுடும்ப உறுப்பினர்கள் அமோக ஆதரவு தெரிவிப்பர். உறவினர்கள் சிலர் உங்கள் மூலம் காரியம்சாதிக்க முற்படுவர். அண்டை, அயலார் விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எதிலும் சிக்கனமாகநடந்து கொள்ள முற்படுவீர்கள்.

# அதிகாரம்! அ...
# இதனை அ...
# சிந்திக்க வே...

கேள்வி:- அரசின் முயற்சி தோல்விக்கான ஒன்று என்று கூறுகிறீர்களா?

பதில்:- ஆம். இந்த முயற்சிக்கு எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லை. எனக்கு சிரமத்தை ஏற்படுத்தவே இதனைச் செய்கின்றனர். எந்த நாளும் பத்திரிகைகளில் போடுகின்றனர். அதுவும் தலைப்புச் செய்தியாக. (சிரிக்கிறார்) பிரதம நீதியரசர் ஒருவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் செய்தவேலைகள் இப்போது எப்படி தலைப்புச் செய்தியாக வரும்? எனவே, யாராவது இதனைக் கொடுக்கிறார்கள். இது ஊடகங்கள் செய்யும் வேலை அல்ல. அழுத்தத்தினால் இடம்பெறும் விடயம் இது.

கேள்வி:- யார் அழுத்தம் கொடுப்பதாக நினைக்கிறீர்கள்?

**ஜனாதிபதி தான் காரணம்**

பதில்:- நான் நேரடியாகவே சொல்கிறேன். ஜனாதிபதிதான் இதன் பின்னால் உள்ளார். தெளிவாக நான் கூறுகிறேன். ஏனெனில், அவர் விடுத்த வேண்டுகோள்களுக்கு நான் இணங்கவில்லை. அரசுடன் சேர்ந்து வேலை செய்ய முடியாதென நான் கூறினேன்.

ஜனாதிபதியுடன் நான் இருக்கும் படம்கூட இரு மாதங்களுக்கு முன்னர் ஊடகங்களில் வெளியானது. இப்போது எனக்கெதிராகக் குற்றஞ்சாட்டும் நீதிபதிமாருக்கு ஜனாதிபதியினால் எதுவும் சொல்ல முடியாதா? நான் நற்சான்றிதழ் வழங்கிய ஒருவர் அவர், ஏன் இரண்டரை வருடங்களின் பின் இப்படி கேள்விகளை எழுப்புகிறீர்கள், இவ்வளவு காலம் நித்திரையில் இருந்தீர்களா? என்று ஏன் ஜனாதிப்தி கேட்கவில்லை...? அந்தச் சக்தி அவருக்கு இல்லையா? நான் தெளிவாகக் கூறுகிறேன்.

கேள்வி:- நீங்கள் ஜனாதிபதியைக் குற்றம் சாட்டினாலும் இந்த விடயத்தில் அவருக்கு ஏதாவது அழுத்தங்கள் இருக்குமென ஏன் நீங்கள் கருதவில்லை. அப்படி இருக்கலாமல்லவா? இல்லையேல் அவர்தான் செய்கிறார் என்கிறீர்களா?

பதில்:- அவருக்கு அழுத்தங்களை வழங்கி அவருக்கு மேல் சென்று செயற்பட இந்த நாட்டில் யாரும் இல்லை. அரசியல் ரீதியாக பார்த்தாலும் அவரது கட்சி, அரசியல் இரண்டும் அவரை மையப்படுத்தியே நிற்கின்றன. நான் செய்யும் விமர்சனங்களால்தான் இந்த நிலைமை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. அவருக்கும் இது அபகீர்த்தியை தரக்கூடிய விடயம். அவரின் நலனுக்காகவும்தான் இதனைக் கூறுகிறேன். பிரதம நீதியரசராக நான் இருந்தபோது விக்டர் ஐவன் போன்றோர் எந்நாளும் என்னை ஏசிக்கொண்டிருந்தனர். எனக்கெதிராக எழுதப்படுபவற்றை நான் வாசித்து என்னில் தவறு ஏதும் இருக்கிறதா என்று பார்ப்பேன். தவறு இருந்தால் திருத்திக்கொள்வேன். தவறு இல்லையேல் அவற்றை ஓரத்தில் போட்டுவிடுவேன். பிரதம நீதியரசராக இருந்துகொண்டு நான் அவர்களின் பின்னால் சென்றுகொண்டிருக்கக் கூடாது. நான் பதவியிலிருந்துகொண்டு அவர்களுக்கெதிராக நீதிமன்றம் சென்றால் வழக்கை விசாரிப்பவர்கள் எனக்குக் கீழே உள்ள ஆள்கள்தானே. அது தர்மமில்லை. இப்போது வேண்டுமானால் நான் வழக்குத் தாக்கல் செய்யலாம். ஏனெனில், எனக்குக் கீழே உள்ளவர்கள் விசாரிக்கும் அந்த கள நிலைமை இப்போது இல்லைத்தானே.

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடு எப்படியிருக்கும்?**

கேள்வி:- உங்களுக்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழு விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாதுரியமாக, அதாவது மனச்சாட்சியின்படி செயற்படுவார்கள் என்று நினைக்கிறீர்களா?

பதில்:- அவர்கள் அரசமைப்பில் உள்ளதை நன்கு வாசித்து அறிய வேண்டும். தமக்கிருக்கும் அதிகாரம் என்ன என்பதைப் பற்றிப் பார்க்க வேண்டும். RULE OF LAW என்பது முக்கியம். ஒரு நிறுவனம் ஒரு வேலையை செய்யும் முன்னர் தனக்கிருக்கும் அதிகாரம் என்ன என்பது பற்றிப் பார்க்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது. ஏனெனில், நாட்டின் நிலையைப் பாருங்கள். பொலிஸ் அதிகாரி ஒருவரை எடுத்துக்கொண்டால் தனக்கு கூடுதல் அதிகாரம் இருப்பதாக நினைக்கிறார் அவர். அடிக்க, உதைக்க அதிகாரம் இருப்பதாக நினைக்கிறார் அவர். அது தவறு. தனக்குள்ள அதிகாரத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். மக்களின் சக்தி, ஆணை என்பவற்றைச் சிந்திக்க வேண்டும். மக்களுக்காகச் செயற்படும் போது பொறுப்புடன் செயற்பட வேண்டும். எதையும் செய்வதற்கு அதிகாரம் இல்லாவிட்டால் செய்யக்கூடாது.

எனவே, பிரதம நீதியரசர்'ஒருவரை பதவியில் இருக்கும்போதுதான் விசாரிக்க முடியுமென்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிந்திருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்று அவர்கள் நினைப்பார்களாயின் வேறு எந்த நிறுவனங்களும் தேவையில்லைத்தானே. நீதிமன்றமும் தேவையில்லையே? நீதிமன்றத்துக்கு செல்லாமல் நாடாளுமன்றத்துக்குச் செல்லலாம் தீர்வுகளுக்காக.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று விபத்துக்குள்ளானால் நாடாளுமன்றம் செல்லலாம். ஏனெனில், போக்குவரத்துச் சபை அரச நிறுவனம் அல்லவா? அநீதி இழைத்திருப்பதாகக் கூறி செல்லலாமே? (சிரிக்கிறார்) எனவே, அதிகாரம் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் இந்த விடயங்களில் தெளிவான கொள்கை கிடையாது. இதற்கு மக்களின் கருத்தொருமைப்பாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும். எந்த அதிகாரியும் தனக்குள்ள அதிகாரத்தை முதலில் சிந்தித்துப் பார்த்து செயற்பட வேண்டும்



கேள்வி:- நீங்கள் கூறுவதுபோல் புத்தியைப் பயன்படுத்தி நன்கு சிந்தித்து இந்த அரசியற் பிரமுகர்கள் செயலாற்றுவார்களென நினைக்கிறீர் களா?

பதில்:- அறிவுடன் செயற்படவேண்டிய தேவை இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன்.

கேள்வி:- ஆனால், அரசியற் பிரமுகர்களுக்கு தனித்து செயற்படமுடியாது. கட்சி அல்லது ஒரு வரையறைக்குள்தானே அவர்கள் செயற்படமுடியும்?

**அரசியலமைப்பின்படி செயற்பட்டால் பிரச்சினை இல்லை**

பதில்:- அப்படிச்செய்தால் அது தர்மமில்லை; நீதியான விடயமில்லை. நான் நீதிமன்றத்தில் செயலாற்றும்போதுகூட சில விடயங்களைக் கூறியிருக்கிறேன். என்னாலும் தலையிடமுடியாத பல விடயங்களை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். சட்ட வரையறைக்குள் சில விடயங்களைச் செய்ய முடியும்.

அப்படி இல்லாதபட்சத்தில் நாம் அரசர் காலத்தில் போன்று சட்டமொன்று இல்லாமற் செயற்பட வேண்டும். வந்தோம், பார்த்தோம், செய்தோம் என்று இருக்கவேண்டும். இப்போது அப்படியில்லை. உயர் சட்டமொன்று இருக்கிறது அரசமைப்பு என்ற ரீதியில். அரசியலமைப்பில்தான் எல்லாமே வருகிறது. அரசியலமைப்பின்படி செயற்பட்டால் எந்தப் பிரச்சினையும் வராது. நன்றாக நடைமுறைப் படுத்தினால் அரசியலமைப்பையும் ஒழுங்காக அமுல்படுத்தலாம்.

அதிகாரத்தைப் பகிர்வதையும் ஒழுங்காக நடைமுறைப்படுத்தினால் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் எல்லாம் அவற்றில் உள்ளன. ஆனால், இவற்றை அமுல்படுத்தவேண்டும். இவற்றை மூடிமறைக்க முற்பட்டால் ஒன்றும் அமுலுக்கு வராது.

கேள்வி:- அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றில் இருக்கிறது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் உண்மை. அரசியல்வாதிகள் பலர் கட்சி தாவியதும்

# அதிகாரம்!!
# னைவருமே
# வேண்டும்

மையானதா, இல்லையா என்பதையே பார்க்கும். எமது எந்தவொரு கட்சியும் சரியான யாப்பைக் கொண்டிராமல் உள்ளன. இப்படி வழக்குகள் வந்தவுடன் இதுதான் சிக்கல்.


இந்த வழக்கு விடயத்தில் எல்லோரும் என்னைத் தான் விமர்சிக்கின்றனர். ஆனால், நான் அந்த உத்தரவைப் பிறப்பிக்கவில்லை. முதலில் 2000 ஆம் ஆண்டு சரத் அமுனுகம உட்பட்ட சிலர் ஐ.தே.கவிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வந்தனர்.

அப்போது அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். அதன்போது இந்த வழக்கு வந்தது. நான் அப்போது பிரதம நீதியரசர் என்றாலும் வழக்கை நான் விசாரிக்கவில்லை. அரசியல் ரீதியாக நான் செயற்பட்டிருந்தால், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சார்பாக நான் செயற்பட்டிருந்தால் அதனை நான்தான் விசாரித்திருப்பேன். அப்போது நான் நாட்டில்கூட இருக்கவில்லை. ரஞ்சித் அமரசிங்க நீதிபதிதான் இதனை விசாரித்தார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்க முன்னர் இயற்கை நீதிக்கமைய (NATURAL JUSTICE) நேர்மையான விசாரணை நடத்தப்படவேண்டும்.

**நீதிபதியின் தீர்ப்பு சரியானது**

அமுனுகம தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவில்லை. எனவே, அவர் நீக்கப்பட்டமைச் செல்லுபடியற்றதென்று அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் பல வழக்குகள் வந்தன. அவர்கள் இதனைப் பின்பற்றியே நடந்தனர். ஐ.தே.கட்சியின் யாப்பு குறித்தான பிரச்சினை இன்னமும் உள்ளது. யாருக்கு அதிகாரம் இருக்கிறது? நிறைவேற்றுக்குழுவுக்கா? செயற்குழுவுக்கா என்று பல்வேறு பிரச்சினைகள். நடந்தது என்னவெனில், அரசியல் கட்சிகள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதைக் கைவிட்டனர். கருஜயசூரிய 17 பேருடன் சென்றபோது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏனெனில், அவர்களது கட்சி யாப்பின்படி நடவடிக்கை எடுக்க முற்படும்போது மாவட்ட நீதிமன்றத்திற்குச்சென்று தடையுத்தரவைப் பெறுகின்றனர். சட்டத்தரணிகள் இதனை இப்போது நன்கு அறிந்துவைத்துள்ளனர். விசாரணை என்ற அறிவித்தல் வந்தவுடன் மாவட்ட நீதிமன்றத்துக்குச் சென்றுவிடுகின்றனர். இடைக்காலத் தடையுத்தரவை எடுக்கின்றனர்.

இடைக்காலத் தடையுத்தரவில்தான் இப்போது அந்த எல்லோரும் உள்ளனர். பெரிய ஒரு குறைபாடு இங்கே உள்ளது.ரஞ்சித் அமரசிங்க நீதிபதியின்



முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா

நேர்காணல்: **ஆர். சிவராஜா**

அரசுக்கு இந்தப்பலம் வரக் காரணமாக இருந்தது. அரசியற் பிரமுகர்கள் கட்சி தாவியதை நியாயப்படுத்தி நீதிமன்றத் தீர்ப்பு வந்தது உங்களின் பதவிக்காலத்தில்தான். இப்போது அந்தத் தீர்ப்பு உங்களுக்கே எதிரொலிக்கிறது போல் தெரியவில்லையா?

**கட்சி மாறுவது முடியாததல்ல**

பதில்:- நீங்கள் கேட்டது மிகவும் நல்ல ஒரு கேள்வி. பிரிட்டன் நாடாளுமன்ற முறைமையின் படியே எமது நாடாளுமன்ற முறைமையும் உள்ளது. பிரிட்டன் நாடாளுமன்ற முறைமையின்படி உறுப்பினரொருவர் தனது மனச்சாட்சியின்படி தம்மைத் தெரிவுசெய்த மக்களுக்காக கட்சியொன்றில் இருப்பது குறித்து தீர்மானிக்கமுடியும். அப்படித்தான் இது ஆரம்பிக்கப்பட்டது. எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷவின் தகப்பனார் டி.ஏ.ராஜபக்ஷ அவர்களைப் பாருங்கள். ஐ.தே.கவிலிருந்து மறுபக் கத்திற்குச் சென்றனர். இது சம்பிரதாயப்படி செய்யக் கூடிய செயல்தான். இந்த அரசமைப்பிலும் அது இருந்தது.

கட்சி மாறுவது முடியாதென்று இந்த அரசமைப்பிலும் கூறப்படவில்லை. முடியாது என்று கூறப்பட்டிருக்குமாயின் எமக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. இந்த அரசியலமைப்பில் புதுமையான அதிகாரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் தேவைப்படின் கட்சி உறுப்பினர் ஒருவரை நீக்கும் அதிகாரம் கட்சிக்கும் வழங்கப்பட்டுள்ளது. கட்சியிலிருந்து நீக்கினால் அத்துடன் ஆசனமும் இல்லாமல் போகும். ஆசனத்திலிருந்து ஒருவர் நீக்கப்பட்டால் அவர் கட்சியின் முடிவை ஆட்சேபித்து உயர்நீதிமன்றம் செல்லலாம். உயர் நீதிமன்ற மும் இரண்டுமாத காலத்தினுள் இதற்கான தீர்வை வழங்கவேண்டும்.

ஒருவர் கட்சி மாறுவது நேர்மையானதா, இல்லையா என்பதை உயர்நீதிமன்றம் இங்கே பார்க்காது. இவரை அகற்றியது நீதியானதா, இல்

தீர்ப்பு சரியானதுதான். இதில் எமது தவறில்லை.

கேள்வி:- அப்படியாயின் இப்போதாவது கட்சித் தாவல்கள் நிறுத்தப்படவேண்டுமென நினைக்கிறீர்களா? ஏனெனில், இந்த நிலைமை எதிர்காலத் தில் இன்னும் தீவிரமடைந்தால் அது சிறந்த விடயமல்லவே?

பதில்:- ஆம். நான் இப்போதும் நினைக்கிறேன். இதுகுறித்து நான் நிறைய எழுதியிருக்கிறேன். அண்மையில்கூட டெய்லிமிரர் பத்திரிகைக்கு கட்டுரை எழுதியிருந்தேன்.

முதலில் இந்தத் தேர்தல் முறைமையை மாற்றவேண்டும். தொகுதிவாரிமுறைமைக்குப் போகவேண்டும். தொகுதிவாரிமுறைமைக்குச் சென்றாலும் அங்கே யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் உறுப்பினர் எண்ணிக்கை குறையாது. தொகுதிக்கு ஒருவர் என்று இருப்பதால் எந்தப் பிரச்சினையும் வராது. தொகுதிகளுக்கேற்ப அது அமையும். அடுத்தது, விகிதாசாரப்படி ஒரு சாரார் நியமிக்கப்படுவர். நான் கூறுவது என்னவெனில், தொகுதிகளுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் கட்சி மாறினால் அவரின் தொகுதி இல்லாமற்போகும் என்பதுதான். பிறகு இடைத்தேர்தலொன்றுக்குச் செல்லலாம். அப்போது தீர்மானிக்கலாம். மறுபுறம் கட்சி மாறுவதற்கும் சுதந்திரம் இருக்கவேண்டும். ஒரு கட்சி ஊழல் மிகுந்து இருந்தால் ஒருவருக்கு அதில் இருக்கமுடியாது. அதில் இருக்காமல் வெளியேறும் உரிமை இருக்கவேண்டும்தான். மனச்சாட்சியின்படி நேர்மையாக செயற்படவும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமல்லவா? அப்படி மாற்றப்பட வேண்டும். விகிதாசார முறையில் உள்ள ஒருவர் கட்சிமாறினால் இன்னுமொருவர் அந்த இடத்திற்குப் போகக்கூடிய நிலைமை இருக்கவேண் டும். இவற்றிலிருந்து நாம் கற்கவேண்டும். ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன இந்த அரசியல மைப்பை அவசர அவசரமாக முன்வைத்ததன் விளைவுதான் இவை. முன்வைத்த பின்னர்தான் இதனை எப்படி அமுல்படுத்துவது என்று சுற்றிமுற்றும் பார்த்தார். *(இன்னும் வரும்)*

## விநோத ஆராய்ச்சி



அமெரிக்காவிலே கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலே Larry Seiden ஒருத்தர் இருந்தார். அவர் ஒரு ஆராய்ச்சியாளன். எதைப்பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று யோசித்தார். கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தார் -தற்கொலை பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும்.

தற்கொலை சாவுகளைப் பற்றி ஆய்வு செய்யவேண்டும். இவருக் கு ஆசை வந்தது!

அதற்கு என்ன செய்தார் தெரியுமா? அமெரிக்காவில் இரண்டு பாலத்தைத் தேர்ந்தெடுத் தார். சான்பிரான்சிஸ்கோவிலே இரண்டு பாலம் இருக்கிறது! Golden gate Bridge என்பது ஒரு பாலம். Bay Bridg என்பது இன்னொரு பாலம்.

இந்த இரண்டு பாலங்களும் 1930 இல் அமைக்கப்பட்டது. இந்த இரண்டு பாலங்களுக்கும் நீளம் ஒரே அளவுதான்! ஒவ்வொன்றும் 20 அடி நீளம்.

சாதாரணமாக அடிக்கடி இந்த இரண்டு பாலத்தில் இருந்தும் பலபேர் விழுந்து தற்கொலை செய்வது வழக்கம். அவ்வளவுக்கு தற்கொலை என்பது சாதாரணமாகப்போய்விட்டது.

இந்த ஆராய்ச்சியாளர் இந்த பாலங்களிலே இருந்து விழுந்து தற்கொலை செய்கின்றவர்களைப்பற்றி கணக்கெடுத்தார்.

இந்த இரண்டு பாலங்களிலிருந்தும் விழுந்து தற்கொலை செய்கின்றவர்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்துப் பார்த்தால் அதில் அதிகமான வித்தியாசம் இருக்கின்றது.

Bay Bridge இல் எவ்வளவு தற்கொலைகள் நடந்திருக்கின்றதோ அதைப்போல் 5 மடங்கு அதிகமாக Golden gate Bridge இல் நடந்திருக்கின்றது.

இதற்கு என்ன காரணமாக இருக்கும்? அதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தனர்.

Golden gate Bridg இற்கு புகழ் அதிகம்.

அதன் பெயர் சிறப்பானது Golden என்று பெயர் இருப்பதால் இந்த பாலம் கௌரவத்திலேயே கூடியது!

அதனாலேயே சாகப்போகின்றவர்கள் இந்தப் பாலத்தைத் தேடி வந்திருப்பார்களோ?

மனோதத்துவ ரீதியாக ஆராய்ச்சி செய்கின்றவர்கள் இது அப்படித்தான் நடக்கின்றது என்று சொல்கிறார்கள். சாகப்போகின்றவர்கள் கூட கௌரவமாகச் சாகணும் என்று நினைக்கிறார்களாம். அதனாலேதான் கௌரவமான பாலத்தைத் தேடி வந்து அதிலே இருந்து குதித்துச் சாகின்றனர் இன்னமும் சொல்லப்போனால்- Bay Bridge ஐ தாண்டி அந்தப் பக்கம் இருக்கின்றவர்கள் கூட - தற்கொலை என்று வருகின்றபோது அந்தப் பாலத்து வழியாகவே அதைத் தாண்டி இந்தப் பக்கம் வந்து Golden gate Bridge இல் இருந்து குதித்து இறக்கின்றனர். அப்படி என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். சாகின்றவர்கள் கூட கௌரவமாக சாகவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதைவிட வாழுகிறவர்கள் கௌரவமாக வாழ வேண்டும் என்று நினைத்தால் நல்லா இருக்கும் இல்லையா?

நல்ல விதமா ஒரு பாலத்தைக்கட்டி அதற்கு நல்ல விதமாக ஒரு பெயரை வைத்தால் கூட அதிலேயும் ஒரு கஷ்டம் இருக்கின்றது பார்த்தீர்களா?

இந்த கணக்குப்படி பார்த்தால் எமது ஊரிலேயே மக்கள், விரும்பமாகத் தேடி வந்து, கௌரவமாக தற்கொலை செய்கின்ற அளவுக்கு எந்த பாலமும் இருக்கிறதாகத் தெரியவில்லை!

அதனாலேதான் இங்கே எல்லாம் பாலத்தில் இருந்து குதித்து மனிதன் அதிகமாக தற்கொலை செய்வது இல்லை! அதற்குப் பதிலாக பஸ், ரயில் என்பதுதான் பாலத்திலே இருந்து குதித்து தற்கொலை செய்கின்றன! அது மட்டுமில்லை நம் மக்கள் தற்கொலை என்கிறதற்கு கொடுக்கும் விளக்கமே தனிவிதமாக இருக்கின்றது. ஒரு சாமி இப்படித்தான் ஒரு நாள் என்னிடம் வந்தார்.. அவரிடம் நான் மேலே உள்ள செய்தியை சொன்னேன்! அவரும் மிகவும் சுவாரஸ்யமாக கேட்டுக்கொண்டார். கடைசியாக நான் அவரிடம் கேட்டேன்!

''இப்படி பாலத்திலேயிருந்து குதித்துத் தற்கொலை செய்கின்றவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்'' என்று கேட்டேன் அதற்கு அவர்.... ''அதைப்பற்றியெல்லாம் நான் ஒன்றும் சொல்கிறதற்கு இல்லை.. ஏனென்றால்... நான் தற்கொலை பண்ணி 15 வருடம் ஆகிவிட்டது என்றார்! என்ன சொல்கிறீங்கள் என்றேன்! எனக்கு திருமணம் ஆனதை சொல்கின்றேன் என்றார்!

**கோ.சுவாமிநாதன்**

யாழ்ப்பாணம் கார்மேல் முன்பள்ளியின் சிறார்களின் பரிசளிப்பு விழா சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பீற்றோ ஞாபகார்த்த ஜுபிலி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு யுனிசெவ் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய கல்விக்கான சிறப்பு பிரதிநிதி ஹேமா வைநோட், அமலமரித் தியாகிகள் சபை சிறிய குருமட அதிபர் எஸ்.அன்புராசா அடிகள், கார்மேல் சபை கன்னியர் மட பொறுப்பாளர் அருட் சகோதரி அனிமேரி ஆகியோர் முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் அழைத்து வரப்படுகின்றனர். (ம-135)



# மாணவர்கள் கல்வி நிலையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும்

## 523 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி

தென்மராட்சி, நவ.15

காலத்தின் தேவைக்கேற்ப கல்வியின் வளர்ச்சியில் மாணவர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். புதிய கல்விக் கொள்கை மாணவர்களின் அறிவுத் திறனுக்கு பெரும் சவாலாக உள்ளது. இதனை ஈடுசெய்ய ஒவ்வொரு மாணவரும் தமது கல்வியை முழு நேரத் தேவையாகக் கருத வேண்டியுள்ளது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த பலர் யாழ். மண்ணில் கற்பதைப் பெருமையாகக் கருதினார்கள். வருடாந்தம் நூற்றுக் கணக்கான மாணவர்கள் இங்குள்ள பல பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்று அங்கு புகழ்பூத்த கல்வியாளர்களாகக் காணப்பட்டனர்.

யாழ். மண்ணின் கல்வி வளமான ஏனைய மாகாணத்தவர்களையும் கல்விக்காக இழுத்து வரச் செய்தது. அந்த அளவுக்கு கல்வி வளம் இங்கு உயர்வாக இருந்தது.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேச மாணவர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்த போதிலும் தமது கற்றல் செயற்பாட்டில் வீழ்ச்சி ஏற்படவில்லை. ஒவ்வொருமாணவனும்கல்வியை உயிர் மூச்சாகவே கருதி கல்வித் தரத்தை உயர்த்தப் பாடுபட்டனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 523 ஆவது படையணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணித பாட முன்னோடிக் கருத்தரங்கு அண்மையில் இடம் பெற்றது.

523 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிக்கேடியர் டி.பீ.என். தெமட்டப்பிட்டிய இதனை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில் அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றும் போது:

கல்வி வளத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க இவ்வாறான கருத்தரங்கை நடத்த எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு எமது படையணி பெருமையடைகிறது.

இவ்வாறான கருத்தரங்குகளை நடத்தி இந்தப் பிரதேச மாணவர்களுக்கு ஊக்கமளிக்கப்ப பாடுபட்ட எமது படையணியின் சிவில் நிர்வாக அதிகாரி கேணல் ஹர்ஷா அபேவர்த்தன, 11ஆவது விஜயபாகு படையணியின் லெப்.கேணல் ஹேமரத்ன ஆகியோரைப் பாராட்டுகின்றேன்.- என்றார். (ம-207)

# சமூகக் காரணிகளும் கற்றலில் பங்களிப்பு வழங்குகின்றன

## காணி நிர்வாகத் திணைக்கள பிரதம கணக்காளர்

வடமராட்சி, நவ.15

மாணவர்கள் கற்பதற்கான ஓர் இடம் பாடசாலையாக இருக்கின்றபோதிலும் மேலும் பல காரணங்களும் கற்றலை வளப்படுத்துகின்றன. பாடசாலை, சமூகம், குடும்பம் சகபாடிகள் போன்றவற்றின் முக்கியத்துவமும் கற்றலில் உணரப்பட வேண்டும்.

இவ்வாறு வடக்குமாகாண காணி நிர்வாகத் திணைக்கள பிரதம கணக்காளர் என்.இராசநாயகம் கரவெட்டி திரு. இருதயக் கல்லூரியில் நடந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அதிபர் நவநீதமணி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

ஆசிரியர்கள் மட்டுமல்லாமல் சமூகம் கற்றலைத் தூண்டி வருகின்றது. எங்கே அதற்கான கற்றல்சூழல் அமைய வேண்டும். சமூக அங்கத்தவர்களின் வழிகாட்டல்கள் பிள்ளை களுக்கு ஓர் உந்துசக்தியாக அமைய வேண்டும். அதேபோன்று குடும்பமும் ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியின் பொருட்டு தனது சிலதேவைகளைத் தியாகம் செய்ய முன்வரவேண்டும். குடும்ப அங்கத்தவர்களின் தூண்டுதல்கள், ஒத்துழைப்பு என்பன ஒரு பிள்ளையை மேலும் கற்கத் தூண்டுகின்றது.

பெற்றோர்கள் கல்விக்கான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். பிள்ளையைக் கண்ணும் கருத்துமாக நோக்க வேண்டும். பிள்ளைகளின் அன்புத் தேவை, பாதுகாப்புத் தேவை, கணிப்புத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். இல்லாவிடின் பிள்ளைகளின் மனக்குழப்பங்கள் தவிர்க்க முடியாததாகிவிடும்.

அடுத்து சகபாடிக் குழுக்களும் கற்றலை வளம்படுத்தும் நல்ல நண்பர்களோடு சேர்ந்து படிப்பதன் மூலம் ஒருபிள்ளை தன்னை வளம்படுத்திக்கொள்கின்றது. கலந்துரையாடல்கள் மூலம் கற்பதால் கற்ற விடயங்கள் எளிதில் மனதில் பதிவதோடு, ஞாபகத்தில் வைத்திருப்பது இலகுவாகின்றது.

எல்லாவற்றையும் விட சுயகற்றல் மிக முக்கியமாகும். தானாக விரும்பிக் கற்கும் விடயங்கள் எளிதில் மனதில் நிலை நிறுத்தப்படும் என்று ஆசிரியர்கள் பிள்ளைகளின் சுய கற்றலைத் தூண்டிவிட வேண்டும். ஒரு பிள்ளையின் கற்றல் வளம் படுத்த இவை எல்லாம் ஊக்கி களாக அமைகின்றன. அக ஊக்கிகளோடு, புற ஊக்கிகளும் சேர்ந்து செயற்படும் நிலையில் கற்றல் வெற்றியளிக்கும் என்பதை நாமனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.- என்றார்.

அதிபர் எம்.நவநீதமணி தலைமையுரையாற்றும்போது, மாறி வரும் கல்விச்சூழலுக்கு ஏற்ப மாணவர்கள் தம்மை தயார் படுத்தி கற்றலை மேற்கொள்ள வேண்டும். இதற்கு பாடசாலைகள் முக்கியம். கற்றலை மேற்கொள்ளும்போது மாணவர்கள் ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பெற்றோர்கள் மாணவர்களை நல்வழிப் படுத்த வேண்டும். இவை அனைத்தும் இணைந்த வழி சென்றால் கற்றலின் உயர்மட்ட அளவை ஒரு மாணவன் எட்டிப் பிடிக்க முடியும்.- என்றார். (ம-236)

# வடமராட்சி வலய மாணவரின் போட்டி முடிவுகள்

வடமராட்சி,நவ.15

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே பன்மைத்துவ கலாச்சாரத்தினூடாக சமாதானம் என்னும் தொனிப் பொருளில் வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விவரம் வருமாறு:

சித்திரம்

பிரிவு I - ஆர்.சங்கவி (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), எஸ்.அருள்நிலா (மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) , கே.யதுசாயினி (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்).

பிரிவு II - ஆர்.ஆர்த்திகா (கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), கே.சசிதரன் (மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), கே.யதுகோபி (தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்).

பிரிவுIII- எஸ்.கஜநாத் (மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ்.கோபிகா (கரவெட்டி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), எஸ்.அஜந்தன் (பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை).

பிரிவுIV - வை.பகீரதன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ஏ.பிரசாந்தன் (மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), கே.சிவதுஷன் (கரணவாய் மகா வித்தியாலயம்).

பிரிவுV- எம்.அபிராம் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ஜே.நிருபன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி).

கவிதை

பிரிவுI - ஆ.நொனாட்டோ (பருத்தித்துறை கரவெட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), ஜெ.ஜெயந்தன் (ஆழியவளை சி.சி. தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.அருள்ராஜ் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

பிரிவு II- எஸ்.சிந்துஜா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), என்.நினுஷா (மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), வி.சாளினி (கரணவாய் மகா வித்தியாலயம்).

பிரிவுIII-எம்.மாதுரி(பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.அனுசியா (கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்).

பிரிவுV-த.அகிதா(உடுத்துறை மகாவித்தியாலயம்). (ம-236)

## சித்திரப் போட்டி வெற்றியாளர்

தென்மராட்சி, நவ.15

கொழும்பு களனிப் பல்கலைக்கழகமும் வேள்ட் விஷன் நிறுவனமும் இணைந்து யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சித்திரப் போட்டியில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மாணவர்கள் இரு பிரிவுகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

வயது 6-7 பிரிவு- செ.திரோஜன், இ.திலக்ஸனா.

வயது 10-12 பிரிவு- ரா.அனுட்சன். (ம-207)

## மன்னார் பிரதேச சபைச் செயலருக்கு ஆறு விருதுகள்

யாழ்ப்பாணம், நவ.15

வடக்கு மாகாண சிம்போசிசம் மாநாட்டில் மன்னார் பிரதேச சபை செயலாளர் சி.எம்.யேசுநேசனுக்கு ஆறு விருதுகளை வழங்கி வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கௌரவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மாநாடும் மற்றும் கண்காட்சியின் இறுதிநாள் விருது வழங்கும் வைபவம் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி தலைமையில் இடம்பெற்றன.

இதில் மன்னார் பிரதேச சபைச் செயலாளர் சி.எம்.யேசுநேசனுக்கு 2009 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி வார முகாமைத்துவ போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்துக்கான விருதையும், மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்துக்கான விருதையும் 2010 இல் உள்ளூராட்சி வார முகாமைத்துவ போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம், மாகாண மட்டத்தில் முதலாம் இடம் சிம்போசிசம் நிகழ்வில் சிறந்த கூட்டத்துக்கான சிறப்பு விருது, பங்கு பற்றியமைக்கான விருது போன்றவற்றையும் வழங்கியுள்ளார்.

இதேவேளை 2007-2008 காலப் பகுதியில் இடம்பெற்ற உள்ளூராட்சி வார போட்டியிலும் மன்னார் பிரதேச சபை செயலாளர் சி.எம்.யேசுநேசனுக்கு சிறந்த செயலாளருக்கான விருதும் தேசிய மட்ட விருதும் சான்றிதழும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-302)

## நிர்வாகிகள் தெரிவு

காரைநகர், நவ.15

காரைநகர் சுந்தரமூர்த்தி, நாயனார் வித்தியாசாலை பழைய மாணவர் சங்கத்துக்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பாடசாலை அதிபர் சு.கணேசமூர்த்தியும் செயலாளராக ஓய்வுபெற்ற தபால் அதிபர் பொ.திருவாதிரையும் பொருளாளராக பாடசாலையின் ஓய்வு நிலை உப அதிபர் திருமதி ச.ரங்கநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் நிர்வாக குழு உறுப்பினர்களாக சி.சங்கரப்பிள்ளை, இ.கந்தையா, க.நவரத் தினம், வே.வீரசிங்கம், க.தில்லையம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-250)

# கனரக வாகனங்களால் நெருக்கடி மக்கள் பெரும் விசனத்தில்

வடமராட்சிப் பிரதேசத்தில் பிரதான வீதியில் நெல்லியடி தொடக்கம் பருத்தித்துறை வரை போக்கு வரத்து நெருக்கடி நிலவி வருகின்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள குடத்தனைப் பகுதியில் மணல் ஏற்றவரும் கனரக வாகனங்களான ரிப்பர், லொறிகள் என்பன தினமும் காலை முதல் மாலை வரை நெல்லியடி மந்திகை பிரதான வீதி மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியாசாலை வீதி, மந்திகை வல்லிபுரக் கோயில் வீதி ஊடாக சென்று வருகின்றன.

இவ்வாறு கனரக வாகனங்கள் இவ்வீதிகள் ஊடாகச் சென்று வருவதால் போக்குவரத்து அதிகம் உள்ள பகல் வேளைகளில் பொது மக்களும் இந்தவாகனங்களை செலுத்துவோரும் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

யுத்தத்துக்குப் பின்னர் நெல்லியடி, நகராக வேகமாக வளர்ந்து வருகின்றது. நெல்லியடியிலும் அதனூடாகச் செல்லும் பிரதான வீதிகளின் இரு பகுதிகளிலும் நாளாந்தம் செல்லும் பிரதான வீதிகளின் இரு பகுதிகளிலும் நாளாந்தம் புதிய புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வங்கிகள், வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் எனப் பலவும் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்களில் சேவைகள், தேவைகளைப் பெறுவதற்காகத் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் நெல்லியடி நகருக்குள் வந்து செல்கின்றார்கள். இந்த நிலையில் பெரும் போக்குவரத்து நெருக்கடி அங்கு ஏற்பட்டுள்ளது.

இப்போக்குவரத்து நெருக்கடிக்கு மத்தியில் மணல் ஏற்றிச் சென்று வரும் கனரக வாகனங்கள் வேகமாக குறித்த வீதியில் செல்வது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

இதேபோல் இவ்வாகனங்கள் நெல்லியடி தொடக்கம் மந்திகைவரை பயணிக்கும் போது, அப்பிரதான பாதையூடாக உள்ளூர், வெளியூர் மாவட்டங்களுக்கான இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் சேவைகள் மற்றும் ஏனைய வாகனங்களின் போக்கு வரத்து என்பன இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் கனரகவாகனங்கள் இதேபாதையால் சென்று வருவதால் ஏனைய வாகனங்கள் சென்று வருவதில் இடைஞ்சல்கள், இடையூறுகள், சிரமங்கள் ஏற்படுகின்றன.

அடுத்து மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ஆஸ்பத்திரி வீதி ஊடாகவும் இந்த கனரக வாகனங்கள் பயணிக்கின்றன.

அகலம் குறைந்த இந்த வீதியின் வடக்குப் புறத்தில் ஓட்டோ நீளமாக தரித்து நிற்கின்றன.

நெல்லியடி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களிலிருந்து இலங்கை போக்குவரத்துச் சபையின் மற்றும் தனியார் பஸ்களில் வந்து பஸ்தரிப்பிடத்திலிருந்து நடந்து வைத்தியசாலைக்குச் சென்று வரும் நோயாளர்கள் மற்றும் ஏனைய வாகனங்களில் வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றி வரும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஏனைய வாகனங்களில் பயணிப்போர் கனரக வாகனங்களால் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் ஆஸ்பத்திரி வீதியும் சேதமடையும் நிலை காணப்படுகின்றது.

வைத்தியசாலை அம்புலன்ஸ்களை இவ்வீதியூடாகச் செலுத்துவதில் சாரதிகள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

மந்திகை தொடக்கம் வல்லிபுரக் கோயில் வரையான வீதியில் மணல் ஏற்றி இறக்கும் கனரக வாகனங்கள் சென்று வருவதால் அவ்வீதி மிகக் குறுகிய காலத்தில் சேதமடைந்து பழுதடைகின்றன. இதனால் இவ்வீதி ஊடாக நடைபெற்று வரும் பருத்தித்துறை ஆழியவளை பாதையில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச., தனியார் பஸ்களும் வல்லிபுரக் கோயிலுக்குச் சென்று வரும் வாகனங்களும் போக்கு வரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வீதி ஊடாக கனரக வாகனங்கள் சேவையில் ஈடுபடுவதால் ஏற்படும் பாதிப்பு வைத்தியசாலைக்கு வந்து செல்லும் நோயாளர்கள் படும் சிரமம் அம்புலன்ஸ் வண்டிகளை சேவையில் ஈபடுத்துவதில் ஏற்படும் கஷ்டம் என்பனவற்றை விளக்கி இவ்வீதி ஊடாக கனரக வாகனங்கள் சென்று வரு வதை தடை செய்ய வேண்டும் என சில மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது.

அக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு குடத்தனைக்கு மணல் ஏற்றச் சென்றுவரும் கனரக வாகனங்கள் குடத்தனை, முள்ளி, வல்லை ஊடாகவே சென்று வர வேண்டும்.

எக்காரணம் கொண்டும் நெல்லியடி, மந்திகை, வல்லிபுரக்கோவில் வீதியைப் பயன்படுத்தக்கூடாது என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா உத்தரவிட்டு அதனை அமுல்படுத்துமாறு பருத்தித்துறைப் பொலிசாரையும் கேட்டுக் கொண்டார். இத் தீர்மானம் எடுக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த போதும் அத் தீர்மானம் அமுல் செய்யப்படவில்லை. தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் மீண்டும் ஒரு தடவை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்ற போதும் அத் தீர்மானம் அமுல் செய்யப்படுகிறதா இல்லையா என்று கூட மீளாய்வும் செய்யப்படவில்லை.

இதன் மூலம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் தீர்மானமும் இப்படித்தான் நடக்கிறதா? அப்படியானால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் மூலம் மக்களுக்கு கிடைக்கும் பலாபலன்கள்தான் என்ன என்று பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

**மாலவன்**

மக்களையும், பிரதான வீதிகளையும் பாதுகாத்து போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைக்க மணல் ஏற்றும் வாகனங்கள் வல்லை, முள்ளிச் சந்தி வல்லிபுரக் கோயில் வீதி ஊடாக போக்குவரத்துச் செய்ய பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச சபைகள் பொலிஸாருடன் இணைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதே நேரம் மணல் ஏற்றச் செல்லும் கனரக வாகன உரிமையாளர்களுக்கு இதற்கான பெமிற் வழங்கப்படும் போது சென்று வரும் பாதை குறித்து வற்புறுத்தி வலியுறுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக பொலிஸாரும் குறிப்பிட்ட பாதை களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடு பட்டு கனரகவாகனங்கள் சென்று வரும் பாதையைப் பயன்படுத்த வழி வகுக்க வேண்டும். இதன் மூலமே நெல்லியடி -மந்திகை பிரதான வீதியில் போக்கு வரத்து நெருக்கடிகளைக் குறைக்க முடியும்.

*

யா/நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம்
புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டு விழா - 2011



எமது மாணவச் செல்வங்களைவழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட எம் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எம்.ஞானதர்சினி அவர்களையும் ஆசிரியர்கள் திருமதி.விமலன் ஜெயபாரதி, திருமதி கவிதா சிவகாந்தி ஆகியோரையும் மாணவச் செல்வங்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1. புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் : இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில் நிற்பவர்கள்
அ.ஜதுர்சன் (176), க.சுடரோன் (178), அ.அபிசாந் (162) க.சஜித்தன் (151), ம.மதுரிகா (160), இ.விவேகா (151)

02. 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்: இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில் நிற்பவர்கள்:
மு.புகழரசி(133), ஏ.கஜானா(109), கு.நிருக்ஷிகா(122), ரா.ஷானுஜாமேரி(141)

03. இரண்டாம் வரிசையில் இடமிருந்து வலமாக நிற்பவர்கள்: சோ.சண்சிகா(130), யா.தர்சன்யா(142), சி.கௌதமி(134), த.சாருகா(126), ச.குகாஜினி(116), தி.சுதனிகா(100), ஜெ.டினோயா(122), ஜெ.காஜனா (115), கி.றோஸ்மேரி(109), த.மயூரி(144), சு.இளநிலா(122), ர.அபிவர்ணா(122), ரெ.தூரிகா(133), கி.தரணியா(150).

04. இடமிருந்துவலமாக மூன்றாவது வரிசையில் நிற்பவர்கள்: த.சங்கீதன்(126), ஜெ.கோபிகன்(147), த.சஜீவன்(142), தி.மயூரன்(145), ம.கஜரூபன் (133), அ.தேவ்றோகித்(112), கு.கவிராஜ்(117), க.அஜேய்(113), ச.அருண்குமார்(132), உ.ஆரணன்(143), ஜெ.விஜித்(131), ஜெ.ரிஷிகேசன்(144), த.தர்சிகன்(127), கி.கஜானன்(143), ச.நிரோஜன்(138), கி.குகேந்தகன்(139), ப.சாமுவேல் பிரியதர்ஷன்(104).

பெற்றோர்கள்.

(10371)(3,6,7)

உதயன்
15 நவம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# சேவை நலன் பாராட்டு



## திரு.இலட்சுமண சர்மா

**இலங்கை வங்கி முகாமையாளர் – மானிபாய்**

இலங்கை வங்கி சேவையில் 02.01.1975 இல் ஆரம்பித்து 36 வருடங்கள் திறம்பட கடமையாற்றி 2011 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் நாள் 60 ஆவது வயதில் ஓய்வுபெற்றுச்செல்லும் கந்தசாமி ஐயர் இலட்சுமண சர்மா அவர்களை மனதார வாழ்த்துகின்றோம். வாடிக்கையாளர்கள், வணிகர்கள் வளர்ச்சி பெறவும் மானிப்பாய் நகர் மக்களுக்கு தொண்டாற்றி ஆனந்தமாய் வாழ வழி சமைத்தவர். இவர் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| **யோய்ஸ் பார்மஸி**<br>மானிப்பாய் | **சு.சதீஸ்குமார்**<br>மானிப்பாய் | **ஐங்கரன் மோட்டோர்ஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **ரூபன் ஸ்ரோர்ஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **சுந்தர்சன்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். |
| **அபிநயா மல்ரி எலக்ரோனிக்கல்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **மகாலட்சுமி உணவகம்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **திருணா மரக்காலை**<br>மானிப்பாய். | **வி.எஸ்.எம் ஸ்ரோர்ஸ்**<br>ஆலடிச் சந்தி, மானிப்பாய். | **லக்கி கவுஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். |
| **மிதூஸ் புடைவையகம்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **அஜெய் பட்டுச்சோலை அன் பான்ஸி கவுஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **லக்ஷ்மி வீடியோ & ஓடியோ**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **அன்பு ஜுவலேர்ஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **பிள்ளையார் களஞ்சியம் அன்பான்சி ஹவுஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். |
| **தியாகராஜ சர்மா உமாசுதக் குருக்கள் குடும்பத்தினர்**<br>மானிப்பாய். | **மா.மனோகரன்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **இரத்தினம் சந்திரகுமார்**<br>சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. | **எஸ்.சுஜிதரன்**<br>நவாலி<br>மானிப்பாய். | **அபான்ஸ் காட்சியறை**<br>மானிப்பாய். |
| **பெஷன் மோட்டோர்ஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **வி.ஏ.மயூரன் மல்ரி சென்ரர்**<br>4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. | **பி.வி.எம். குருக்கள்**<br>பிரதான வீதி, மானிப்பாய். | **நாயகபாலன் ஸ்ரோர்ஸ்**<br>யாழ்.வீதி, மானிப்பாய். | **து.வைத்தீஸ்வரன்**<br>மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி, மானிப்பாய். |

(சி-5720)(1.6.7)

# புலோலி மக்களின் நலனுக்காக காந்தியூர் சனசமூக நிலையத்தின் பணி தொடரட்டும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் தூதரகத்துடன் சன சமூக நிலையம் தொடர்பு கொண்டதையடுத்து, இந்தக் கிணற்றை மக்கள் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்ய அந்தத் தூதரகம் நிதி உதவி வழங்க முன் வந்தது.

இந்த நிதியைப்பயன்படுத்தி மலைய கிணறு என்று அழைக்கப்படும் இந்தக் கிணற்றை 1999 ஆம் ஆண்டு சனசமூக நிலையத்தினர் புனரமைப்புச் செய்தனர். இந்தக் கிராமத்துக்கான ஒரேயொரு கிணற்றை புனரமைப்புச் செய்தது மிக அளப்பரிய சேவையாகும்.



இவ்வாறு உயர்ந்த நிலையில் இந்தச் சனசமூக நிலையம் இயங்கிக்கொண்டிருந்த வேளையில் 1995 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இந்தக் கிராமத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழும் இளைஞர்கள் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டு வந்த இலவசக் கல்வி நிலையத்துக் கென சொந்தக் காணியை வாங்கி நிரந்தர கட்டடம் ஒன்றை அமைக்க முன்வந்தனர். சுவிஸ், லண்டன், நோர்வே ஆகிய நாடுகளில் வாழும் இளைஞர்களில் சி.தங்க வடிவேல், சு.பாக்கியநாதன் ஆகியோரின் ஒருங்கிணைந்த சேவையால் 5 பரப்புக் காணி வாங்கப்பட்டு இலவசக் கல்வி நிலை யம் கட்டப்பட்டு, தற்போது அந்தக் கட்டடத்தில் இலவசக் கல்வி, பாலர் பாடசாலை என்பன இயங்கிவருகின்றன.

இலவசக் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு சுவிஸ், நோர்வே, லண்டனில் வசிக்கும் சி.தங்கவடிவேல், பா. யோகராசா பா. சத்தியநாதன் பா. காந்தன், க.யோகராசா ஆகியோரால் வழங்கப்பட்டு வருகிறது.

சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி க. சிவபாக்கியம், சி.தங்கவடி வேல் ஆகியோர் வழங்கியுள்ளார்கள், இதேபோன்று மலசல கூடம், நீர்த்தாங்கி, மின்சார இணைப்புகளை இலவசக் கல்வி நிலையத்துக்கு வெளிநாடுகளில் வதியும் இதே இளைஞர் குழுவினர் செய்துள்ளனர். அதுமட்டுமன்றி பொதுத்தேவைகளுக்குத் தேவையான கதிரைகள், நூலகத்துக்குத் தேவையான நூல்களையும் இவர்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

ஏற்கனவே காலை நேரத்தில் இந்தக் கட்டடத்தில் முன்பள்ளி வகுப்புகள் நடத்தப்பட்டுவந்தன. பிற்பகல் வேளையில் 5 ஆம் வகுப்புத் தொடக்கம், ஜீ.சி.ஈ. சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட இலவசக் கல்வி நிலையத்துக்கு தேவையான தளபாடங்கள் சனசமூக நிலைய நிதியிலிருந்து பெறப்பட்டன. இலவசக் கல்வி நிலையத்தில் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் சனசமூக நிலையமே சம்பளத்தை வழங்கி வந்தது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சில ஆசிரியர்கள் தொண்டு அடிப்படையில் இடைநிலை மாணவர்களுக்குக் கல்வியைப் போதித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உயர்ந்த நிலையில் இந்த சனசமூக நிலையம் இயங்கிக் கொண்டிருந்த வேளையில் 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் லண்டனில் வாழும் க. பாக்கியநாதன், சுவிஸில் வாழும் சி. தங்கவடிவேல் ஆகியோரின் ஒன்றிணைந்த முயற்சியால் சுவிஸ், லண்டன், நோர்வே போன்ற புலம் பெயர் நாடுகளில் வாழும் இந்தச் சனசமூக நிலையத்தின் முன்னாள் அங்கத்தவர்கள் அனைவரிடமும் நிதி திரட்டி இலவசக் கல்வி நிலையம் கட்டுவதற்கென 5 பரப்புக் காணி சனசமூக நிலையச் சுற்றாடலில் வாங்கப்பட்டது. தொடர்ந்தும் புலம்பெயர் சமூகத்தின் நிதி உதவியுடன் இலவசக் கல்வி நிலையம் கட்டப்பட்டது. இந்தக் கிராமத்திலிருந்த புலம் பெயர்ந்து வசிப்போர் விடுமுறைகளுக்கு தாயகம் வந்து செல்லும் போது அவர்களை அழைத்து விருந்து வழங்கி சனசமூக நிலையம் கௌரவித்து வருவதோடு, கிராமத்தின், சனசமூக நிலையத்தின் தேவைகள் குறித்து அவர்களுக்கு போதிய விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருவதால் இவர்களும் நிலைமையைப் புரிந்துகொண்டு காலத்துக்கு காலம் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

நாளொருமேனியும், பொழுது ஒரு வண்ணமுமாக வளர்ந்து வந்துள்ள இந்தச் சனசமூக நிலையம் பாலர் பாடசாலை இலவசக்கல்வி ஆகியவற்றை ஏற்படுத்தியதுடன் விளையாட்டுக் கழகம் ஒன்றையும் அமைத்து விளையாட்டுத் துறையையும் ஊக்குவித்து வருகின்றது.

இந்த சனசமூக நிலையம் 60 ஆவது ஆண்டான வைரவிழாவைப் பூர்த்தி செய்து பவள விழாவை நோக்கி வீறுநடை போட்டு வருகின்றது. இந்த வேளையில் அடுத்த புதிய இளம் தலைமுறை ஒன்று இந்தச் சனசமூக நிலையத்தின் நிர்வாகத்தைப் பொறுப் பேற்றுள்ளது.

சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, இலவசக் கல்வி நிலையம் ஆகிய வற்றை மிகத் திறம்பட நிர்வகித்து, அவற்றின் சேவைகளை விஸ்தரித்து மக்களுக்கு வழங்குவதோடு, கிராம அபிவிருத்தியையும், கடந்த இரண்டு தலை முறை நிர்வாகங்கள் செய்த சேவைகள் போன்று மேலும் நற்கருமங்கள் ஆற்றி இந்த கிராமத்தையும் கிராம மக்களையும் பல்வேறு தரத்தில் உயர்த்த வேண்டும். இந்த நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் நிறைவேற வேண்டு என்பதே காந்தியூர் கிராம மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**கர்ணன்**

முற்றும்

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 . 08 . 1949

உதிர்வு 15 . 11 . 2006



(4-67)(10353)

திதி: பூர்வபட்ச ஏகாதசி (6.11.2011)

திருமதி சின்னத்துரை நேசமலர்

ஆண்டு ஐந்து ஆனதம்மா, உங்கள் அன்பு முகத்தை நாம் பார்த்து
அன்பை அள்ளித்தந்து ஆசையுடன் அரவணைத்து
பண்புடனே நாம் வாழ வாழி காட்டி வளர்த்த எங்கள் அம்மாவே
எம்மை தனிவழியே விட்டு விட்டு நீங்கள் சென்றதன் மாயெமன்ன எங்கள் அம்மாவே
உங்கள் இழப்பு தாங்க முடியவில்லை அம்மா
பலகோடி இன்பங்கள் இருந்தென்ன உங்களைப் போல் வருமா அம்மா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல கரைப்பிரான்
ஆதி விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம் ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

37/21. ஸ்ரீ கல்யாணி கங்காராம மாவத்தை.
மட்டக்குளி. கொழும்பு -15
தொ.பே. இல:0114010126. 0212213058

என்றும் உங்கள் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
உடன்பிறப்புக்கள், பேரப்பிள்ளைகள்.

7 ஆம் ஆண்டு நினைவு தினம்

மண்ணில் 27 . 05 . 1933

விண்ணில் 15 . 11 . 2004



அமரர் அந்தோனிப்பிள்ளை இராயப்பு

கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல் என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது. ஆண்டவரே உமது மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும். தன்னார்வமனம் தந்து என்னைத் தாங்கியருளும் (திருப்பாடல் - 42)

அன்பால் அணைத்து அறிவால் உயர்த்தி
பண்பால் பார் போற்றிட வாழ் வைத்த தெய்வமே!
கண்ணை இமை காப்பது போல இரவென்றும்
பகலென்றும் எம்மையெல்லாம் பாதுகாத்து
வாழ்வில் எத்தனை இடர்கள் வந்தபோதும்
மரியன்னையின் துணையுடன் வழி நடத்தினீர்கள்.
இனிய நல்மொழி பேசி அனைவரையும் கவர்ந்த நீங்கள்
சொல்லாமல் கொள்ளாமல் ஏன் எம்மை விட்டுப் பிரிந்தீர்கள்.
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் என்றும்
எங்கள் உள்ளத்தில் வாழ்வீர்கள்.

(10437)(6,7,3)

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மிருசுவில் யோசேப் ஆச்சிரமத்திலும் யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திலும் இன்று( 15.11.2011) செவ்வாய்க் கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தவசிகுளம்,
மிருசுவில்.

இவரது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

# சித்தராஜர் வழிவந்த சித்த வைத்தியர் குணரத்தினம் - முத்துப்பிள்ளை தம்பதியினர் பெற்றெடுத்த முத்துக்கள் அத்தனையும் சித்த வைத்தியரே...



டாக்டர் திருமதி தெய்வானைப்பிள்ளை
பூலோக சுந்தரம்
11 ஆம் ஆண்டு நினைவில்..



டாக்டர் திருமதி சிவக்கொழுந்து
கந்தசாமி
21 ஆம் மாத நினைவில்..

தோற்றம்:
03.01.1927

மறைவு:
15.11.2000



அமரர் டாக்டர் குணரத்தினம் செல்லத்துரை
(ஓய்வுபெற்ற அதிபர், பிரபல வைத்தியர்)



டாக்டர் பொன்னம்மா செல்லத்துரை
(பாரம்பரிய வைத்தியர்)



டாக்டர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை



டாக்டர் குணரத்தினம் திருச்செல்வம்

ஒரு தாயின் வயிற்றில் உதித்தோம் - நாங்கள்
ஒற்றுமையாய் அகிலமதில் வாழ்ந்தோம்- நாங்கள்
பார்மீது எங்கள் குலத்தொழில் தான்
பரிகார வைத்தியமும் செய்து வந்தோம்
சீர்மேவும் எங்கள் குலப்பெருமை பேசச்
செகத்தினிலே ஒற்றுமையாய் வைத்தியமும் செய்து வந்தோம்
பேர்போன வைத்தியரே நாங்கள் - என்ற
பெருமை மீண்டும் பேசப் பிறப்பெடுப்போம்.
பிறப்பெடுப்போம் - பிறப்பெடுப்போமே.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இஞ்சி

பொதுவாக கிழங்கினங்கள் நிலத்தின் கீழ் காணப்படுவதால் ஐம்பூதங்களில் பிருதுவி அதிகமாக காணப்படுகின்றது. பாரத்தன்மை குருத்தன்மையாக காணப்படும். ஆனால் இஞ்சிக்கிழங்கு ஏனைய கிழங்குகளிலிருந்து விதிவிலக்கானது. இதில் தேயுபூதமே அதிகளவில் காணப்படுவதால் உணவு சமிபாட்டுக்கு உதவுகின்றது. அதனால் பொதுவாக வீடுகளில் உணவுகளில் சேர்க்கப்படுகின்றது.

உணவாகவும், மருந்தாகவும், மருந்துகளுக்கு அனுபானமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இவ் இஞ்சியானது அகட்டுவாய் அகற்றி பசித்தீதூண்டி உமிழ்நீர் பெருக்கி, வெப்பமுண்டாகி, செரிப்புண்டாக்கி ஆகிய செய்கைகளை செய்கின்றது.

அளவோடு உணவுடன் பயன்படுத்தினால் சளி இருமல், குமட்டல், பித்தநோய்கள் முதலியன நீங்கும்.

இஞ்சியை தவறாமல் உணவுடன் சேர்த்து கொள்பவர்களுக்கு உடல் அழகு பெறும், உடம்பில் இரத்தத்தில் கொழுப்பு சேராது. ஊளைச்சதை போடாது. நீண்ட ஆயுளை கொடுக்கும்.

## மருந்தாக...

இஞ்சியின் தெளிந்த சாற்றுடன், சமஅளவு தேனும் வெந்நீரும் கலந்து குடிக்க மார்பு வலி குணமாகும்.

சிறு துண்டு ஒன்றை துண்டுகளாக்கி எலுமிச்சம் சாற்றில் இட்டு சிறிதளவு உப்பு சேர்த்து உணவுக்கு அரைமணி நேரம் முன்பு சாப்பிட்டு வர நல்ல பசி உண்டாகும்.

காய்ச்சலுக்கு மிளகையும், (5,6) இஞ்சியையும் (சிறிய துண்டு) நன்றாக இடித்து நீர் விட்டு (100ml) காய்ச்சி வடிக்க அத்துடன் காய்ச்சிய பால் (½ கப்) சேர்த்து குடிக்க காய்ச்சல் குணமாகும்.

இஞ்சியை மேற்றோல் நீக்கி, சுத்தம் செய்து நன்றாக கழுவி, சிறு சிறு மெல்லிய வில்லைகளாக நறுக்கி, பீங்கான் பாத்திரத்தில் போட்டு மூழ்கும் வரை தேன் விட்டு கிளறி மெல்லிய வெள்ளை துணியால் மூடி தினசரி வெய்யிலில் வைத்து (நீர் சத்து சுண்டும் வரை) பத்திரப்படுத்தி வைத்தல் (இஞ்சி தேனூறல்), தினசரி காலை வெறும் வயிற்றில் ¼ - ½, தேக்கரண்டி சாப்பிட்டு வர காயகல்பமாகும். நரை, திரை,மூப்பு, பிணி இன்றி நீண்ட ஆயுள் வாழலாம்.

தேவையான அளவு இஞ்சி சாற்றுடன் தேன் சேர்த்து காய்ச்சி குங்குமப்பூ (5g) ஏலக்காய் (5g) சாதிக்காய் (5g) கராம்பு (5g) சேர்த்து இடித்தெடுத்த பொடியை சிறிது தூவிக் கிளறி எடுத்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளல். காலை,மாலை வெது வெதுப்பான நீரில் கலந்து பானம் போல குடித்து வர பித்தத்தினால் உண்டாகும். மயக்கம் நீங்கும். இரத்த அழுத்த நோயாளிகளுக்கும் சிறந்த மருந்து இதுவாகும். (நாளடைவில் மாத்திரை சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளலாம்.)

சுரத்திற்கான மருந்துகளை இஞ்சிக்சாறுடன் சேர்த்து சாப்பிடச் சொல்வார்கள். சுரத்தை தணிக்கும் தன்மையுள்ளதால் மருந்தின் செய்கையை தூண்டுகிறது. (அனுபானம்)

மேற்படி உள்ளியை அவித்தோ அல்லது வெந்தயத்துடன் அவித்து நீராகப் பருகலாம். உள்ளியை சுட்டு வெந்நீருடன் சாப்பிடலாம். வெங்காயத்தை பச்சையாக உண்டு வந்தால் இரத்தக் கொழுப்பை இல்லாமல் செய்து விடும். உள்ளியை உடைத்து துப்புரவாக்கி தேனில் வதக்கிச் சாப்பிட நெஞ்சு படபடப்பு குறைவடைவதோடு இருதய நரம்புகள் பலமடையும். இஞ்சி, மிளகு, உள்ளி மூன்றையும் தேனில் ஊறவிட்டு ஒவ்வொரு தேக்கரண்டி காலை,மாலை சாப்பிட்டு வர இருதயம் பலமடைவதோடு இரத்தக் கொழுப்பையும், இரத்தக் கொதிப்பையும் அகற்றும்.

பொன்போன்ற மேனியையும் எமது உயிரையும் எவ்வித தீங்கும் இன்றி நீண்ட காலம் வாழவைப்பதற்கும் பாரம்பரிய வைத்தியர் அமரர் குணரத்தினம் செல்லத் துரை அவர்கள் தன்னை நாடி வந்த நோயாளருக்கு நீண்ட காலமாக செய்து வந்த முறைகளைச் செய்து நாமும் சுகதேகிகளாக நீண்டகாலமாக வாழ்வோம் ஆக.

Dr. செ. கிருபாரத்தினம்.
அமரர் செல்லத்துரை
ஞாபகார்த்த வைத்தியசாலை , சுழிபுரம் மேற்கு.

*அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த வைத்தியசாலை சனி, ஞாயிற்றுக்கிழமை சுழிபுரத்திலும் மற்றைய நாள்களில் தில்லை கலட்டி ஒழுங்கை [உடல் நிலை சரியில்லாத காரணத்தால்] உடையார் வளவு சுன்னாகத்தில் நடை பெறுகிறது என்பதை அறியத் தருகிறேன்.*
தொ.பே: 0212240634

(10445)(1,6,7,8,)

# கீர்த்திகா என்னும் மலர் உதிர்ந்து இன்று மூன்றாம் ஆண்டு நிறைவு நாள்

எமதிதயம் மலர்ந்த நாள்
22.09.1988

எமதிதயம் உறைந்த நாள்
19.10.2008

திதி: பஞ்சமி (15.11.2011)



## செல்வி கீர்த்திகா புலேந்திரன்

அன்பிற்கு இனியவளே! பாசத்தின் உறைவிடமே
எம் இதயக் கமலமே கீர்த்திகா!
எம் வீட்டு ஒளி விளக்கே! எமதிதயத்தின்
உயிர் மூச்சே!
இன்று நீ இல்லாமல் துடிக்கின்றோம்
தவிக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் முதல் மலரே கீர்த்திகாவே!
உன் மலர் முகமும் புன்னகையும் காணாமல் தவிக்கின்றோம்
எம் இதயம் கனக்கின்றதே! கண்கள் இரண்டும் பனிக்கின்றதே!
மூன்றாண்டுகள் கரைந்தாலும் கரையவில்லை உன் நினைவுகள்
ஆற்றிடுவாய் தேற்றிடுவாய் நீ கனவில் வந்தென்றாலும்

கனிவான மலர் முகமும் கண் கொள்ளாப் புன்னகையும்
இனிவான உன் வார்த்தைகளும் இன்றெங்கே மறைந்ததுவோ
பல கோடி இன்பங்கள் இருந்தென்ன மறைந்தென்ன
மகளே! உன் வெற்றிடத்தை நிரப்புவார் யார் எவரோ?



வைரவர் கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

-குடும்பத்தினர்.

(10434) (2-6-7)

# விமானத்தில் அப்துல் கலாமிடம் சோதனை; அமெரிக்காவுக்கு இந்தியா எச்சரிக்கை

டில்லி, நவ.15

அமெரிக்காவுக்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிடம் விமானத்துக் குள் வந்து அதிகாரிகள் சோதனை நடத்தியமைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்திய அயலுறவுத்துறை அமைச்சகம், இந்த நடவடிக்கை தொடர்ந்தால் தாமும் அதே போன்று பதிலடி கொடுக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளது.

கலாமிடம் சோதனை நடத்தியது தொடர்பான செய்தி பரபரப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதரக அதிகாரி நிருபமா ராவை தொடர்பு கொண்ட இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா,

இந்தப்பிரச்சினையை உடனடியாக அமெரிக்க அரசின் உயர்மட்ட அளவில் கொண்டு சென்று இந்தியாவின் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு அறிவுறுத்தியுள் ளார்.

அத்துடன் இது தொடர்பாக விரிவான அறிக்கை அளிக்குமாறும் அமெரிக்காவி லுள்ள இந்திய தூதரகத்திற்கு இந்திய அயலுறவுத் துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில் இதுபோன்ற அவமதிப்புச் செயல்கள் அமெரிக்கா தரப்பில் தொடருமானால், இந்தியாவும் அதேபோன்ற பதிலடியைக் கொடுக்கும் என்று இந்திய அயலுறவுத் துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக கடந்த செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி கலாம் அமெரிக்கா சென்ற போதே இந்த சம்பவம் நடந்துள்ளது. ஜான் எப். கென்னடி விமான நிலையத்தில் நுழைந்த கலாமிடம், ஏனைய பயணிகளை சோதனை செய்தது போன்று அவரிடமும் அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதனைத் தொடர்ந்து கலாம் ஏர் இந்தியா விமானத்தில் ஏறி தனது இருக்கையில் அமர்ந்த பின்னரும், அங்கு மீண்டும் வந்த அதிகாரிகள் கலாமின் கோட் மற்றும் காலணியைக் கழட்டுமாறு கூறினர். பின்னர் அவற்றில் வெடிகுண்டு அல்லது வெடிபொருள் ஏதேனும் இருக்கிறதா என்று சோதனை நடத்தியுள்ளனர்.

இவ்வாறு கலாமிடம் சோதனை நடத்துவதற்கு அதிகாரிகள் வந்தபோது, ஏர் இந்திய விமான அதிகாரிகள், அவர் முன்னாள் ஜனாதிபதி என்று கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும், அவர்கள் அதனைப் பொருள் படுத்தவிலை.

இந்த சம்பவம் குறித்து ஏர் இந்தியா அதிகாரிகளும், மத்திய



சிவில் விமான போக்குவரத்து துறையும் மத்திய அரசிடம் முறைப்பாடு தெரிவித் ததைத் தொடர்ந்தே, தற்போது இந்தத் தகவல் வெளியாகி உள்ளது. முன்னாள் ஜனாதிபதி என்ற முறையில், அவரை சோதனை யிடக் கூடாது என்ற நடை முறையை மீறி இந்த சோதனை நடந்துள்ளது.

கலாமிடம் அமெரிக்காவில் இதுபோன்று சோதனை நடத்தப்படுவது முதன்முறையல்ல. அவர் கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றிருந்த போதும் இதேப்போன்று அவரை சோதனை யிட்டுள்ளனர். அப்போதே இந்திய அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தது. அதற்கு அப்போது அமெரிக்கா தரப்பில் வருத்தம் தெரிவிக்கப்பட்டபோதிலும், தற்போது மீண்டும் சோதனை நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தலைவர்களிடையே கருத்தொற்றுமை ஏற்பட்டால்தான் தனித்தெலுங்கானா

## மன்மோகன் கருத்து



தலைவர்கள் மத்தியில் கருத்தொற் றுமை ஏற்படாத வரையில் தனித் தெலுங்கானா குறித்து முடிவெடுக்க முடியாது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

தெலுங்கானா குறித்து பிரதமரின் கருத்து, காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டை விளக்குகின்றது என்று டி.ஆர்.எஸ் கட்சியின் தலைவர் சந்திரசேகர ராவ் தெரிவித்துள்ளார். சார்க் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு மாலைத்தீவுகளில் இருந்து இந்தியா திரும்பிய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெலுங்கானா குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது தெலுங்கானா தனி மாநிலம் உருவாவது குறித்து தலைவர்கள் மத்தியில் கருத் தொற்றுமை ஏற்படாதவரையில் முடிவு ஏதும் எடுக்க முடியாது என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பிரதமரின் கருத்து, தெலுங்கானா குறித்து காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டை எடுத் துக்காட்டுவதாக உள்ளது என்று டி.ஆர்.எஸ் கட்சியின் தலைவர் சந்திரசேகர ராவ் தெரிவித்துள்ளார். (வ)

# ராகுல் ஒரு முட்டாள்: சுவாமி விமர்சனம்

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தியை முட்டாள் என்று விமர்சித்துள்ளார் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி. அகமதாபாத்தில் சுப்ரமணியம் சுவாமி செய்தியாளர்களுக்குப் பேட்டியின் போது அவர் பதிலளிக்கையில்:

கேள்வி: ராகுல் காந்தியைப் பற்றி ஒரு வரியில் சொல்லுங்களேன்?

பதில்: அவர் ஒரு முட்டாள்.

கேள்வி: குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பிரதமராகத் தகுதியானவரா?

**பதில்:** 250 பேருக்கு பிரதமராகும் தகுதி இருந்தால் அது ஜனநாயகத்திற்குத் தானே நல்லது. தனிப்பட்ட முறையில் எனக்கு மோடியைத் தெரியும். அவரை நான் மதிக்கிறேன். அவர் மிகவும் நல்ல மனிதர். ஆனால் அவருக்கு பிரதமராகும் தகுதி இருக்கிறதா இல்லையா என்று கூற நான் யார்? - என்றார். (வ)

# பழங்குடியினப் பெண்களை கடத்தும் சம்பவம் அதிகரிப்பு

## அஜித் ஜோகி குற்றச்சாட்டு

சத்தீஸ்கர் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சரியில்லாததால் பெண்கள் கடத்தப்படும் சம்பவம் அதிகரித்துள்ளது.

கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 20,000 பழங்குடியினப் பெண்கள் கடத்தப்பட்டு டில்லி, மும்பை, பெங்களூர் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் விற்கப்பட் டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் அஜித் ஜோகி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்: பெண்கள் கடத்தப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டு டிசெம் பர் மாதம் பதவிக்கு வந்ததில் இருந்தே பா.ஜ.க. அரசு இந்த விடயத்தை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சரியில்லை. அதனால் தான் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஆள் கடத்தல் அதிகரித்துள்ளது- என்றார்.




மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்றது. இரண்டு நாள்கள் நடக்கும் இந்த மாநாட்டில் அதிகாரிகளும், அமைச்சர்களும் கலந்து கொண்டனர். (வ)

# போராட்டக்குழுவை மிரட்டுகிறது மத்திய அரசு

## சீமான் கண்டனம்

சென்னை, நவ.15

கூடங்குளம் விவகாரம் தொடர்பாக பிரதமர் அமைத்த நிபுணர் குழு, மக்கள் போராட் டக் குழுவி னருடன் ஒரே ஒரு முறை மட்டும் பேச்சு நடத்தியுள்ள நிலையில், போராட்டக் குழுவினரை மிரட்டும் முயற்சியில் மத்திய அரசு ஏன் இறங்கியுள்ளது என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளதாவது:

கூடங்குளம் அணு மின் நிலையம் தங்களின் வாழ் விடத்துக்கும், வாழ்வாதரங் களுக்கும் கேடானது என்று கூறி, அதனை மூடிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் அந்தப்பகுதி வாழ் மக்கள் தொடர்ந்து போராட்டம் நடந்தி வரும் நிலையில், அந்தப் போராட்டத்துக்கு எங்கிருந்து பணம் வருகிறத்து என்று விசாரணை நடத்தப்படும் என்று பிரதமர் அலுவலத்துக்கான மத்திய இணை அமைச்சர் வி.நாராணயன்சாமி கூறியி ருப்பது போராட்டத்தில் ஈடுபடும் மக்களை அவமதிக்கும், மிரட்டும் செயலாகும்.



அமைச்சர் நாராயணசாமியின் கூற்றை நாம் தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

கூடங்குளம் மக்களின் அச்சத் தைப் போக்க உதவுவோம் என்று கூறி, பிரதமர் அமைத்த நிபுணர் குழு, மக்கள் போராட்டக் குழுவினருடன் ஒரே ஒரு முறை மட்டும் பேச்சு நடத்தியுள்ள நிலையில், போராட்டக் குழுவினரை மிரட்டும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியுள்ளது ஏன்?என்று சீமான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# கூடங்குளம் போராட்டத்துக்கு எங்கிருந்து பணம் வருகிறது ?

## மத்திய அரசு விசாரணை

கூடங்குளம் அணு மின் நிலை யத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருவோருக்கு எங்கிருந்து பணம் வருகிறது என்பது குறித்து விசாரணை நடத்தப்படும் என்று மத்திய இணையமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

கூடங்குளம் அணு உலைப் பிரச்சினை தொடர்பாக மத்திய- மாநிலக் குழுகளுக்கு இடையே பேச்சு நடைபெற்று வருகிறது. இந்த விவகாரத்தில் சுமுகத் தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிராகப் போராட்டம் நடத்துவோருக்கு எங்கிருந்து நிதி வருகிறது என்பது குறித்து விசாரணை நடத்தப்படும்.

கூடங்குளம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக் குழுவின் தலை வர் உதயகுமார் பொய்யான தகவல்களை பரப்பி வருகிறார்.

அணுமின் நிலைய வளாகத்தில் 1,500 விஞ்ஞானிகளின் குடும்பங்கள் தங்கியுள்ளன. ஆபத்து இருக்குமேயானால் அந்த இடத்தில் 1500 குடும்பங்கள் தங்குவார்களா?.

எனவே, வீண் வதந்திகளைப் பரப்புவதை அவர்கள் கைவிட வேண்டும் - என்றார். (வ)

## சேவை நலம் பாராட்டி வாழ்த்துகிறோம்



02.01.1975 அன்று வங்கியில் இணைந்து 14.11.2011 இல் ஓய்வு பெற்று இன்று 15.11.2011 இல் 60 ஆவது அகவையை கொண்டாடும் எமது அன்புக்குரிய இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் முகாமையாளர்

### திரு.கந்தசாமி ஐயர் இலட்சுமணசர்மா

அவர்கள் அதிரடியாய் சாதனைகள் ஆற்றும் திறனோடு மதிநுட்பமும் சேர்ந்த மாண்பால் எம் வங்கி அதி லாபம் பெறச்செய்த ஜயாவை, நாம் நன்றி பொதிந்த நல் அன்போடு போற்றி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இலங்கை வங்கி.
மானிப்பாய்.
விரிவாக்கற் கிளை - சங்கானை.

(10432) (4-6-7)

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

## சைவ சித்தாந்த வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், நவ.15

இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் சைவ சித்தாந்த வகுப்புக்கள் நேற்று திங்கட்கிழமை முதல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண சிறிய மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றன. சென்னை இராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தாக் கல்லூரிப் பேராசிரியர் சா.சரவணன் இந்த வகுப்புகளை நடத்தி வருகின்றார்.

தொடர்ந்து 10 தினங்கள் காலை 9மணிக்கு இடம்பெறும் இந்த வகுப்பில் ஆர்வலர்கள் கலந்து பயன்பெறலாம்.

(வ-313)

### யேசி பசு மாடு விற்பனைக்கு

வலி மேற்குப் பிரிவில் 3½ வயது நிரம்பிய யேசி பசு மாடு, நிறை மாத சினையுடன் (10, 15 நாள்களுக்குள் கன்று ஈனக்கூடிய நிலையில்) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் பி.ப. 5 மணிக்குப் பின்னர். நிறம் மண்ணிறம் கலந்த வெள்ளை.

தொடர்புகளுக்கு: 0779454649

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள அசோக் லேலன் டிப்பர் தொடர் இல. LB xxxx, மஞ்சள் நிறம் விற்பனைக் குண்டு.

தொடர்பு. 0776679498

### வாகனம் விற்பனைக்கு

கன்ரர் TATA 909 ரகம்
26000 Km பாவிக்கப்பட்டது.
தொடர்பு 0778195896,
0774742535

## மரண அறிவித்தல்கள்

### சுவாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை



புக்கை தின்னிப் பிள்ளையார் கோயில் வீதி, கூழாவடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை நேற்று (14.11.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அடக்கத்துக்காக இன்று (15.11.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புக்கை தின்னிப் பிள்ளையார் வீதி,
கூழாவடி, ஆனைக்கோட்டை. (10375) (4-6-7)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(மகன் சந்திரன்)

### சுப்பிரமணியம் இராசையா



புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், தற்போது பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசையா 08.11.2011 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், யசோதாவின் (யசி) அன்புத் தந்தையும், அருளானந்தனின் (சுதன்) அன்பு மாமனாரும், இராசம்மா (செல்லம்மா -இந்தியா), தனபாக்கியம் (இலங்கை), காலஞ்சென்ற கனகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அகஷியா, யதுஷியா, அகிஷன், விதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2011) செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு பிரான்ஸில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி: Cimetiere des
Joncherolles - 95 Rue Marcel
Sembat - 93430 Villeatancuse (10458)(3,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடன விரிவுரையாளர் திருமதி சுபாஜினி தயாபரன் அவர்களது அன்புக் கணவர்

**சி.தயாபரன்**

(அதிபர், யாழ்.கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை, வரணி) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10456)(3,6,7) நடன ஆசிரியர்கள், தென்மராட்சி.

### பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பிமுத்து சோமசுந்தரம்**

மலர்வு
01.04.1942

உதிர்வு
29.10.1999

திதி: பஞ்சமி 15.11.2011

உள்ளத்து விளக்காய் ஒளிதந்து
கள்ளமில்லாப் புன்னகையால் வாழ்வளித்து
வையத்துள் வாழ்திட்ட உத்தமரே நீர்
சொல்லொணாத் துயரளித்து சுவர்க்கம்
சென்றதென்ன

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

தங்கள் பிரிவால் துயருறும்: மனைவி

(10457) (4-6-7)

ISUZU

DFCC லீசிங்



மிக உன்னதமானதொரு இணைப்பில்
அதி உன்னதமான பல சலுகைகள்

இலங்கையின் ட்ரக் விற்பனையில் முதலிடம் வகிக்கும் இசுசு வண்டிகளின் ஏகமுகவர்களான **சதொச மோட்டர்ஸ் பீஎல்சீ** நிறுவனத்துடன், இலங்கையின் முதலாவது மற்றும் முன்னணி அபிவிருத்தி வங்கியான **DFCC வங்கி** இணைந்து, இலகு முறையில் வர்த்தக ட்ரக் வண்டிகளை கொள்வனவு செய்ய விசேட லீசிங் வசதிகளையும், சிறப்புச் சலுகைகளையும் உங்களுக்குப் பெற்றுத்தர காத்திருக்கின்றன.

**SML இடமிருந்து**

- ரூ. 50,000/- வரையான விலைக்கழிவு.
- 06 இலவச சேவைகள். (மூலப்பொருட்களுக்காக மாத்திரம் அறவிடப்படும்)
- 40,000 கி.மீ. அல்லது 02 வருட உத்தரவாதம்.
- என்ஜினுக்கு 100,000 கி.மீ. வரையான உத்தரவாதம். (சதொச மோட்டர்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் நிர்வகிப்பிலிருக்க வேண்டும்)



**DFCC லீசிங் இடமிருந்து**

- குறைந்தபட்ச தவணைகள்.
- உங்களின் வருமானத்திற்கேற்ற கொடுப்பனவுமுறை.
- இலகுவான காப்புறுதிக் கட்டுப்பாடுகள்.
- DFCCயின் அனைத்து சேவைகளையும் பெறும் வாய்ப்பு.

இச்சலுகை 2011 ஒக்டோபர் 01 முதல் டிசெம்பர் 31 வரை மட்டுமே.

• நிபந்தனைகள் உண்டு.

**SML சதொச மோட்டர்ஸ் பீஎல்சீ** (PQ 105)
25, வொக்சோல் வீதி, கொழும்பு - 02. தொ.பே: 011 4943500, 011 2331622, 011 2431568, 011 2432858, 011 4939187 தொலைநகல்: 0114 713663
உடனடி அழைப்புகள்: 0114 714077, 0112 327360,
கபில - 0779 419000 ரஞ்சித் - 0777 354155 சந்தன - 0777 420491
சம்பத் - 0777 420442 ஷங்கர் - 0779 667797
மின்னஞ்சல்: isuzusales@sml.lk இணையதளம்: www.sathosamotorsplc.com

**DFCC வங்கி**
மேலதிக விபரங்களுக்கு : 0112880901/02/03/05/06/07, 0773 060006, 0773 060000
மின்னஞ்சல் : leasing@dfccbank.com
இணையதளம் : www.dfccbank.com

DFCC BANK

# அணு ஆயுதத் திட்டத்தை ஈரான் நிறுத்த வேண்டும்

## இஸ்ரேல் பிரதமர் கோரிக்கை

ஜெருசலேம், நவ. 15

ஈரான் தனது அணு ஆயுதத் திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வளைகுடா நாடான ஈரான் தனது அணு ஆயுதத் திட்டத்தை மறைமுகமாக நிறைவேற்றி வருகிறது என்றும், இதற்காக யுரேனியம் செறிவூட்டும் மையங்களை அதிகரித்து வருகிறது என்றும் முறைப்பாடு எழுந்துள்ளது.

சர்வதேச அணுசக்தி முகமையும் ஈரானை எச்சரித்துள்ளது. ஐ.நாவிலும் ஈரான் மீது தடைவிதிக்க பரிசீலித்துவருகிறது. இஸ்ரேல் அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகூ கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது, ''ஈரான் தனது அணு ஆயுதத்திட்டத்தை கைவிட வேண்டும். ஐ.நா., சர்வதேச சமூகம் ஆகியன அணுஆயுதத் திட்டத்தை நிறுத்துமாறு ஈரானை வலியுறுத்த வேண்டும். சர்வதேச அணுசக்தி முகாமை மீண்டும் ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தை தீவிரமாகக் கண்காணிக்கவேண்டும். ஈரானின் இந்தச் செயல் சர்வதேச சமூகத்திற்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்''. - என்றார்.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் ஈரானின் அணு ஆயுதம் குறித்து சர்வதேச அணுசக்தி முகாமை தலையிடக் கோரி விவாதம் நடத்தி எம்.பி.க்கள் தீர்மானம் நிறைவேற்றவுள்ளனர் என இஸ்ரேல் சபாநாயகர் அலி லர்ஜானி கூறினார்.

# சர்வதேச விமானக் கண்காட்சி இம்முறை துபாயில் இடம்பெறும்

துபாய், நவ. 15

சர்வேதேச விமானக் கண்காட்சி ஐக்கிய அரசு எமிரேட்ஸ் நாடான துபாயில் ஆரம்பமாகியது. முதல் நாளிலேயே 50 விமானங்களை துபாய் அரசு அமர்த்தியது. ஆண்டுதோறும் விமானக் கண்காட்சிகள் ஆசிய, ஐரோப்பா ஆகிய நாடுகளில்தான் நடைபெறுவது வ்ழக்கம். இந்தத் தடவை வளைகுடாவில் நடைபெறுகிறது. ஐக்கிய அரபு எமிரேட் நாடான துபாயில் ஞாயிற் றுக்கிழமை கோலாகலமாக இக்கண்காட்சி ஆரம்ப மாகியது. மொத்தம் 5 நாட்கள் (17ஆம் திகதி வரை) நடக்கும் இந்தக் கண்காட்சியில், 120 இற்கும் மேற்பட்ட நாடுகளின் விமானங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் விமான சாகஸ நிகழ்ச்சிகள் நடந்தன.

பின்னர் அமெரிக்காவின் 777 ரக போயிங்க் விமானங்களை வாங்க துபாய் அரசு முடிவு செய்து அதற்கான கோரிக்கையை விடுத்தது. இதன் மொத்த மதிப்பு 18 பில்லியன் டொலராகும். மொத்தம் 30 முதல் 50 விமானங்களை வாங்க துபாய் முன் வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தம், அராப் எமிரேட்ஸ் தலைவர் ஷேக் அகமது பின்-மக்தும், போயிங் விமானத் தயாரிப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகளிடையே ஞாயிற்றுக்கிழமை கையெழுத்தானது.

# அமேசன் காடு உலக அதிசயமாகிறது

ஜெனிவா, நவ. 15

இயற்கையாக உருவான அதிசயங்கள் பற்றிய பட்டியலை சுவிற்ஸர்லாந்திலுள்ள 'புதிய 7 அதிசயங்கள் அறக்கட்டளை' வெளியிட்டு வருகிறது. அதன்படி, உலகளவில் 7 அதிசயங்களின் தற்காலிக பட்டியல் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது.

அந்தப் பட்டியலில் முதல் இடத்தை ஆபிரிக்காவைச் சேர்ந்த அமேசான் காடு பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தை வியட்நாம் ஹலாங் வளைகுடாவும், மூன்றாவது இடத்தை ஆர்ஜென்டினா இகுசு நீர்வீழ்ச்சியும் பெற்றுள்ளன.

இதுதவிர, தென் கொரியாவின் ஜேஜு தீவு, இந்தோனேசியாவின் கொமாடோ, பிலிப்பைன்ஸின் தரைக்கு கீழ் ஓடும் புயர்டோ பிரின்சிசா ஆறு, தென் ஆபிரிக்காவின் டேபிள் மலை ஆகியவையும் அதிசய பட்டியலில் உள்ளன. உலக அதிசயங்கள் குறித்த அதிகாரபூர்வ இறுதிப் பட்டியல் அடுத்த ஆண்டு (2012) ஆரம்பத்தில் வெளியாகிறது.



அமெரிக்க அரசின் தேவையற்ற செலவினங்களைக் குறைப்பது குறித்த மசோதாவிற்கு வாஷிங்டனில் நடந்த கூட்டத்தின்போது ஜனாதிபதி ஒபாமா ஒப்புதல் அளித்து கையெழுத்திடுகிறார்.

## உறவினர்களால் புறக்கணிப்பு: இராணி எலிபெத் வேதனை

இலண்டன், நவ. 15

பிரிட்டிஷ் இராணி எலிசபெத்தின் தாயாருடன் பிறந்த சகோதரர் ஜோன்போவ்ஸ் லியான். இவரது புதல்விகள் நெரிசா, காத்ரீன் போவ்ஸ்லியான். நெரிசா கடந்த 1986ஆம் ஆண்டு இறந்துவிட்டார்.

85 வயதான காத்ரீன் மிகவும் உடல்நலம் குன்றிய நிலையில் ஒக்லாந்து அறக்கட்டளை நடத்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவர்களை கடந்த 50 ஆண்டுகளாக இராணி எலிசபெத்தும், அவரது அரச குடும்பத்தினரும் கண்டுகொள்ளாமல் புறக்கணித்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் குறித்து டாக்குமெண்டரி படம் இலண்டனிலிருந்து ஒளிபரப்பாகும் சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. அதில், நெரிசா சிகிச்சைபெற்றபோது அவரைப் பார்க்க இராணி எலிசபெத் வைத்தியசாலைக்கு வரவில்லை. இறுதிச்சடங்கில் அவரோ, அரச குடும்பத்தினரோ பங்கேற்க வில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதே போன்றுதான் காத்ரீனும் புறக்கணிக்கப்பட்டு வருகிறார் என்றும் தகவல் வெளியானது.

இதையறிந்த இராணி எலிசபெத்மிகவும்மனவேதனை யடைந்தார். இந்தத் தகவலை அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.இந்தத் தகவல் முற்றிலும் சுத்தமான வடிகட்டிய பொய். அவர்களைப் பார்க்க இராணி எலிசபெத் வைத்தியசாலைக்குச் சென்றார். ஆனால், அவரை அவர்கள்கண்டுகொள்ள வில்லை. பேச மறுத்துவிட்டனர். எனவே, அவர் திரும்பி வந்துவிட்டார் எனக் கூறியுள்ளனர். (எ)

# 18 வயது மாணவரொருவர் அமெரிக்க மாநகர மேயர்

அர்டாலி, நவ. 15

அமெரிக்காவில் 18 வயது பாடசாலை மாணவரொருவர் மாநகர மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். அமெரிக்காவின் லோவா மாகாணத்திற்கான உள்ளூராட்சித்தேர்தல் கடந்த 11ஆம் திகதி நடந்தது. இதில் அர்டாலி என்ற மாநகராட்சி மேயர் பதவிக்கு அங்குள்ள ஹாம்டன் டூமவுன்ட் என்ற பாடசாலையில் படித்து வந்த ஜெர்மி மின்னீர் (வயது - 18) என்ற மாணவர் மேயர் வேட்பாளராகப் போட்டியிட்டார்.

இதில் 24 வாக்குகள் பெற்று மேயராகத் தெரிவு செய்யப்பட்டார். இம்மாணவரை எதிர்த்துப் போட்டியிட்டவரும் தற்போது மேயராக இருந்தவருமான வெர்ஜில் ஹோமர் வெறும் 8 வாக்குகள் மட்டுமே பெற்றார். அம்மாகாணத்தின் கே.ஜ. எம்.டி. என்ற தொலைக்காட்சி சேவையொன்று செய்தியை வெளியிட்டுள்ளது.

இது குறித்து மேயராகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் ஜெர்மிமின்னீர் கூறுகையில், ''எனது தந்தை, நான் பிறப்பதற்கு முன்னர் இம்மாநகராட்சியின் முன்னாள் மேயராக இருந்தவர். தற்போது நான் மேயராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன்'' என்றார்.

அடுத்த ஆண்டு ஜனவரி 3ஆம் திகி மேயராகப் பதவி யேற்கவுள்ளார். நான்கு ஆண்டுகள் இப்பதவியில் இருப்பார் ஜெர்மி மின்னீர்.

# சீனாவில் தினமும் 10 ஆயிரம் விவாகரத்து வழக்குகள் பதிவு

பீஜிங், நவ.15

உலகளவில் பொருளாதார வளர்ச்சியை எட்டும் வகையில் சீனா முன்னேறிக்கொண்டிருந்தாலும், சீனர்களின் குடும்ப வாழ்க்கையில் மிகப்பெரிய சோகம் நிலவுகிறது. கணவன்-மனைவி தகராறு காரணமாக விவகாரத்து வழக்குகள் அதிகமாகக் குவிகின்றன.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு மட்டும் இதுவரை 28 இலட்சம் விவகாரத்து வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதாவது, சராசரியாக 10 ஆயிரம் விவகாரத்து வழக்குகள் பதிவாகி இருக்கின்றன.

கடந்த 5 ஆண்டுகளாகவே ஆண்டுதோறும் 7 சதவீதம் அளவுக்கு விவாகரத்து முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன. அது, இந்த ஆண்டில் 12 சதவீதமாக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில்,பீஜிங், ஷாங்காய் ஆகிய மிகப்பெரிய நகரங்களில் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட 30 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் சீனர்கள் மத்தியில், ''பொருளாதார ரீதியாக, சுயமாக நானே வசதியுடன் இருக்கிறேன்.

என்னை எவரும் கட்டுப்படுத்துவதை விரும்ப வில்லை'' என்பதே தாரக மந்திரமாக உள்ளது.

# அவசர அரபு உச்சிமாநாட்டைக் கூட்டுமாறு சிரியா கோரிக்கை

## லீக்கின் இடைநிறுத்த முடிவுக்கும் கடும் கண்டனம்

டமாஸ்கஸ், நவ.15

அரபு லீக் அமைப்பிலிருந்து தன்னை இடைநிறுத்தம் செய்வதற்கு சிரியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இடைநிறுத்தம் செய்வதற்கான முடிவு கைவிடப்படவேண்டும் என்றும் இதன் பொருட்டு அவசர அரபு உச்சிமாநாடு கூட்டப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

சிரியாவின் உறுப்புரிமையை இடைநிறுத்தம் செய்வதற்கும், அதற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கும் அரபு லீக் எடுத்துள்ள முடிவுகளால், சிரிய ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள். அத்துடன், வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

அரபு லீக் சனிக்கிழமை கூடி மேற்கொண்ட இம்முடிவுகள் நாளை புதன்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இம் முடிவுகளுக்குப் பெரும் வரவேற்புத் தெரிவித்துள்ள அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் சிரிய ஜனாதிபதியை உடனடியாகப் பதவி விலகுமாறு கோரிக்கை விடுத்துள்ளன. அத்துடன், இதற்கு அழுத்தம் கொடுக்குமாறும் அவை ஐ.நாவை வலியுறுத்தியுள்ளன.

அதேவேளை, சிரிய எதிரணி குழுக்களின் பிரதிநிதிகளை இன்று செவ்வாய்க்கிழமை, அரபு லீக் பிரமுகர்கள் சந்தித்து கள நிலைவரங்கள் குறித்து ஆராய்வார்கள் என ஞாயிற்றுக்கிழமை மேற்படி லீக்கின் பொதுச் செயலாளர் நபீல் எலாரபி தெரிவித்துள்ளார். லிபிய தலைநகரான திரிபோலியில் நடைபெற்றபத்திரிகையாளர் மாநாடொன்றில் இத்தகவலை வெளியிட்டுள்ள நபீல் எலாரபி, கேள்வியொன்றுக்குத் தாம் அளித்துள்ள பதிலில், ''எதிரணியினர் கூட்டு நிர்வாக சபையை ஓர் அரசவை என உடனடியாக அங்கீகரித்துவிட இயலாது. அதேவேளை, அது தொடர்பான விவாதத் துக்கு இன்னும் காலம் கனிய வில்லை'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவசர உச்சிமாநாடொன்றைக் கூட்டுமாறு சிரியா வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து 22 உறுப்புநாடுகளைக் கொண்ட அரபு லீக்கின் எத்தகைய கருத்தும் உடனடியாக வெளியாகவில்லை என ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரபு லீக் இதற்கு முன்னர் லிபியாவை இடைநிறுத்தம் செய்து வைத்தது. அத்துடன், அதன் ஆகாயப் பரப்பில் விமானங்கள் பறக்கத் தடைவிதித்தது. அதனால், ஐ.நா. பாதுகாப்புச் சபை, பொதுமக்களைப் பாதுகாக்க நேட்டோ ஆதரவுப் படைக்கு ஆதரவு வழங்கியது; புரட்சியாளர்களுக்கும் உதவியளித்தது.

# 14 வயதுப் பிரிவு உதைபந்தாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.15

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி சம்பியனானது.

நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணிகளும் மிகுந்த உற்சாகத்தோடு மோதிக் கொண்டன. இதன் போது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினருக்கு கோல் பெறும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அதனை யாழ்.மத்திய கல்லூரி அணியின் கோல் காப்பாளரினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இரண்டு அணிகளும் மாறி மாறி எதிர் அணியினரின் கோல்ப் பரப்பினுள் கோல் பெறுவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்ட போது அனைத்து முயற்சிகளும் கை கூடாது போனது.

இதனால் ஆட்டம் இடை வேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது இரண்டு அணிகளும் எது வித கோல்களை யும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.



முதலாம் பாதி ஆட்டத்துக்காக இடை நிறுத்தப்பட்ட ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமான போது இரண்டு அணிகளும் தத்தமது அணிக்கான கோல்களை பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு களம் இறங்கின. இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் விறுவிறுப்பாக அமைந்தது.

இதன் போது யாழ்.மத்திய கல்லூரி அணி வீரன் நிக்சன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் தமது அணிக்கான கோல்களைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் அடுத் தடுத்து பல முயற்சிகளை மேற் கொண்டனர்.

அது யாழ். மத்திய கல்லூரி கோல் காப்பாளரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஆட்டம் முடிவில் யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய மட்ட சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணி வீரர்களும் மிகவும் உற்சாகத்தோடு விளையாடினர்.

இதன் போது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர்களான கனிஸ்ரன், கபிலன் ஆகியோர் தங்களது அணிக்காக கோல்களைப் பெற்றுக் கொடுக்க கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இடை வேளைக்காக ஆட்டம் இடை நிறுத்தப்பட்ட போது 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணி வீரர்களும் மிகவும் உற்சாகத்தோடு தங்களது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்றஎண்ணத்துடன் களம் இறங்கினர்.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது இரண்டு அணி வீரர்களும் கோல்கள் பெற பல முயற்சிகளை எடுத்த வண்ணம் இருந்தனர்.

இதன் பயனாக கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரன் டிசாந்தன் தனது அணிக்கான கோலைப் போட்டார். இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியினர் தங்களது அணிக்கான கோல்கள் பெறவேண்டும் என்று உற்சாகத்தோடு விளையாடினர்.

ஆட்டம் முடிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியினர் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய மட்டத்தில் மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டனர்.

(ம-23)

## சமநிலையில் முடிந்த ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ 15

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும்தலா ஒரு கோலைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

## மெய்வன்மைப் பயிற்சி முகாம்.

வவுனியா மாவட்டத்தில் பாடசாலைகளின் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான மெய்வன்மை பயிற்சி முகாம் கடந்த சனி, ஞாயிறுக்கிழமைகளில் வவுனியா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் 30 பேர் கலந்து கொண்டனர்.

மேற்படி உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான மெய்வன்மைப் பயிற்சியினை இலங்கை மெய்வன்மைச் சம்மேளன அதிகாரிகள் நடத்தினார்கள்.

இந்த மெய்வன்மைப் பயிற்சி முகாமை வவுனியா மெய்வன்மைச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. (த-23)

# துஷ்யந்தனின் அதிரடி ஆட்டத்தில் ஐங்கரா வி.க.சம்பியனானது



யாழ்ப்பாணம்,நவ .15

துஷ்யந்தனின் அதிரடி ஆட்டமும் ரமேஸின் ஹட்றிக் சாதனையும் கை கொடுக்க ஐங்கரா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பகுதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட 9 பேர் பங்கு பற்றும் மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் சனிக்கிழமை பொலிகை பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழக அணி 12 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் துஷ்யந்தன் 12 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 80 ஓட்டங்களையும் ரகு 40 ஓட்டங்களையும் ஜீவன் 31 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக அனுசயந்தன் 3 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் குணதீபன், 3 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சுகந்தன் 40 ஓட்டங்களையும் துஷ்யந்தன் 30 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஐங்கரா விளையாட்டுக் கழக அணி சார்பாக 3 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் துஷ்யந்தன் 3 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழக அணி 55 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக ஐங்கரா விளையாட்டுக் கழக அணி வீரன் துஷ்யந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்ட தொடர் நாயகனாக ஐங்கரா விளையாட்டுக் கழக அணி வீரர் ஜீவன் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)

## அல்வாய் மனோகரா இறுதிப் போட்டிக்கு

யாழ்ப்பாணம்,நவ.15

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய 9 பேர் பங்கு கொண்ட விலகல் முறையிலான உதைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் 1-0 என்ற கோல்கள் கணக்கில் சக்கோட்டை சென்.சேவியர் அணியை வெற்றி கொண்டது.



கடந்த 13 ஆம் திகதி உதயனின் விளையாட்டுச் செய்தியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டதாக வெளியாகி இருந்தது. அது தவறாகும். (ஒ-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.15

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணியின் விவரம் வருமாறு.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம். (ம-23)

* * *

யாழ்ப்பாணம்,நவ .15

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 13 வயது பிரிவினருக்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றுக்கான ஆட்டத்தில் இன்று செவ்வாய்க் கிழமை ஆட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

* * *

யாழ்ப்பாணம்,நவ.15

இமையாணன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி பிரதேசத்துக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான 16 ஓவர்களைக் கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று இடம் பெறவுள்ள ஆட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து வல்வை நெடியகாடு அணி மோதவுள்ளது. (த-23)

# பழி தீர்த்தது இலங்கை

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 25 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் தரங்க, மஹேல அரைச்சதம் விளாச பந்து வீச்சில் மலிங்க, பெரேரா கலக்க இந்த வெற்றியைப் பதிவு செய்தனர்.

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை, பாகிஸ்தான் இடையேயான ஒரு நாள் தொடர் டுபாயில் நடைபெற்று வருகின்றது. முதலாவது ஒரு நாள் தொடரில் இலங்கை அணி 8 இலக்குகளால் மோசமாகத் தோல்வியடைந்தது. இந்த நிலையில் நேற்று இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் டுபாயில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தரங்க, டில்ஷான் களமிறங்கினர். இருவரும் முதலாவது இலக்குக்காக வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தனர் முதலாவது கட்டாய பவர் பிளேயை பயன்படுத்தி வேகமாக ஓட்டங்கள் குவிக்கப்பட்டது. முதலாவது இலக்குக்காக 56 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் அப்ரிடி இலங்கையின் முதலாவது இலக்கை வீழ்த்தினார். டில்ஷான் 40 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 28 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து இலங்கையின் சரிவு தொடங்கியது. அடுத்து நுழைந்த அனுபவ வீரர் சங்ககார 5, சந்திமால் 15 ஓட்டங்களுடனும் வெளியேற இலங்கை 94 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது. அத்துடன் ஓட்டவிகிதமும் குறைவாகவே இருந்தது.

நான்காவது இலக்குக்காக இணைந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தரங்க மற்றும் ஜெயவர்தன இருவரும் நிதானமாகவும் பொறுப்பாகவும் ஆடி ஓட்டங்களைப் பெற்றனர். தரங்க 90 பந்துகளில் தனது 20 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். துடுப்பாட்ட பவர் பிளேயில் வேகமாக ஓட்டங்களைக் குவித்தார் ஜெயவர்தன.

4 ஆவது இலக்குக்காக 85 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் மீண்டும் அப்ரிடி, தரங்க மஹேல ஜோடியை பிரித்து வைத்தார். தரங்க 120 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஜெயவர்தன .56 பந்துகளில் தனது 61 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இருப்பினும் அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்வரிசையில் ஜீவன் மென்டிஸ், பெரேரா கைகொடுக்க இலங்கை அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை மாத்திரம் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் அஜ்மல் 61 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அப்ரிடி 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி கொடுத்து திண்டாட வைத்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய மொஹமட் ஹபீஸ் மலிங்க வீசிய முதலாவது பந்திலேயே 4 ஓட்டங்கள் விளாசினார். அதன் பின்னர் சிறப்பாக பந்து வீசிய மலிங்க முதலாவது பந்து பரிமாற்றத்தின் மூன்றாவது பந்தில் ஹபீஸை ஆட்டமிழக்கச் செய்தார். தொடர்ந்து நுழைந்த யுனிஸ்கான் அதே பந்து பரிமாற்றத்தின் 5 ஆவது பந்தில் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே இரண்டு இலக்குகளை இழந்து திணறிய பாகிஸ்தான் அணிக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்தது இலங்கை. பாகிஸ்தான் 11 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மூன்றாவது இலக்கினை பறிகொடுத்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இம்ரான் பகாட் 3 ஓட்டங்களுடன் பெரேராவின் பந்து வீச்சில்



ஆட்டமிழந்து வெளியேறினார்.

முன்னணி வீரர்களை முதல் 4 பந்து பரிமாற்றங்களுக்குள் இழந்து திணறியது பாகிஸ்தான். அணித் தலைவர் மிஷ்பா, உமர் அக்மல் இருவரும் இணைந்து அணியை முன்னேற்றிச் சென்றனர். மிஷ்பா தடுத்தாடி மேலதிக இழப்பை தடுப்பதற்கு முயற்சி செய்தார். மறுமுனையில் உமர் அக்மல் மெதுவாக ஓட்டத்தைக் குவிக்க பாகிஸ்தான் 79 பந்துகளில் தனது முதலாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தது. மிக மெதுவாக நகர்ந்த இணைப்பாட்டத்தை இலங்கை அணி 20 ஆவது பந்து பரிமாற்றத்தில் பிரித்தது. 4 ஆவது இலக்குக்காக 64 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் மிஷ்பா 53 பந்துகளில் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ரஷாக் வேகமாக ஓட்டங்களைச் சேர்க்க முனைந்த போதும் 11 ஓட்டங்களுடன் ரன் அவுட்டில் வெளியேற்றப்பட்டார். பாகிஸ்தான் அணி 26.3 பந்து பரிமாற்றங்களில் 102 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது 5 ஆவது இலக்கை இழந்தது.

அதன் பின்னர் களம் புகுந்த இலக்குக்காப்பாளர் சப்ராஸ், உமர் அக்மலுடன் இணைந்து ஓட்டங்களை வேகமாகச் சேர்த்தனர். அருமையாகவே 4 ஓட்டங்கள் பெறப்பட்டது. இருப்பனும் ஒவ்வொரு பந்து பரிமாற்றத்துக்கு 4 ஓட்டங்களுக்கு குறையாமல் பெற்றது இந்த ஜோடி. துடுப்பாட்ட பவர்பிளே 36 ஆவது பந்து பரிமாற்றத்தில் எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஓட்டங்களைக் குவிக்க திணறினாலும் டில்கார வீசிய 38 ஆவது பந்து பரிமாற்றத்தில் உமர் அகமல் அடுத்தடுத்து மூன்று 4 ஓட்டங்களை விளாசினார். அதிரடியான ஓட்டக் குவிப்பின் மூலம் 91 ஓட்டங்களை அக்மல் பெற்றார். இருப்பினும் தொடர் விளாசலை தொடர்ந்து அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார். பாகிஸ்தான் அணி 164 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6 ஆவது இலக்கை இழந்தது. அடுத்த பந்து பரிமாற்றத்தை மலிங்க வீச முதலாவது பந்திலேயே சப்ராஸ் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற பாகிஸ்தானது நிலைமை இக்கட்டானது.

தொடர்ந்துநுழைந்த உமர் குல் ஓட்டமெதனையும் பெறாது வெளியேறினார். பாகிஸ்தான் அணி 39.2 பந்து பரிமாற்றங்களில் 169 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது. 9 ஆவது இலக்குக்காக அப்ரிடி, அஜ்மல் ஜோடி இணைந்து ஆடியது. அப்ரிடி அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க பாகிஸ்தானின் பக்கம் வெற்றி சரியத் தொடங்கியது. இருப்பினும் அவசரத்தினால் ஓட்டத்தை பெற முயன்றார் அப்ரிடி. அழகான களத் தடுப்பன் மூலம் டில்ஷான் ரன் அவுட்டாக்க பாகிஸ்தானின் ஸ்ருதி அடங்கியது. அப்ரிடி 14 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதியில் பாகிஸ்தான் அணி 46.3 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 210 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

பந்து வீச்சில் இலங்கையின் சார்பில் மலிங்க 3, பெரேரா, டில்கார தலா 2 இலக்குகளைச் சரித்தனர். ஆட்ட நாயகனாக இலங்கையின் மலிங்க தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருஅணிகளும் உள்ளன. (15)

# மேலும் சிக்குவார்களா பாகிஸ்தான் வீரர்கள்?

இங்கிலாந்துக்கு எதிராகக் கடந்த ஆண்டு லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த டெஸ்டில் பாகிஸ்தான் வீரர்கள் சல்மான்பட், முகமது ஆசிப், முகமது அமீர் ஆகியோர் ஸ்பொட் பக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. இதை தொடர்ந்து ஐ.சி.சி. இந்த 3 பேரையும் விளையாடத் தடை விதித்தது.

ஸ்பொட் பக்சிங் வழக்கில் சல்மான்பட்டுக்கு 30 மாதமும், முகமது ஆசிப்புக்கு 12 மாதமும், முகமது அமீருக்கு 6 மாதமும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் ஸ்பொட் பக்சிங் சூதாட்டத்தில் பாகிஸ்தான் வீரர்கள் கம்ரான் அக்மல், வகாப் ரியாஸ் ஆகியோருக்கு தொடர்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. சூதாட்ட தரகர் மஜித் இந்த இருவரது பெயரையும் தெரிவித்ததாகவும், அதனால் கம்ரான் அக்மலும், வகாப் ரியாசும் பாகிஸ்தான் அணியில் இருந்து தற்போது நீக்கப்பட்டு இருப்பதாகவும் பத்திரிகைத் தகவல் தெரிவித்தன. இதை இருவரும் மறுத்தனர். அத்தோடு இது தொடர்பாக ஐ.சி.சி. (சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்) நடத்தும் எந்தவித விசாரணையையும் சந்திக்க தயார் என்று கம்ரான் அக்மல், வகாப், ரியாஸ் அறிவித்து உள்ளனர்.

இது தொடர்பாக ரியாஸ் கூறும்போது, பத்திரிகை தகவல் பற்றி நான் கவலைப்படவில்லை. ஸ்பொட் பக்சிங் தொடர்பால் நான் நீக்கப்பட்டதாக கூறப்படுவதை ஏற்க இயலாது. இது தொடர்பாக எந்த விசாரணையும் நான் சந்திக்க தயார் என்றார். கம்ரான் அக்மல் கூறும்போது, எனது சொத்து விவரங்கள் அனைத்தையும் ஐ.சி.சி. ஆராயலாம். எங்கள் இருவர் மீது எந்த தவறும் இல்லாத பட்சத்தில் தான் உலகக் கிண்ணத்தில் ஆடினோம் என்றார்.

# இந்திய அணி சிறப்பான நிலையில்

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் 38 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின், சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சதத்தில் சதம் அடிக்கும் வாய்ப்பை மீண்டும் ஒருமுறை நழுவவிட்டார்.

இந்தியாவுக்கு பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. டில்லியில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி 1-0 என்று முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது டெஸ்ட், கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் டோனி, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவக், கம்பீர் ஜோடி நல்ல தொடக்கம் அளித்தது. முதல் இலக்குக்கு 66 ஓட்டங்கள் சேர்த்த போது சேவக் 33 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அனுபவ வீரர் டிராவிட்டுடன் இணைந்த கம்பீர், டெஸ்ட் அரங்கில் தனது 17 ஆவது அரைசதத்தை பதிவு செய்தார். இவர், 103 பந்தில் 65 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர், சச்சினுடன் இணைந்த டிராவிட் டெஸ்ட் அரங்கில் தனது 62 ஆவது அரைசதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 100 ஆவது சதத்தை எதிர்நோக்கி விளையாடிய சச்சின் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து மீண்டும் ஒருமுறை ஏமாற்றினார். இதன்மூலம் சச்சினின் சதத்தில் சதம் அடிக்கும் கனவு நீடிக்கிறது.

இந்திய அணி தேநீர் இடைவேளை வரை 3 இலக்குக்கு 212 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தொடர்ந்து ஆட்டத்தை தொடர்ந்த இந்தியாவுக்கு டிராவிட் டு சிறப்பாக ஓட்டங்கள் குவித்து அணியை வலுப்படுத்தினார். டிராவிட் சிறப்பாக ஆடி டெஸ்ட் அரங்கில் தனது 36 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். 4 ஆவது இலக்குக்காக 140 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் டிராவிட் ஆட்டமிழந்தார். ஆட்டத்தின் 87 ஆவது பந்து பரிமாற்றத்தில் 119 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டிராவிட் ஆட்டமிழந்தார். அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே 'நைட் வோர்ச்மனாக' களமிறங்கிய இசாந் சர்மா ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். இறுதியில் இந்திய அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 6 இலக்ககுகளை இழந்து 346 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. லக்ஸ்மன் 73 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். யுவராஜ் சிங் மற்றும் டோனி ஆகியோர் துடுப்பாட்ட வரிசையில் இன்று களமிறங்கவுள்ளனர். பந்து வீச்சில் படல் எட்வேட்ஸ், சமி, பறத்வெயிட், றோச், பஷு தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். (15)



# பிரட்மன் வழியில் அஸ்வின்

திருமணமான மறுநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதன் மூலம், தமிழக வீரர் அஸ்வின், ஆஸ்திரேலிய கிரிக்கெட் மேதை சேர் டொனால்ட் பிரட்மன் வரிசையில் தானும் இணைந்துள்ளார்.

1932 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி, சேர் டொனால்ட் பிரட்மன், சிட்னி செயின்ட் போல் ஆலயத்தில் ஜெசியை மணந்தார் மணமான மறுநாளில், கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார்.

அதேவரிசையில், கொல்கத்தா டெஸ்டில் அஸ்வின் பங்கேற்றதன் மூலம், பிரட்மனின் புகழ்மிக்க பட்டியலில் அஸ்வினும் இணைந்துள்ளார்.

தமிழக வீரர்அஸ்வின், தனது பள்ளித் தோழியான பரித்தி நாராயணனை நேற்றுமுன்தினம் திருமணம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை கத்தறின் (மணியம்மா)



இராயேந்திரா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செ.கத்தறின் (மணியம்மா) நேற்று (14.11.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் (வைத்தியர்) அன்பு மனைவியும் றோசலீனின் அன்புச் சகோதரியும் மகிழ்வதி, குணவதி, யேவதி, சாள்ஸ், விமலாவதி ஆகியோரின் அன்புத் தாயும் மரியதாஸ், இராஜநாயகம், சுந்தர், எஸ்தர், ரவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கத் திருப்பலி இன்று (15.11.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

08, இராயேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(10377) (4-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## பலஸ்தீனம் யுனெஸ்கோ உறுப்புரிமையை பெற ஆதரவாக வாக்களித்த அரசுக்கு நன்றி

கொழும்பு, நவ.15

பலஸ்தீனம் யுனெஸ்கோவின் உறுப்புரிமையைப் பெறுவதற்கு ஆதரவாக இலங்கை வாக்களித்தமைக்காக முஸ்லிம்கள் உள்ளிட்ட இலங்கை மக்கள் அனைவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்துள்ளனர் என்று பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா கூறியுள்ளார்.

இது தொடர்பான அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெறப் போராடும் பலஸ்தீனத்திற்கு யுனெஸ்கோ உறுப்புரிமை கிடைத்தது மிக முக்கிய வெற்றியாகும்.

இந்த வெற்றியை ஈட்டியமைக்காக பலஸ்தீனத் தலைவர் மஹ்மூத் அப்பாஸுக்கு இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யுனெஸ்கோ உறுப்புரிமை கிடைத்திருப்பதன் மூலம் உலகில் உள்ள ஏனைய மக்கள் போல் பலஸ்தீன மக்களும் நடத்தப்பட வேண்டும் என்ற உண்மையை உலக நாடுகள் தெரிவித்துள்ளன.

இந்த வெற்றியைக்கொண்டு ஐ.நா வின் ஏனைய முகவர் நிறுவனங்களின் உறுப்புரிமையைப் பெறுவதற்கும் தனது சர்வதேச செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கும் பலஸ்தீனம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நாம் நம்புகிறோம்.

யுனெஸ்கோ உறுப்புரிமை வழங்குவதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளபோதிலும் அதிக நாடுகள் ஆதரவு தெரிவித்ததால் உறுப்புரிமை வழங்குவதை அமெரிக்காவால் தடுத்து நிறுத்த முடியவில்லை- என்று தெரிவிக்கப்படுகின்றது.

## தவறிவிட்டது

சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகுகன் ஆகிய எனது மூன்று புத்தகங்கள் அடங்கிய பையுடன் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரமும் கிளிநொச்சிக்கும் ஆனையிறவுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்க. தொ.பே:0770856121

## தேவை

பண்ணை ஒன்றுக்கு கறவைப் பசு,
ஆடு என்பன தேவை.
தொடர்பு : 0771518354

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சரசாலை வடக்கைச் சேர்ந்த
**கி.பிரசாந்தன்**
யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் "விஞ்ஞானமாணி" பட்டம் பெற்றமையும்



சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த
**ச.ஜனாஸ்கணன்**
(மக்கள் வங்கி சாவகச்சேரி)
கொழும்பு BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (H.N.D.A) பட்டம் பெற்றமையையும் பாராட்டி இவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

**க.ஞானச்சந்திரன் குடும்பம், சரசாலை.**


(சி/2863) (4-6-7)

## 5 ஆம் ஆண்டு நினைவுப் பதிவு

சட்டத்தரணி

### அமரர் நடராசா ரவிராஜ்

*(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யாழ்.மாவட்டம்)*



தமிழ் மண்ணில்
25.06.1962

தமிழன்னை தாளில்
10.11.2006

இமயமாய் உயர்ந்து நின்ற இளவல் இனத்தின்
இடர்களையக் களங்கண்ட தலைவன்
கொலை வெறியர் கொடுமையிலே வீழ்ந்து
குலத் தமிழர் மனம் நிறைந்த தெய்வம்!
அழியா நினைவுகள் எம்மோடு என்றும் வாழ்வாய்! வாழிய!

இராமலிங்கம் வீதி.
சாவகச்சேரி.

துயர் சுமந்து வாடும்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு சர்வதேச
பண்டாரநாயக்க மாநாட்டு
மண்டபத்தில் 7.11.2011
அன்று உயர் தேசிய
கணக்கியல் டிப்ளோமா
(H.N.D.A) பட்டம்பெற்ற
**செல்வன்**
**சொர்ணலிங்கம் சுஜீபன்**
அவர்களை மேலும் பல
பட்டங்களைப் பெற்று
உயர்ந்திடப் பாராட்டி உளமார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா.அப்பா.
அக்கா(சுமதி)
குடும்பம்.அண்ணா
(சுரேஸ்) குடும்பம். தங்கை
(சுதீபா) குடும்பம்.

காளிகோயிலடி,
தாவடி வடக்கு,
தாவடி.

## நீங்கா நினைவலைகள்

**11 ஆம் ஆண்டு நினைவலை** | **03 ஆம் ஆண்டு நினைவலை**



பிறப்பு 27.08.1967 இறப்பு 01.02.2000

பிறப்பு 13.03.1981 இறப்பு 15.11.2008



எங்கள் அருமைச் செல்வங்களே!
இரு கண்ணின் மணிகளே (சுமதி, தீபன்)
நீங்கள் பார்புகழ வாழ்வீர்கள் என்று உங்களை
கிளிகளாய் வளர்த்தோம் பாதியிலே தவிக்கவிட்டு
பறந்து விட்டீர்கள். உங்களை நினைத்தால் உள்ளம்
குமுறுகின்றது. கண்ணீர் வெள்ளத்தில் மாறா துன்ப
சுமையில் நீங்கள் இருவரும் எம்முடன் வாழ்ந்து
கொண்டு உள்ளீர்கள் என எண்ணி உங்கள்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அமரர்**
**சுமதி தெய்வேந்திரம்**


**அமரர்**
**பேரம்பலம்**
**பிரதீபன்**

நி.மு.கந்தரோடை, யாழ்ப்பாணம்.
த.மு. சுமதி அரைக்கும் ஆலை, புதுமுறிப்பு, கிளிநொச்சி.

(10413)(3.6.7)

தகவல்: குடும்பத்தினர்.

## சேவைநலன் பாராட்டும் 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



02.01.1975 அன்று வங்கியில் இணைந்து 14.11.2011 இல் ஓய்வு பெற்று இன்று 15.11.2011 இல் 60 ஆவது அகவையைக் கொண்டாடும் எமது அன்புக்குரிய இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் முகாமையாளர்

**கந்தசாமி ஐயர் இலட்சுமணசர்மா**

அவர்களின் தன்னிகரற்ற 36 வருடகால சேவையை பாராட்டுவதோடு அவரது 60 ஆவது பிறந்த நாளில் அவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
நல்லதம்பி சிவசங்கர்
இலங்கை வங்கி நடமாடும் சேவை
சாவல்கட்டு, ஆனைக்கோட்டை,
கட்டட உரிமையாளர்,
கடல் உணவு கொள்வனவாளர்.

(10461)(1,6)

## பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் நடந்துகொண்டனர்.

இந்தச் சம்பவத்தால் அங்கு சென்ற பயணிகள் மட்டுமன்றி பரந்தன் சந்திப் பகுதி மக்கள் அனைவரும் திகிலடைந்தனர். அங்கு பதற்றம் ஏற்பட்டது. 'தமிழர் பகுதியிலேயே எமக்கு இந்தக் கேடா' என்று அங்கு நின்றவர்கள் வாய் விட்டுக் கூறினர்.

இந்தப் பரபரப்பான சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு பஸ் யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்துள்ளது. அப்போது பரந்தன் சந்தியில் முல்லைத்தீவு வீதிக்கு எதிரே ஏ-9 வீதியில் தென்பகுதி மக்களை ஏற்றி வந்த பஸ் ஒன்று தரித்து நின்றுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து வந்த பஸ் சந்தியால் திரும்பும் போது தரித்து நின்ற தென்பகுதி பஸ் மீது இலேசாக மோதிவிட்டது. இதனால் தரித்து நின்ற பஸ்ஸின் முன்னால் உள்ள பக்கக் கண்ணாடிகளில் ஒன்று சேதமடைந்தது.

இதனால் இரு பஸ்களின் சாரதிகளும், நடத்துனர்களும் தர்க்கத்தில் ஈடுபட்டனர். பின்னர் முல்லைத்தீவில் இருந்து வந்த பஸ்ஸின் நடத்துநரும், சாரதியும் தமது பஸ்ஸின் ஒரு பக்கக் கண்ணாடியை கழற்றித் தருவதாகக் கூறினர். இதனால் இரு தரப்பினர் இடையே சுமுக நிலையொன்று ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பரந்தன் சந்தியில் நின்ற சுமார் 10 இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். இவர்களில் இருவர் மட்டுமே சீருடை அணிந்திருந்தனர். அங்கு வந்த இராணுவத்தினர் தென்பகுதியிலிருந்து வந்த பஸ்ஸை செல்லுமாறு கூறி அனுப்பி வைத்தனர்.

அதன் பின்னர் முல்லைத்தீவு பஸ்ஸின் சாரதி, நடத்துநர், உரிமையாளர் ஆகியோரைக் கலைத்துக் கலைத்துத் தாக்கத் தொடங்கினர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. இராணுவத்தினர் சப்பாத்துக்கால்களால் மோசமாகத் தாக்கியதில் பஸ் நடத்துநரான 33 வயதுடைய கு.சுபாஸ்கரனின் காலில் வெடிப்பு ஏற்பட்டுக் காயங்களுக்கு ஆளாகி உள்ளார்.

மேலும் சாரதி எஸ். கலியுகவாணன் (வயது 34), பஸ் உரிமையாளர் நா.சற்குணராசா ஆகியோரும் கடுமையான அடிகாயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இதுபற்றி கேள்வியுற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார். இதுதொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

''சிங்களம், தமிழ் என வேறுபடுத்தி இவ்விடத்தில் இராணுவம் தலையிட வேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் ஒற்றுமையைக் கட்டியெழுப்பச்சென்றவர்களை மிருகத்தனமாக அடிக்க வேண்டிய தேவையே இல்லை. பொலிஸாரே இந்த விடயத்தைக் கையாள வேண்டும்'' -என்றார்.

சிறிது நேரத்தில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் பஸ்ஸை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர். மற்றும் பேருந்து சாரதி, நடத்துநர், உரிமையாளர் ஆகியோரின் வாக்கு மூலங்களையும் பதிவுசெய்த பின்னர் அவர்களை விடுவித்துள்ளனர்.

(ஒ-க-426)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ங்களில் காவலரண் அமைப்பது குறித்து ஏற்கனவே பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(த-14)

## சுமங்கலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி பிரேம்சங்கரிடம் முன்னிலைப் படுத்தினர்.

அவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி, அவர்களுக்கு பாலியல் நோய்கள் உள்ளனவா என்பது குறித்துப் பரிசோதனை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் பணித்தார்.

பொலிஸ் சோதனை நடவடிக்கையின்போது விடுதியில் தங்கியிருந்த மேலும் 8 பேர் (4 சோடிகள்) கணவன் - மனைவி என உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் உடனடியாக விடுவிக்கப்பட்டனர். அத்தகைய உறவு முறை எதனையும் நிரூபிக்க முடியாத மூன்று சோடிகளுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவர்களில் ஆண்கள் மூவரும் குருநகர், ஊர்காவற்றுறை, மட்டுவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். பெண்கள் மூவரும் அச்சுவேலி, பரந்தன், வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் மு.ரெமீடியஸ் மற்றும் பா.தவபாலன் ஆகியோர் ஆஜராகினர்.

பொலிஸாரின் அதிரடிச் சோதனைக்குள் சிக்கிய சுமங்கலி விடுதி, யாழ். மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வந்தபோதும், அது ஒரு விடுதியாக மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்று ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

மாநகர சபைக்குள் இயங்கும் பல விடுதிகள் பதிவு செய்யப்படாதவையாக இருக்கின்ற போதும், குடாநாட்டுக்கு வரும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களுக்கான தங்குமிட வசதிப் பற்றாக்குறை காரணமாக, அவற்றின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். எனினும் இத்தகைய விடுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று முறைப்பாடு கிடைத்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்..

(ஊ-4)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பாக எழுத்துமூலம் அமைச்சர் உறுதிமொழி வழங்கினார் என்று அவர் தெரிவித்தார்.

உறுதியளிக்கப்பட்டபடி இன்னும் ஒரு மாதத்துக்குள் கோரிக்கைக்கு உரிய தீர்வு முன்வைக்கப்படாத பட்சத்தில் நிச்சயமாகப் போராட்டத்தில் குதிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பஸ் கட்டணத்தை அதிகரிக்காததால் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை நேற்று நள்ளிரவு முதல் மேற்கொள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனிடையே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு தாய்ச் சங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய கைவிடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் எஸ்.கெங்காதரன் நேற்றுத் தெரிவித்தார்.

(ஒ-சி)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானித்துள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நோர்வே வெளியிட்ட அறிக்கையில் சமாதான முயற்சியில் இலங்கையின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் அம்பலமானதால், பெரும் சங்கடமான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## மரண அறிவித்தல்



### திருமதி. பொன்னம்பலம் சிதம்பரம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் சிதம்பரம் நேற்று (14.11.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், இரங்கநாதன், காலஞ்சென்ற இந்திராணி மற்றும் இராமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்மனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ.இரங்கநாதன்.
பொ.இராமநாதன்.

தம்பாப்புலம்,
அளவெட்டி.

## கண்ணீர்க் காணிக்கை

### திருமதி கந்தையா சிதம்பரம்



கடந்த (11.11.2011) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தெய்வம் திருமதி கந்தையா சிதம்பரம் அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

சிவகுமரன் நிசாந்தி (பேர்த்தி)
ரகஷியன் }
தஸ்மியா } பூட்டப்பிள்ளைகள்

சுன்னாகம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 19 * 02 * 1923 |  | 17 * 10 * 2011 |

### அமரர். நன்னித்தம்பி அருளம்பலம்

கடந்த 17.10.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.11.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 * 01 * 1944 |  | 27 * 10 * 2010 |

திதி: 15.11.2011

### அமரர் தம்பிப்பிள்ளை நாகேந்திரம்

(ஓய்வுபெற்ற வருமானவரி மேற்பார்வையாளர்)

வருடம் ஒன்று ஆனபோதும் தினமும் உங்கள்
நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றோம்.
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றென்றும் எம் நெஞ்சோடிருக்கும்
எம் வளமான வாழ்வுக்கு வளம் சேர்த்து ஒளியூட்டிய எங்கள் தெய்வமே..
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அப்பா என்றழைத்து
மகிழ நீங்கள் இல்லை
உடலால் எம்மைப் பிரிந்து ஓராண்டு ஆனாலும்
மறவாது அப்பா உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

டச்சு வீதி, உடுவில்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியமும்



### திருமதி பரஞ்சோதிநாதன் சிவமலர்

கடந்த (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பரஞ்சோதிநாதன் சிவமலர் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (15.11.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

காளி கோயிலடி,
ஏழாலை மத்தி, ஏழாலை.

நடராசா
குடும்பத்தினர்.

## தேவை

யாழ். நகரில் ஸ்ருடியோ ஒன்றுக்கு
1.Graphic Desingner (photoshop)
2.Video Editing

வேலை அனுபவமுள்ளவர்கள் ஆண், பெண் (இருபாலாரும்) நேரில் வரவும்.

திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

அரவிந் ஸ்ருடியோ
309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 2190
077 7162339

## சேவை நலன் பாராட்டும் 60ஆவது பிறந்ததின வாழ்த்தும்



இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் முகாமையாளராகக் கடமையாற்றி இளைப்பாறும்

### கந்தசாமி ஐயர் இலட்சுமணசர்மா

அவர்கள் இன்று தமது 60 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
அவரை நாமும் பாராட்டுவதுடன் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்..

வாழ்த்துவோர்: சாவக்கட்டு மக்கள்

## மரண அறிவித்தல்கள்

**கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார்**



**நல்ல போராட்டத்தைப் போராடினேன்**
**ஓட்டத்தை முடித்தேன் 2தீமோ.4:7**

### போதகர் பத்திநாதர் ஜோன்சன்

டேவிட் றோட், குருநகர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஜீவபாதை மிசனரி திருச்சபையின் தலைமைப் போதகருமாகிய பத்திநாதர் ஜோண்சன் 14.11.2011 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார் என்பதை உற்றார், உறவினர், இறைமக்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் இவரது நல்லடக்க ஆராதனை விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இல.10, நதிறால் வீதி,
யாழ்ப்பாணம்.

*தகவல்:*
குடும்பத்தினர்.

---

### தம்பு பதுமை

பொலிகண்டி ஒதியாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பதுமை நேற்று(14.11.2011) திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்புவின் அன்பு மனைவியும், இராசகாந்தம், கணேசன்(ஓய்வுபெற்ற தபாலதிபர்), கமலாதேவி, இராசசேகரன்(ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவஞானம்(C.T.B), மணிமேகலை, பீதாம்பரம்(ஓய்வுபெற்ற லிகிதர்), தவேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் விமல்ராஜ்(மருந்தாளர்), சிவகாந்தன்(ஆசிரியர்), சிவவாசன்(தபால் உத்தியோகத்தர்), ரங்கா, சுரேகா(உப தபாலதிபர்), சபேசன், இராகுலன், ஜெகன்(ஆசிரியர்), ஜெகப்பிரியா(ஆசிரியை), பிரகலா, பிரசாந்தி, நிருத்தனா, சயாந்தன், ஆரூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2011) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் எள்ளம் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொலிகண்டி.

*தகவல்:*
த.கணேசன்(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

---

### ஞானப்பிரகாசம் அருளானந்தம்

(சமாதான நீதிவான், முன்னாள் பணியாளர் யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம், கிறூஸ் & கரித்தாஸ், யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அருளானந்தம் நேற்று (14.11.2011) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் ஞானப்பிரகாசம் - மேரி அக்னஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான சின்னப்பு - எலின் தம்பதியரின் அன்பு மருமகனும், தொம்மினிக்கம்மா மாகிறேட்டின் அன்புக் கணவரும், நோயல் மனோகரன், ரவீந்திரன், மியூறியல் மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகஸ்ரின், காலம் சென்றவர்களான விக்ரர், சிறில் மற்றும் பேணாட், பற்றிக், செல்வரட்ணம், நவரட்ணம், தர்மரட்ணம், மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேளின், வசந்தா ஆகியோரின் அன்பு மாமனும், மக்சுவல், சுஜீவன், லிபியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*315, பாங்சால் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

---

### திருமதி வைத்திலிங்கம் செல்லம்மா



புளியங்கூடல், மகாமாரி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலி, கலாசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் செல்லம்மா நேற்று (14.11.2011) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - சிவகாமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற வெ.வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், சிலோன் மணி, விஜயலட்சுமி, மங்களேஸ்வரி (றஞ்சு), சிவராஜா (ஜேர்மனி), செல்வராணி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயும், சுசீலா, அரியராசா, பரமலிங்கம், மகாலிங்கம், ராஜலட்சுமி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயகாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் அன்னபூரணம், சுப்பிரமணியம் (சுவிஸ்), சிவபாதசுந்தரம் (பிறின்ஸ் சைவ உணவகம், வவுனியா, பிறின்ஸ் மருந்தகம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் காந்தமலர் (திட்டமிடல் உதவிப்பணிப்பளார், நல்லூர் - ஓய்வுநிலை), காந்திமதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், நாகராசா மற்றும் தங்கச்சியம்மா, திலகவதி (தயா), கனகரட்ணம் (பட்டதாரி மொழிபெயர்ப்பாளர், யாழ்.பல்கலைக்கழகம், ஓய்வுநிலை, வேலணை பிரதேசசபை உறுப்பினர்), சந்திரசேகரம் ஆகியோரின் மைத்துனியும், ஜெயசுதா - மயூரன் (சுதா டிஸ்ரிபியூற்றஸ்); கோமலதா, லோககீதா (கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), தேவநாதா (முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீஸ்வரன் (பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), மயூரன் - தமிழ்வாணி, கனிஸ்ரா - கமால், காண்டீபன் (ஜேர்மனி), விதுஷினி, துளசிகா (முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), செந்தூரன் (ஜேர்மனி), கம்சிகா (பிரான்ஸ்), சிந்தூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், டனுஷ்ரிகன், கபிலாஸ், சங்கீதன், தனுஸ்கா, கதுஷன், லக்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (15.11.2011) திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

---

## இலங்கை அரசாங்கத்தினால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் பல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு, வீடமைப்புத் திட்டம் போன்றவற்றுக்கு இந்தியா உதவியளித்து வருகிறது. இலங்கை அரசாங்கத்தின் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமென நம்புகின்றேன்.

**13 ஆவது திருத்தச்சட்டத்தில்**
**இந்தியா தலையிட முடியாது**

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் என்பது இலங்கை அரசால் கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தம். அதில் இந்தியா தலையிட முடியாது.

தெற்காசியப்பிராந்தியத்தின் பூகோள அரசியலில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது. இலங்கையிலுள்ள சகல இன, மத மக்களையும் ஒன்றிணைக்க வேண்டும். இதற்காக நாம் தொடர்ந்து பாடுபட வேண்டும். உறுதியான, நிலைத்து நிற்கக் கூடிய ஒரு சமாதானம் உருவாக்கப்பட வேண்டும்.

இந்தியா எமது உறவினர், சீனா எங்களுடைய நண்பர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் என்று சபையிலிருந்து ஒருவர் கேட்டதற்கு பதிலளித்த ஷியாம்ஷரன்-

அதைக் குறித்து எங்களுக்கும் பிரச்சினையில்லை. அவர் கூறியபடியே இருந்து விட்டுப் போகட்டும்.

நாங்கள் சீனாவுக்கு ஏட்டிக்குப் போட்டியாக முதலீடுகளையோ, அபிவிருத்தித் திட்டங்களையோ முன்னெடுக்க மாட்டோம். எம்மிடம் பலமும் உண்டு; சில பலவீனங்களும் உள்ளன. அதே போன்று சீனாவிடமும் சில பலங்களும் உள்ளன; பலவீனங்களும் உள்ளன.

எனினும் சீனாவுடனான எல்லைத் தகராறு ஒருபிரச்சினை தான் - என்றார்.

தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையேயான பிரச்சினை குறித்துக் கேட்டதற்கு

சம்பந்தப்பட்ட தமிழக, இலங்கை மீனவர்களே அதைப்பேசித் தீர்த்துக் கொள்வது சிறந்தது என்றார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி விசேட விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரத்தினம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். யாழ்.பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு இந்தியா நிதியுதவியளிக்க வேண்டுமென துணைவேந்தர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஷியாம் சரன் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கு இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களும், பொறியியல் பீடத்துக்கு இரண்டு பில்லியன் டொலர்களும் இந்தியா வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

(அ-211)

---

## இலங்கை தனிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மியன்மாரை மேற்குலக நாடுகள் ஒதுக்கி தனிமைப்படுத்தியுள்ளதனைப் போன்று இலங்கை தனிமைப்படுத்தப்படுவதனை அமெரிக்கா விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி இந்த குறிப்பு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.மிக நீண்ட காலம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பிரிவினைவாத யுத்தம் நடைபெற்றதாகவும், யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தொலைநோக்குத் திட்டம் இலங்கை அரசிடம் காணப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதே என அவர் குறிப்பிட்டுள்ளதாகத் விக்கிலீக்ஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

---

## இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.இந்த நிகழ்வில் பிரதமரும் பௌத்தசாசன அமைச்சருமான தி.மு. ஜயரத்ன , பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வணிக வர்த்தக அமைச்சர் றிஷாட் பதியுதீன், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் யாழ். மாவட்டத்தின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வு ஏற்பாடு தொடர்பாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூறியதாவது:-

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் யுத்தத்தினால் பாதிப்படைந்த இந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களுக்கே நிதி வழங்கப்படவுள்ளது.

இந்தத் தெரிவு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 140 ஆலயங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 42 ஆலயங்களுக்குமே இந்த நிதியுதவிக் காசோலை வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு ஆலயத்துக்கும் தலா ஒருலட்சம் வீதம் வழங்கப்படவுள்ளது. (ஒ-15)

---

## இரண்டாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பார்.இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துகொள்ளவுள்ளார். அன்றையதினம் பருத்தித்துறையில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடத் தொகுதியையும் இவர்கள் திறந்து வைக்கவுள்ளனர்.

இலங்கையில் தற்போது ஒரேயொரு சிறுவர் நீதிமன்றம் மட்டுமே இயங்கிவருகிறது. அது பம்பலப்பிட்டியில் இயங்கி பின்னர் பத்தரமுல்லைக்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கிவருகிறது. தற்போது இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் குருநகரில் திறந்து வைக்கப்படுகிறது. குருநகரில் உள்ள பழைய நீதிமன்ற வளாகத்தினுள் இந்த நீதிமன்றம் இயங்கவுள்ளது.

(ஒ-4)

---

## ஐந்தாம் வருட நினைவில்



காவியமாய் நெஞ்சில் ஓவியமாய்
*தென்மராட்சி மண்ணின் மைந்தன்*

### அமரர் நடராஜா இரவிராஜ்

(முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி யாழ். மாநகர சபை முன்னாள் மேயர்)

நிதி: பஞ்சாமி

**தாய்மடியில்:**
**25.06.1962**

**தமிழன்னை**
**மடியில்:**
**10.11.2006**

அன்பில் அறிவில் ஆளுமை அதனில்
அகிலம் புகழ் இளைஞன்
துன்பம் நீங்கித் தமிழர் வாழ
துடித்து நிமிர் தலைவன்
இன்னல் தந்து இதயம் கலங்க
எம்மை விட்டு அகன்றான்
பொன்வாய் அவன்தன் நாமம் வாழும்
புகழ் பல நூறாண்டே

**மனம் நெகிழ்ந்து அஞ்சலிப்போர்**
**சு.கஜன் (பாப்பன்) ஜேர்மனி.**

---

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிப்பிள்ளை அன்னபூரணம்

இலகடி, அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை அன்னபூரணம் நேற்று (14.11.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், கல்லுவத்தையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - இளையாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், லண்டனில் வதியும் கஜேந்திரன், நிவேதா, ரமணன், மைதிலி, தர்மினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், நிரோஜினி, அகிலதாஸ், சிவகுமார், தயாபரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (15.11.2011) செவ்வாயக்கிழமை பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கரும்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலகடி,*
*அல்வாய் கிழக்கு.*

*தகவல்:*
வே.தம்பிப்பிள்ளை (கண்ணன்)

---

### ஞானேந்திரம் பசில் ஞானராஜ்



யாழ்ப்பாணம் குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேந்திரம் பசில் ஞானராஜ் 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானேந்திரம்- பொன்னுக்கிளி தம்பதியரின் அன்பு மகனும், சந்திராவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- பூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் அனுஷா-(யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆசிரியை), சாமினி(ஜேர்மனி), தர்சினி, காலஞ்சென்ற பாமினி மற்றும், பகிரதன் (லண்டன்), லக்னா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சி, ரவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிறஞ்சன், றோய்(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான அமலநேசன், கஜன் மற்றும்,கிருசா, ஜோச்சி, அன்ரோ, மரிக்சன் ஆகியோரின் பாசமிகு மாமனும், டினோ, சஞ்சு, கேஜி,றொசாலி,றொசாரா, றொசாணி, சுவிற்றா, சியாரா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற செல்வராசா,மற்றும் தேவராசா, சறோ, ஆனந்தன்(கனடா), தனசோதி(யாழ்.சென் அன்ரனீஸ் பாடசாலை), றெஜி(கனடா),விஜி, பத்மா, ராணி, ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.11.2011) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1 கரையூர் வீதி,
ஈச்சமோட்டை.

*தகவல்:*
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.